மகளிர் சிறப்பிதழ்

கல்கி

KALKI 14.1.90 ரூ. 2.50



ஷபானா ஆஸ்மி:

எளியோர் சார்பில் ஒரு போராட்டம்!


அழகுமிகு
கோ-ஆப்டெக்ஸ்.
அதை
அணிந்திருப்பது
யாரென்று
பாருங்கள்!
அதி நவீன பட்டு வகைகள்
Meenakshi Seshadri
அழகான நிறங்கள். நயமான நெசவு. நேர்த்தியான கோபுர பார்டர். பொலிவுடன் கூடிய உங்கள் புதிய தோற்றத்தில் நீங்கள் பெருமிதம் கொண்டு மகிழ்வீர்கள் — தமிழ்நாடு கைத்தறித் துணிகளில்...
பருத்தி, பாலியெஸ்டர், பட்டுப்புடவைகள் / சர்ட்டிங் / சூட்டிங் / திரைச்சீலைத் துணிகள் / படுக்கை விரிப்புகள் / துவாலைகள் / வேட்டிகள் / லுங்கிகள்.
100% தூய பட்டு,
அசல் சரிகை.
20%
தள்ளுபடி
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனைக்
கைத்தறி வகைகள்
DIPR 1089/MS/89/HTA

மதிப்பிற்குரிய பெண்மணி

அன்னை போல் வந்த அருள்மேரி

கடலாடி (இராமநாதபுரம் மாவட்டம்) ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் இருந்தும் மாணவர்கள் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வந்தது. காரணம்: இப் பள்ளியின் கல்வித்தரம் திருப்திகரமாய் இல்லை எனப் பெற்றோர்கள் கருதியமைதான். இதனால் ஐந்து கி.மீ. தொலைவில் உள்ள கடலாடி ஆரம்பப் பள்ளிக்குச் சிறுவர்களை அனுப்பிப் படிக்க வைத்தனர். போக வரப் பத்து கி.மீ. தூரம் சிறு பிள்ளைகள் நடக்க வேண்டியிருந்தது. இந்நிலையில்தான் ஊராட்சி ஒன்றியப் பள்ளியின் உதவி ஆசிரியையாகப் பணியில் சேர்ந்தார் அருள்மேரி செல்வராணி. இவர் வருகைக்குப்பின் பள்ளியின் கல்வித்தரம்



வெகு சிறப்பாக இருக்கிறது. குழந்தைகள் கஷ்டப்பட்டு அசலூர் சென்று படிக்கக் கூடாது என்று மிகவும் பாடுபட்டார் அருள்மேரி. பேருந்து வசதியோ, தண்ணீர் வசதியோ இல்லாத இவ்வூரில் மின்வசதி இல்லாத வீட்டில் தங்கி, தம் அரும்பணியை ஆற்றி வருகிறார் இந்த மதிப்பிற்குரிய பெண்மணி.

கடலாடி. கரு. முத்துராமலிங்கம்.

அடைக்கலம் தந்தவள்

பிரம்மசாரி இளைஞர்களான நாங்கள் ஹைதராபாத்தில் ஒரே நிறுவனத்தில் வேலை பார்த்து, ஒரே வீட்டில் வசித்து வந்தோம். சுற்றிலும் வசித்தவர்களுக்குத் தமிழர்களான எங்கள் மீது காழ்ப்புணர்ச்சி. ஏதோ ஒரு சிறு மனஸ்தாபத்தைப் பெரிதுபடுத்தி, எங்கள் வீட்டுக்குள் நுழைந்து பெட்டி படுக்கைகளையெல்லாம் தெருவில் எடுத்துப் போட்டு விட்டார் வீட்டுக்காரர். கல்யாணமாகாத இளைஞர்களுக்கு வீடு கிடைப்பதே கஷ்டம். கிடைத்ததையும் நள்ளிரவில் இழந்து, நடுத் தெருவில் நின்றோம். அப்போதுதான் யாரும் எதிர்பாராத வகையில் ஒரு காரியம் செய்தாள் எங்கள் வீட்டு வேலைக்காரி பூச்சம்மா. எங்கள் சாமான்களையெல்லாம் தன் வீட்டில் கொண்டு போய் வைத்து எங்களுக்கு அடைக்கலம் தந்தாள். பின்னால் இதனால் தனக்குப் பிரச்னைகள் ஏற்படக் கூடும் என அறிந்தும் அவள் அன்று செய்த உதவியால் எங்கள் மதிப்பில் வானளாவ உயர்ந்து விட்டாள்.

ஹைதராபாத். எஸ். சிவகுமார்.

வணக்கத்துக்குரிய மாமியார்

முஸ்லிமான நான் ஒரு ஹிந்துப் பெண்



ணைக் காதலித்தேன். அவளும் என்னை நேசித்தாள். உலகமே எதிர்த்த எங்கள் காதலை ஆதரித்த ஒரே பெண்மணி — திருமதி சரஸ்வதி — எனது மாமியார். கணவனை இழந்து தங்கை குடும்பத்தின் ஆதரவில் வாழ்ந்து வந்தார். எங்கள் காதல் விஷயப்

பற்றி அக் குடும்பத்தினருக்குத் தெரிந்ததும் அவரை இரவோடு இரவாகக் குழந்தைகளுடன் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டனர். என் மனைவிக்கு இரண்டு தங்கைகள் உண்டு. அவர்கள் எதிர்காலத்தைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் எங்கள் திருமணத்தை நடத்தி வைத்தார் திருமதி



சரஸ்வதி. தற்போது தாமே பால் வியாபாரம் செய்து குடும்பத்தைப் பேணி வருகிறார். தங்கை வீட்டு வாசற்படியை மிதிப்பதில்லை. எங்களுக்கு வாழ்வளித்த அவரைத் தினமும் வணக்கத்துடன் நினைத்துக் கொள்கிறேன்.

சென்னை — 41. அ. ஷாகுல் ஹமீது.

தட்டிக் கேட்டுச் சாதித்தவர்

வடபழனி பஸ் நிலையத்தில், திருவேற்காடு செல்லும் பஸ்ஸில் ஏறி அமர்ந்து காத்திருந்தோம் காத்திருந்தோம்... பஸ் புறப்படும் வழியாயில்லை. பிரயாணிகள் எல்லோருமே தவித்தார்களே யொழிய யாரும் செயலில் இறங்கவில்லை. அப்போது அந்த பஸ்ஸில் அமர்ந்திருந்த பெண்மணி ஒருவர் தாமே முன்சென்று பஸ் கிளம்பாமைக்குக் காரணம் என்ன என்று சில டிரைவர்களிடம் விசாரித்தார். அவர்கள் கண்டக்டர் வராததுதான் காரணம் என்று சொல்ல, வந்ததே அவருக்குக் கோபம்! ஒரு பிடி பிடித்து விட்டார் அந்த டிரைவர்களை. அவர்கள் தங்களால் எதுவும் செய்ய முடியாது என்றும் மேலதிகாரிகள்தான் உதவ முடியும் என்றும் கூறிய தன் பேரில், அந்த அம்மையார் அம்பாகப் புறப்பட்டு அதிகாரிகள் அறைக்குச் சென்றார். அங்கு என்ன சொன்னாரோ, ஏது பேசினாரோ, அடுத்த ஐந்தாவது நிமிடம், அதிகாரி ஒருவர் டிரைவர் கண்டக்டர் இருவரையும் பஸ்ஸினுள் கொண்டு வந்து தள்ளாத குறையாக ஏற்றி விட, வண்டியும் புறப்பட்டது. தார்மீக தைரியத்துடன் தட்டிக் கேட்டுச் சாதித்த அந்தப் பெண்ணை நான் மிக உயர்வாய் மதிக்கிறேன்.

தஞ்சாவூர். மு. கருப்பையா.

தன்னலமற்ற பல்துறை நிபுணர்

பதினைந்து வருடங்களுக்கு முன், உறங்கிக் கிடந்த ஒரு பன்னாட்டுப் பயணக் கம்பெனியைத் தட்டி எழுப்பி வளரச் செய்த என் முயற்சியில் எனக்கு உறுதுணையாய் இருந்தவர்; நேரம் காலம் பார்க்காமல் பயணிகளின் சேவையைக் கவனித்தவர்; டீ.வி. அறிமுகமான புதிதில் ஆங்கிலச் செய்தி வாசித்தும் மதராஸ் பிளேயர்ஸ் குழுவில் இடம்பெற்று ஆங்கில மேடை நாடகங்களில் திறமையுடன் நடித்தும் பொது மக்களுக்கு அறிமுகமானவர்; சுய இயக்கமற்ற, ஊனமுற்ற தமது அன்புச் சகோதரியைப் பராமரிக்கும் பொருட்டு தாம் திருமணமே செய்து கொள்ளாமல் இருப்பவர்... அவர்தான் தாமஸ் குக் நிறுவனத்தில் பணியாற்றும் விசாலம் ஏகாம்பரம் — என் மதிப்பில் மிக உயர்ந்த பெண்மணி.

சென்னை — 28. வி. சேதுராமன்.



அஞ்சா நெஞ்சினள்

பல்லவன் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போதுதான் நான் அந்த மதிப்பிற்குரிய பெண்மணியைச் சந்தித்தேன்... குடிகாரன் ஒருவன் இளம் பெண் ஒருத்தியின் அருகில் வந்து அமர்ந்து கொண்டு விரசமாகப் பாடியும் பேசியும் அவளை வதைத்துக் கொண்டிருந்தான். கண்டக்டரும் டிரைவரும் இதர பிரயாணிகளும் — ஆண்கள் உள்பட — வேடிக்கை பார்த்தார்களேயொழிய ஒன்றும் செய்யவில்லை. அப்பொழுது பஸ்ஸில் ஏறிய கூலிக்காரப் பெண் ஒருத்தி, இந்தக் கொடுமையைச் சகியாமல், அவனைக் கண்டித்தாள். பலனில்லை. குடிகாரன் அவளையும் ஏசினான். அப் பெண் கண்டக்டரிடம் சென்று வண்டியை நிறுத்தச் செய்தாள்.

யூரேகா ஃபோர்ப்ஸ் நிறுவனத்திலிருந்து வரும் நண்பர், உங்கள் வீட்டிலுள்ள தூசையும் அழுக்கையும் மிக எளிதாக அகற்றும் வழியை செய்து காட்டப் போகிறார்.



வரும் நாட்கள் ஏதேனும் ஒன்றில் யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, அடையாளச் சீட்டுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வார்.

அவர் பேச்சில் தன்னம்பிக்கை தொனிக்கும் — இதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில், இவர் இந்தியாவிலேயே இது போன்ற நிறுவனங்களில் மிகப் பெரியதும் வெற்றிவாகை சூடியதுமாகிய விற்பனை நிறுவனத்தின் அங்கத்தினர் ஆவார். இந்நிறுவனம் விற்பனைக்குப்பின் நம்பகமான சேவை புரியும் பின்னணி கொண்டது.

தூசு, சூழ்நிலை அசுத்தம், அசுத்தமான நீர் மற்றும் வீட்டு வேலைகளில் உதவியின்மை போன்ற இன்றைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கென நவீன வீட்டுபயோக சாதனங்களை அவர் உங்களுக்கு அறிமுகப்படுத்துவார்.




செயல்முறை விளக்கத்திற்கு இவரிடம் இரண்டு இணையற்ற தயாரிப்புகள் உள்ளன. யூரோக்ளீன்: அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம். இது வேக்கம் கிளீனரை விடச் சிறந்தது. மற்றும் அக்வாகார்ட்: நீர் பைப்பில் பொருத்தக்கூடிய வாட்டர் ஃபில்டர் கம்-ப்யூரிஃபையர்.

யூரோக்ளீன்: உங்கள் வீட்டில் உள்ள தூசு மற்றும் சிறு துரும்புகளையும்கூட சிரமமின்றி எளிதில் அகற்றுகிறது. கண்ணிற்கு புலப்படாத தூசுகள்கூட அகன்றுவிடும். **அக்வாகார்ட்:** ஒரு ஸ்விட்சை இயக்கி, குழாயைத் திறந்தால் கிருமிகள் அற்ற, பாதுகாப்பான சுத்தமான குடிநீரை உங்கள் குழாயிலேயே நீங்கள் பெறலாம்.

உங்கள் குடும்பத்திற்கு சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான நவீன முறைகளை இத்தயாரிப்புகள் எவ்விதம் வழங்குகின்றன என்பதை யூரேகா ஃபோர்ப்ஸ் சேல்ஸ்மேன் உங்கள் வீட்டிலேயே உபயோகித்து விளக்குவார். அதன் மூலம் உங்களைச் சுற்றிலும் சுத்தமும், சுகாதாரமும் நிறைந்த உலகம் உருவாகும்.

அவர் உங்கள் வீட்டிற்கு வரும் நாள்வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். விரைவில் வருகை புரிய நீங்களும் யூரேகா ஃபோர்ப்ஸ் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றில் தொடர்பு கொள்ளுங்கள், அல்லது இம்முகவரிக்கு எழுதுங்கள்: யூரேகா ஃபோர்ப்ஸ், லிமிடெட், பி.ஓ. பாக்ஸ் 936, ஜி.பி.ஓ. பம்பாய்-400 001.



யூரோக்ளீன்	அக்வாகார்ட்	யூரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்
அனைத்துபயோக சுத்தம் செய்யும் சாதனம் — வேக்கம் க்ளீனரை விட சிறந்தது.	நீர் பைப்பில் பொருத்தக் கூடிய வாட்டர் ஃபில்டர் கம் ப்யூரிஃபயர்.	நவீன முறை சுத்தம் சுகாதாரத்தின் முன்னோடிகள்.

everest/89/EFL/188 R1-tm

தன்னுடன் வந்திருந்த மற்றொரு பெண்ணை உதவிக்கு வைத்துக் கொண்டு, அந்தக் குடிகாரனைத் தரதரவென்று இழுத்து, வண்டியிலிருந்து இறக்கி, தெருவில் விட்டாள். அப் பெண்கள் ஏறிக் கொள்ள, பஸ் தன் ரூட்டில் தொடர்ந்தது.

சென்னை — 87. வி. சுமதி.

குடும்பத்தேரின் சாரதி

நான் குறிப்பிடும் பெண்மணி குடத்துள் விளக்காகச் சுடர் விடுபவள் — ஏழைக் குடும்பம் — நிறையக் குழந்தைகள். அப்பாவுக்கும் மூத்த அண்ணனுக்கும் வேலை போய் விட்டது. அந்த மதிப்பிற்குரிய பெண் மனம் தளராமல், இருவரையும் சேர்ந்து கடை வைக்கும்படி யோசனை சொல்லி உதவினாள். தாயாருக்கு வந்த நோய் இன்னதென்று கூற முடியாமல் மருத்துவர்கள் குழம்பிய போது, தானே அன்னையைச் சென்னைக்கு அழைத்துச் சென்று தக்க சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தாள். தாயார் காலமாகி விட, மனமுடைந்து தளர்ந்து விடாமல் இளம் வயதிலேயே எல்லாப் பொறுப்புகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு குடும்பத்தேரைச் சீராக நடத்திக் கொண்டிருக்கிறாள். இவ்வளவையும் 29 வயதைக் கடக்கும் முன் செய்து விட்டு, தனக்குக் கல்யாணமானால் எங்கே தங்கைகள் திண்டாடுவார்களோ என்று திருமணம் செய்து கொள்ளாமலே இருக்கிறாள். இந்த மதிப்பிற்குரிய பெண்மணி எனது அக்கா பிரேமா.

புதுவை — 7. ஆ. விஜயா.

மருத்துவச்சி முத்தம்மா

என் மதிப்பில் உயர்ந்த பெண்மணி எங்கள் கிராமத்து மருத்துவச்சி முத்தம்மா. கணவனால் கைவிடப்பட்ட நடுத்தர வயது மாது. குழந்தைகள் கிடையாது அவளுக்கு: ஆனால் ஊரில் எல்லாப் பெண்களின் குழந்தைகளையும் உலகில் கொண்டு சேர்க்க உதவுவாள். ஏழை, பணக்காரர் என்று வித்தியாசம் பார்க்காமல் எல்லா நோயாளிகளுக்கும் உதவுவாள். கொடுத்த காசை வாங்கிக் கொள்வாள். ஏழைப் பெண் ஒருத்திக்குப் பிரசவம் சிக்கலாகி, டவுன் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய நிலைமை உருவாகி விட்டது. பணமின்றி அந்தக் கர்ப்பிணியின் குடும்பம் தவித்த போது, முத்தம்மா தன் காதில் கிடந்த பாம்படத்தைக் கழற்றி, அடகு வைத்து, அவர்களுக்கு உதவி செய்தாள்.

பெங்களூர். என். கே. ஈசுவரி.

பெண் சிங்கம்!

தாலி கட்டியவனுக்கு வேறொரு பெண்ணுடன் தகாத உறவு இருப்பதை அறிந்து, அவனைத் திருத்த முயன்று முடியாமல், ஒரு பெண் குழந்தையைப் பெற்ற பிறகு அவனைப் பிரிந்து வெளியேறினாள் அவள். உழைப்பை மறுமணம் செய்து கொண்டாள். இந்தப் பெருமதிப்பிற்குரிய பெண்மணி, அடுப்படி வேலைகள் முதல் அப்பளம் விற்பது வரை அல்லும் பகலும் அயராமல் செய்தாள். கடலாய்ப் பரந்து கிடந்த கஷ்டங்களுக்கு இடையிலும் இன்முகத்துடன் வளைய வந்தாள்; மகளை எம்.ஏ. வரை படிக்க வைத்தாள். இன்று எல்.ஐ.சி.யில் நல்ல வேலையில் இருக்கிறாள் மகள் ஹேமா. தன்னம்பிக்கையுடன் பெண் சிங்கமென வளைய வருகிறாள் அவள் தாய் அழகம்மா.

பெரிய காஞ்சிபுரம். கீதா வீரப்பன்.

வைரம் உடைய நெஞ்சம்!

வயது முப்பத்தைந்து, இரண்டு சிறு குழந்தைகளுக்குத் தாய், பட்டப்படிப்பு கிடையாது, காது சரியாகக் கேட்காது... இருந்தும்....'ஒரு பள்ளியைத் துவக்க வேண்டும்' என்ற தமது குறிக்கோளை நோக்கி அயராது உழைத்தார் பிரதிபா எக்போடே என்ற மராத்திய பெண்மணி. தன் வீட்டிலேயே பத்து எல்.கே.ஜி. மாணவர்களுடன் அவர் துவக்கிய பால விஹார், அவரது அயராத உழைப்பால் வளர்ந்து, பன்னிரண்டு வருடங்களில் 2500 மாணவர்கள் பயிலும் உயர்நிலைப் பள்ளியாகி விட்டது.

"ஞாபகப்படுத்துகிறேன்... மொய் எழுதாமல் யாராவது இருந்தால் உடனே எழுதவும். இல்லையென்றால் அவர்கள் பெயர்கள் மைக்கில் வாசிக்கப்படும்!"

— கடுவை. கோபால்சாமி.





எழுத்தாளர்: நான் எழுதின 'ஹோட்டல் சாப்பாடு'ங்கிற கதையைப் படிச்சீங்களா? எப்படி இருந்தது?

ஆசிரியர்: ஜீரணிக்கக் கஷ்டமா இருந்துச்சு!

— மணியன் தர்மலிங்கம்

தமக்கு உதவிய ஹான்ஸ்புக்ரா பெயரை இப் பள்ளிக்கு வைத்தார் பிரதிபா. நாற்பத்தைந்தாவது வயதில் பி.ஏ. பரீட்சை எழுதித் தேறி, காது ஆபரேஷனும் செய்து கொண்டு, பத்து வருட காலம் தம் பள்ளியின் தலைமையாசிரியையாகப் பணியும் ஆற்றி, பின் ஓய்வு பெற்றார் இவர். எவ்வளவு வைராக்கியம் மிகுந்த பெண் மணி!

பம்பாய், வி. பிச்சுமணி.

கலை நிறைப் பெண்மணி

எனக்குத் தெரிந்த பெண்மணி ஒருவர் தம் குடும்பம் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, எஸ்.எஸ்.எல்.சி., முடித்து விட்டு வங்கியில் கிளார்க்காக வேலையில் சேர்ந்தார். விடாமுயற்சியாலும் ஆர்வத்தாலும்,வேலைபார்த்துக்கொண்டே, பி.காம்., எம்.காம்., இரண்டும் பாஸ் செய்து விட்டு, இடையே டைபிங், ஷார்ட் ஹாண்டும் படித்து, சி.ஏ.ஐ.ஐ.பி. எழுதித் தேறி, வீணையும் கற்றுக் கொண்டு, ஹிந்தியில் பிரவீண வரை 'பாஸ்' செய்து, இறுதியாக ஏ.சி.எஸ். பரீட்சையிலும் தேறி கம்பெனி செக்ரடரியாகி விட்டார்! வங்கியில் பொறுப்பான அதிகாரி பதவியும் கிடைத்தது. இருபத்தெட்டு வயதில் திருமணம் செய்து கொண்டு ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகவும் இருக்கும் இந்தக் கலை நிறைப் பெண்மணி... வேறு யாரும் இல்லை... என் மனைவி கல்பகராணிதான்!

சென்னை—20, ஆர். வேங்கடகிருஷ்ணன்.

"வேண்டாம் ஓசிக் காசு!"

எங்கள் தெருவில் பல வீடுகளுக்குத் தண்ணீர் பிடித்துத் தந்த ஆயா என் மதிப்பில் மிக மிக உயர்ந்து நிற்கிறாள். மகனுடன் அவருக்கு ஏதோ பிணக்கு. தள்ளாத வயதில் கடுமையாக உழைக்கிறாரே என்று இரக்கப்பட்டு அரசு வழங்கும் ஆதரவற்றோருக்கான ஐம்பது ரூபாய் முதியோர் பென்ஷனை அவருக்குப் பெற்றுத் தர ஏற்பாடுகள் செய்தோம். இது தெரிந்ததும் ஆயாவுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. 'எனக்குப் பிள்ளை, மருமகள், பேரக்குழந்தைகள் இருக்கிறார்கள். எங்களுக்குள் மனஸ்தாபம்; பிரிஞ்சிருக்கோம். நான் அனாதை என்று பொய் சொல்லி அரசாங்கம் கொடுக்கிற காசை வாங்க மாட்டேன்' என்று சண்டை போட்டு விட்டுப் போய் விட்டார்.

சென்ற வருடம் தை மாதம் இறைவனடி அடைந்த அந்த ஆயாவை என்னால் மறக்கவே முடியாது.

புதுக்கோட்டை — 1. எஸ். உஷாராணி.

இளைஞர்கள் பார்வையில் இன்றையப் பெண்கள்



சௌம்ய நாராயணன்



சத்தீஷ்குமார்



அமுதவாணன்



ஸ்ரீதரன்

இளைஞர்கள் இன்றையப் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய சென்னை லயோலா கல்லூரியில் ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்தோம். கல்லூரி முதல்வர் ஃபாதர் லியோ கொரியா, மாணவர்களிடையே உள்ள 'ஈவ் டீஸிங்' பழக்கத்தைக் கண்டித்துப் பேசி, கருத்தரங்கைத் துவக்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து பேசிய மாணவர்கள் வெளியிட்ட கருத்துக்களின் தொகுப்பு:

சௌம்ய நாராயணன்: முதல்வர் அவர்கள் 'ஈவ் டீஸிங்' பற்றிக் குறிப்பிட்டு நம்மைக் கண்டித்தார். நான் 'ஆடம் டீஸ்' செய்யப்பட்ட எனது அனுபவத்தைச் சொல்கிறேன். ஒரு பெண்கள் கல்லூரிக்குப் போனேன், கலை நிகழ்ச்சியில் பங்கேற்க. அங்கு சில பெண்கள் என்னைப் பார்த்து, 'அதோ போகிறான் பார் எலும்புக்கூடுப் பையன்' என்று கேலி செய்தார்கள். நான் ஒல்லியாய் இருக்கிறேனாம்! நாம் கேலி செய்தால் பெரிதுபடுத்தி ரகளை செய்கிறார்களே; தாய்க்குலத்துக்கு மட்டும் தனி உரிமை, தனி மரியாதையா?

ஸ்ரீதரன் : ஆண்கள் பெண்களைக்கேலி செய்வதும் பெண்கள் ஆண்களைக் கேலி செய்வதும் மனப்பக்குவம் அடையாத ஒரு குறிப்பிட்ட வயதுக் காலத்தில் சகஜம். ஆனாலும் இது அநாகரிகம்தான். நாம் இந்த நிலைமை மாற என்ன செய்யலாம் என்று யோசிக்கணுமேயொழிய அவர்கள் செய்வதால் நாங்கள் செய்கிறோம் என்று ஏட்டிக்குப் போட்டியாகப் பேசக்கூடாது; ஒருவரையொருவர் குற்றம் சொல்லக் கூடாது.

ரமேஷ்ராஜ்: இன்றையப் பெண்கள் உடை, அலங்காரம் போன்ற புற விஷயங்களில்தான் அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்கது. மாடர்ன் உடைகள் என்ற பெயரில் அளவுக்கு மீறிய கவர்ச்சியுடன் உடை அணிகிறார்கள். ஆண்களின் கவனத்தைக் கவரும் நோக்குடனேதான் இப்படிச் செய்கிறார்கள் என்று தோன்றுகிறது. இதையெல்லாம்

* முதல்வர் ஃபாதர். லியோ கொரியா

* பேராசிரியர் ராமு







* மாணவர்களுள் ஒரு பகுதியினர்.

விடுத்து, கொஞ்சம் சீரியஸாப் பெண்கள் சிந்திக்கணும்.....

மாத்யூ : பெண்கள் சீரியஸாச் சிந்திக்கின்றதன் விளைவுதான் இன்றைக்கு அவர்கள் அனேகமாக எல்லா பரீட்சைகளிலும் ஆண்களைக் காட்டிலும் அதிக மதிப்பெண் பெறுகிறார்கள், அவர்களுடைய தேர்ச்சி சதவிகிதமும் ஆண்களுடையதைக் காட்டிலும் அதிகம். பல துறைகளிலும் இன்றைக்குப் பெண்கள் பிரமிக்கத்தக்க விதத்தில் முன்னேறியிருக்கிறார்கள்.

சௌம்ய நாராயணன் : அந்த முன்னேற்றமும் பொருளாதார சுதந்திரமும் தான் அவர்களுக்கு ஆணவத்தை ஏற்படுத்தி, ஆண்களைத் துச்சமாய் மதிக்கச் செய்துள்ளன. அவர்களுடைய இயல்பான விட்டுக் கொடுக்கும் சுபாவம் அழிந்து போய்விட்டது. குடும்பத்தில் ஏற்படும் சச்சரவுகளுக்கெல்லாம் பெண்கள்தான் மூல காரணம்.

தமிழ்தாசன் : குட்டிக் கொண்டேயிருந்தால் எத்தனை நாள்தான் குனிந்து கொண்டேயிருப்பார்கள்...? ஆண்கள் பெண்களை அடிமைப் படுத்தி ஆதிக்கம் செலுத்தியதன் விளைவாகத்தான் பெண்கள் இன்று எழுச்சி கொண்டுள்ளார்கள். கல்வியும் பொருளாதார சுதந்திரமும் அவர்களுக்குப் பலம் அளித்துள்ளன. அதன் பயனாக அவர்கள் சுயமாய்ச் சிந்தித்துச் செயல்படுவதை ஆண்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தங்கள் ஆதிக்கம் ஆட்டம் கண்டு விடும் என்று ஆண்கள் அஞ்சுகிறார்கள் — இதுதான் உண்மை — இதுதான் பிரச்னைகளுக்குக் காரணம்.

ஜகதீசன்: உண்மையில் பெண்ணுக்குப் பெண்ணேதான் எதிரியாயிருக்கிறாள். ஆண் அல்ல! வரதட்சணைக் கொடுமையையே எடுத்துக் கொள்ளுங்கள். மாமியார்கள்தானே பட்டியல் போட்டு பெண் வீட்டாரிடம் கறக்கிறார்கள்!

ஸ்ரீதரன் : இந்த மாதிரி அநீதிகளெல்லாம் பெண்களே போராடுவதால் அழியும் என்று நம்பலாம். பெண்கள் மட்டும் கொதித்தெழுந்து போராட வந்து விட்டால் நிச்சயம் நினைத்ததைச் சாதித்துவிடுவார்கள். அண்மையில் வெளியான மௌனப் போராட்டம் படத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். ஓர் ஆதிவாசிப் பெண்ணின் உண்மைக் கதை அல்லவா அது!

சதீஷ்குமார்: அந்தப் பெண்ணின் துணிச்சல் போற்றத்தக்கதுதான் என்றாலும் அவள் பல லட்சம் பெண்களுள் ஒருத்தி



* தமிழ்தாசன்

* ஜகதீசன்



* ரமேஷ்ராஜ்





செவிக்கு உணவு இல்லை!

சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள உணவு விடுதியை நடத்துபவர்கள் எல்லோருமே பெண்கள் — அதிலும் பேசும் சக்தியற்ற பெண்கள்!

— பாலன்.

[redacted]

தான். மற்ற பெண்களின் — அதிலும் கிராமத்துப் பெண்களின் — நிலைமை இன்னும் மோசமாகவே உள்ளது. கல்வி, பொருளாதாரம், உரிமைகள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் பின்தங்கியே உள்ளார்கள். நகர்ப்புறத்துப் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றித்தான் நாம் ஓரளவுக்குப் பெருமைப்படலாம்.

தமிழ்தாசன்: நகர்ப்புறங்களிலும் குடிசை வாழ் பெண்கள் இருக்கிறார்கள் என்பதை மறந்து விடுகிறோம். இவர்கள் பாடுதான் மிகவும் பரிதாபகரமானது. உடல் தேய உழைத்தாலும் இவர்கள் பணம் கணவனுடைய 'குடி' செலவுக்குப் போய் விடுகிறது. ஏதேனும் கேட்டாலோ 'என் இஷ்டம் குடிப்பேன்! நீ யார் அதைக் கேட்க? பொம்பளையா ஒழுங்கா அடங்கிக் கிட' என்று கணவனின் மிரட்டல். உரிமைகளும் அற்ற, கல்வியும் அற்ற, பொருளாதார சுதந்திரமும் அற்ற இத்தகைய பெண்கள், பிள்ளை பெறும் இயந்திரங்களாய்ப் படும் துன்பத்தை நாம் கண்ணாலேயே பார்க்கிறோமே.

அமுதவாணன்: குடிசை வாழ் பெண்களின் கஷ்டங்கள் நமக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றன. ஆனால் மத்தியதர வகுப்புப் பெண்களுக்கும் கஷ்டங்கள் உண்டு. அவர்கள் வாழ்க்கை முறையும் நாகரிகமும் அவற்றைப் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாமல் தடுத்து விடுகின்றன. மத்தியதர வகுப்பைச் சேர்ந்த பல ஆண்கள் மனைவி படித்தவளாக, வேலைக்குச் செல்பவளாக இருப்பதை ஏற்றுக் கொண்டாலும் அவள் சக ஆண்களுடன் சரிசமமாகப் பழகுவதை தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். மனைவியின் கல்லூரிப் பருவ ஆண் நண்பர் ஒருவர் வீடு தேடி வந்ததைச் சகியாமல் சந்தேகப்பட்டு மனைவி மீது அபாண்டப் பழி சுமத்தினார் ஒருவர். அந்தப் பெண் மனமுடைந்து போய் விவாகரத்து கோரி விட்டார். இது எனக்குத் தெரிந்து நடந்த உண்மைக் கதை... ஆண்களும் சரி பெண்களும் சரி, அனாவசிய சந்தேகங்களை ஒழித்து, ஆரோக்கியமான சிந்தனையும் பரந்த மனப்பான்மையும் உடையவர்களாக விளங்கினாலொழிய மாறி வரும் சூழ்நிலையில் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவாது.

தமிழ்தாசன்: ஆக, பெண்களுக்குச் சம உரிமை இன்றையச் சமூகத்தில் இல்லை என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.. பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கும் பங்கு அளிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இதனால் அவர்களுடைய சமூக அந்தஸ்து உயரும்...

ஜான்பால்கோ: பெண்களுக்குத்தான் ஏகப்பட்ட செலவு செய்து பெற்றோர்கள் திருமணம் செய்து வைக்கிறார்களே. நகை, நட்டு, சீர் என்று தருகிறார்கள். இன்னும் சொத்து வேறு எப்படித் தருவது. மகன்கள் சண்டைக்கு வர மாட்டார்களா? அது போகட்டும் — சொத்தில் பங்கு பெறும் பெண்கள் பெற்றோரின் கடனிலும் பங்கு ஏற்பார்களா? அப்படிப்பட்ட பெண்களுக்குக் கல்யாணம் ஆகுமா? அல்லது ஏற்கெனவே கல்யாணமான பெண்களின் புக்ககத்தார் ஒப்புக் கொள்வார்களா? அதற்கெல்லாம் பெரிய புரட்சிகரமான சமுதாய மாற்றங்கள் ஏற்பட வேண்டும்...

ரமேஷ்ராஜ்: பெரிய சமுதாய மாற்றங்களுக்குச் சிறிய மன மாற்றங்கள்தான் வித்து. சம உரிமைகளைச் சட்டத்தின் மூலம் கொண்டு வரலாம். ஆனால் அதனால் மட்டும் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. மன மாற்றத்தை நாம்தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இருதரப்பிலும் பலமும் பலவீனமும் உண்டு. இதை உணர்ந்து சடுகட்டுவது போல் எதிர்ப் பாலினரின் நேசக் கரத்தைக் கண்ணியத்தோடும் பெருமையோடும் ஏற்க வேண்டும். இதைச் செய்தால் சமுதாய வாழ்க்கை மகிழ்ச்சிமயமானதாக விளங்கும்.

கருத்தரங்கை முடித்து வைத்துப் பேசிய தமிழ்த்துறைப் பேராசிரியர் ராமு, இன்றையச் சூழலில் எல்லாப் பெண்களுமே மோசம் என்று இளைஞர்கள் நினைப்பதையும் அதே போல் ஆண்களைப் பற்றி இளம் பெண்கள் நினைப்பதையும் சுட்டிக் காட்டினார். இந்த நிலை மாறுவதற்குப் பேருதவியாக இருக்கக்கூடியது ஆண்களும் பெண்களும் சிறு வயது முதலே சேர்ந்து பயிலும் கோ—எஜுகேஷன் முறை என்பதையும் குறிப்பிட்டார்.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **ரமணன்**

1990s

வளமை பொங்கும்
சகாப்தம்

வீணையும் நாதமும் போல
ராகமும் சுருதியும் போல
இந்தப் புத்தாண்டிலே
வாழ்க்கையில் வளம்பெருக
இனிய ராகங்களில்
சேர்ந்திசைப்போம்.


**புத்தாண்டு
பொங்கல்
வாழ்த்துக்கள் !**

SHRIRAM GROUP COMPANIES
MADRAS


ஸ்ரீராம்
குரூப் நிறுவனங்கள்

தலைமை அலுவலகம் :
10, கஸ்தூரி எஸ்டேட்,
சென்னை-600 086.
போன் : 454805/452113.

**All India Deposit
Mobilisation
Campaign
till 31-1-90.**



ADWAVE/SGC/3965




வாண்டே
அ.தி.மு.க. மேல் காங்கிரஸ் சவாரி பண்றது பிடிக்காமத்தான் இங்கே வந்துட்டேன்!
தமிழக ஜனதா தளம்
தி.மு.க. தொண்டர்கள்
தஞ்சை விவசாயி
முதல்வருக்கு முதல்வர் பேசிட்டோம்... தண்ணி வந்துகிட்டே இருக்கு!
கருணாநிதி
அங்கே நடக்கிறது நம்ம ஆட்சிதான்! வந்துகிட்டே இருங்க நண்பா!
வாழப்பாடி
'ஆலயங்களில் பரதநாட்டியம் அனுமதிக்கப்படும்! — கருணாநிதி
தேர்தலில் கவிழ்ந்தாலும் ஆட்சி கலையாது... ஜனுதக தகதிமி...
தேசிய முன்னணி அரசு ஆதரவு



கல்கி

1990 ஜனவரி 14
மலர் 48 இதழ் 24
சுக்ல தை 1



நாம் சுமக்கும் கடன்: 20,526 கோடி!

தேர்தலின் போது பலவித வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும் பதவிக்கு வந்த பிறகு அவற்றைத் தலைவர்கள் அடியோடு மறந்து விடுவதும் நமக்குப் பழகி விட்ட விஷயம்தான். அவ்வாறிருக்க தேசிய முன்னணி, ஆட்சிக்கு வந்த பிறகு தனது தேர்தல் அறிக்கையில் கொடுத்திருந்த பல வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டுவது வியப்பளிக்கிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தொடரில் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறி விட்டபடியால் பிரதமர் புதிய உற்சாகத்துடன் செயலில் இறங்கியிருக்கிறார். டி.வி., ரேடியோ ஆகியவற்றை சுதந்திர நிறுவனங்களாக்க ஒரு மசோதாஏற்கெனவே நாடாளுமன்றத்தில் தாக்கலாகியுள்ளது. இதைத் தொடர்ந்து இனி அடுத்து வரும் பட்ஜெட் தொடரிலும் பல முக்கியமான மசோதாக்கள் தாக்கலாகும் என்று எதிர்பார்க்கலாம். புத்தாண்டு தினத்தன்று மத்திய அரசு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை இதனை உறுதிப் படுத்துகிறது. அந்த அறிக்கையில் கூறப்படும் விஷயங்களுள் சில:

பட்ஜெட்டின் நிதி ஒதுக்கீடுகளில் ஐம்பது சதம் இனி கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கே பயனாகும். பஞ்சாயத்து ஆட்சி முறைமாநில முதல்வர்களின் யோசனைகளை ஏற்று செயல்படுத்தப்படும். நிலச் சீர்திருத்தங்கள் ஏட்டளவில் நின்றுவிடாதிருக்க அரசியல் சாஸனத்தில் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழிலுறவுச் சட்டம் உருவாகும். நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கேற்பது சாத்தியமாகும். ஆடம்பரச் செலவுகளைக் கட்டுப்படுத்தப் புதிய விதிமுறைகளை இயற்றப் போகிற அரசு, நீண்ட கால நிதிக் கொள்கையையும் அறிவிக்கும். ஒவ்வொருவருக்கும் வேலை கிடைப்பது ஜீவாதார உரிமையாகும். தேர்தல் சீர்திருத்தங்கள் செய்யப்படும். நீதித் துறையில் தாமதங்களைத் தவிர்க்கப் புதிய ஏற்பாடுகள் அமுலாகும். மத்திய — மாநில உறவுக்கும் மாநிலங்களிடையே நல்லுறவுக்கும் ஒரு ''கவுன்சில்'' அமைக்கப்படும். நகர்ப்புறங்களில் சேரிப் பகுதிகளில் அடிப்படை வசதிகள், மகளிர் நலக் கமிஷன், மண்டல் கமிஷன் அறிக்கையை ஆய்வு செய்வது, தேசிய பாதுகாப்பு மன்றம் என்று பலப்பல புரட்சிகரமான திட்டங்கள் அரசின் புத்தாண்டு அறிக்கையில் காணப்படுகின்றன. இனி ரகசியங்கள் அற்ற அரசுதான் ஆட்சியில் இருக்க முடியும் என்பது போல், மக்களுக்குத் தகவல்களைப் பெறுவதும் ஜீவாதார உரிமையாக்கப்படவிருக்கிறது.

'அறிக்கை விட்டால் போதுமா? திட்டங்களை நிறைவேற்றுவது எப்போது?' என்ற கேள்வி எழுவது இயல்பு. இதற்காகவே ஒவ்வொன்றுக்கும் காலக் கெடு நிர்ணயித்து அமைச்சரகங்களை முடுக்கி விட்டிருக்கிறார் பிரதமர். இதனை 'உலகம் கண்டறியாத அதிசயம்' என்றே வர்ணிக்கலாம்!

இப்படி ஒருபுறம் ஆக்கபூர்வமான காரியங்கள் நடக்கும் போது மறுபுறம், 'இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கே போவது?' என்ற பிரச்னை நிதி அமைச்சரைக் குடைந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததுமே மொத்த வியாபார விலைகள் குறையத் தொடங்கின. இந்த ஆரோக்கிய நிலை தொடர்ந்து, மக்களுக்கு நன்மை விளைய வேண்டுமானால் பற்றாக்குறை பட்ஜெட், பணவீக்கம் முதலியன கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆனால் நடப்பது வேறாக உள்ளது! ஏற்கெனவே பல மாநில காங்கிரஸ் அரசுகள், வரப் போகும் தேர்தலை உத்தேசித்து இப்போதே, 'கடன்களை ரத்து செய்கிறோம்; வருஷத்துக்கு இரண்டு புடைவை தருகிறோம்; வயதானவர்களுக்குப் பென்ஷனை இரட்டிப்பாக்குகிறோம்' என்றெல்லாம் ஆரம்பித்து விட்டன! இதில் மேலும் விசனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், கடன் ரத்து வாக்குறுதியைத் தேசிய முன்னணியும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் விவசாயிகளுக்கும் சிறு தொழில் செய்வோருக்கும் அளித்திருப்பதுதான். எனவே மாநில அரசுகளை இவ்விஷயத்தில் மத்திய அரசு தட்டிக் கேட்க முடியாது!

கடன் ரத்து என்பதும் இலவச விநியோகம் என்பதும் வெறும் மாயைதான்! விவசாயியின் கடன் ரத்தானால், கூட்டுறவு வங்கிக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசுதான் ஈடுகட்ட வேண்டும். அது கடைசியில் வரி செலுத்தும் மக்கள் தலையில்தான் விடியும்! இது அரசியல்வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும் மக்களை ஏமாற்றும் நாடகம் தொடர்கிறது!

வி. பி. சிங் பதவி ஏற்ற சமயம் இந்தியாவின் மொத்தக் கடன் அளவு 20,526 கோடி ரூபாய் என்பதை எண்ணிப் பார்த்தால், எவ்வளவு கனமான சுமையை நாட்டு மக்கள் தாங்குகிறார்கள் என்பது புரியும். வேறு பல விஷயங்களில் காட்டும் புத்திசாலித்தனத்தை தேசிய முன்னணி அரசு நிதி நிர்வாகத்திலும் காண்பிக்கட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

எளியோர் சார்பில்



கேள்வி: தற்போது எதில் அதிக ஆர்வம் காட்டுகிறீர்கள்? திரைப்படங்களிலா? மனித உரிமைப் போராட்டங்களிலா?

பதில்: இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்த துறைகள்தான்! திரைப்படப் புகழ் சமூகப் பணிகளுக்கு உதவுகிறது; என் சொற்களுக்கு வலிமையையும், மதிப்பையும் ஏற்படுத்துகிறது. குடிசை வாசிகளுக்காக உண்ணாவிரதமிருக்கும் போதும், தெரு நாடகங்கள் நடத்தும் போதும் திரைப்படப் புகழ் கைகொடுக்கிறது.

கே: இரண்டிலும் ஈடுபடுவது சிரமமாயில்லையா?

ப: ரொம்ப! வீடு, கணவர், இல்லறப் பொறுப்புகள் என்றிருக்கும் போது திரைப்படத்தை முடித்து விட்டு வீடு வந்தால், அங்கே ஒரு கூட்டம், தன் குறைகளைச் சொல்லத் தயாராக நிற்கும். எரிச்சல்படாமல் இவர்களைப் பார்க்க வேண்டும்.

கே: துணிச்சல் மிக்க பெண் என்று உங்களைப் பற்றி ஒரு கருத்து நிலவுகிறது. இந்த 'இமேஜ்' ஐ வைத்துக் கொண்டு நீங்கள் சராசரி சினிமா பத்திரங்களை ஏற்றால் எடுபடுமா?

ப: நிச்சயமாக என் 'இமேஜ்' நான் ஏற்கும் பாத்திரங்களைப் பாதிக்கும். அதனால் பாத்திரங்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்துத்தான் நான் ஒப்புக் கொள்கிறேன்.

கே: ஒழுக்கம், லட்சியநோக்கு போன்றவற்றுக்கும் திரைப்படத் துறைக்கும் அதிக சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை; அப்படியிருக்க லட்சியவாதியான உங்களால் எப்படி அத்துறையில் முழு மனத்துடன் ஈடுபட முடிகிறது?

ப: ஒரேயடியாக எந்தத் துறையையும் "கீழ்த்தரம்" என்று ஒதுக்கி விடக் கூடாது. உயர்ந்த மனிதர்களும் உயர்ந்த பண்புகளும் சினிமாத் துறையிலும் உண்டு; நம்முடைய நடத்தையையும் மேன்மையையும் ஒட்டியே மற்றவர்களின் 'ரியாக்ஷனும்' இருக்கும்.

கே: குறைந்தது முந்நூறு குடும்பங்கள் பிரதி தினமும் பம்பாயை

ஒரு போராட்டம்!

— ஷபானா ஆஸ்மி சிறப்புப் பேட்டி

பாயும்புலி — சீறும் கனல் — ஆர்ப்பரிக்கும் அலை — இவற்றை ஒரு நடிகையாக உருவகப் படுத்திக் கொள்ளுங்கள் — அந்த நடிகை தான் ஷபானா ஆஸ்மி!

குடிசைவாழ் மக்களின் அல்லல்கள், ஆதிவாசிகளின் அவலங்கள், ஆளும் கட்சியின் அராஜகம், இயற்கையை அழிப்பதனால் ஏற்படும் அபாயங்கள் — இவற்றைப் பற்றிப் பேசும் போதெல்லாம் வார்த்தைகளில் அனல் பறக்கிறது. இத்தனைக்கும் 'கல்கி'க் கென்று பிரத்யேகப் பேட்டியளித்தபோது ஷபானாவுக்குப் பாவம், எக்கச்சக்க ஜுரம்! இருப்பினும் ஒன்றரை மணி நேரம் நமது கேள்விகளுக்குச் சளைக்காமல் பதில் கூறினார்.

நோக்கிப் படை எடுப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. கிராமங்கள் காலியாகி, பம்பாய் அடைசலாகி மூச்சுத் திணறுவது இதனால்தானே? இவர்களனை வரும் சட்ட விரோதமாகக் குடியிருப்புக் களமைப்பதை நீங்கள் எவ்வகையில் நியாயப்படுத்துகிறீர்கள்?

ப: கிராமத்தில் அவர்களுக்கு வேலையும் வயிறு நிரம்பச் சோறும், கிடைத்தால் இங்கே ஏன் வருகிறார்கள்? இப்படி வருபவர்களின் உழைப்பை பம்பாய் எவ்வளவு லாபகரமாக, லாகவமாக உறிஞ்சுகிறது தெரியுமா? இவர்கள் நகர சுத்தித் தொழிலாளர்களாக, வீடு கட்டுபவர்களாக, ரோடு போடுபவர்களாக, சர்வர்களாக, சுமை தூக்குபவர்களாக, கூலிகளாக, குறைந்த செலவில் நிறைய வேலை வாங்கப்படுகிறார்கள்! இவர்களால்தான் வீட்டில் வேலைகளைச் செய்ய 150 ரூபாய்க்கு 'பாயி' கிடைக்கிறாள். இவர்கள் தங்கள் தகுதியை உணர்ந்து சம்பளம் கேட்க ஆரம்பித்தால் பிறகு மேல்நாடுகள் போல நம் வேலைகளை நாமே செய்து கொண்டு திண்டாட வேண்டியிருக்கும்! நமக்கு இத்தனை செய்பவர்கள், நிலையாக ஓரிடத்தில் குடிசை போடுவது கூடத் தவறென்றால் அதை எப்படி ஜீரணிப்பது? நிமிட நேரத்தில் அவர்கள் அரும்பாடுபட்டு அமைத்த குடிலை இடித்துத் தள்ளும் அரசு, எலெக்ஷன் காலத்தில் மட்டும் இவர்களைத் தாஜா செய்து வோட்டுக்கள் கறப்பது ஏன்? தாதரிலுள்ள ஒரு கட்டடத்தில் ஒரு முழு மாடியே சட்டவிரோதமாகக் கட்டப்பட்டது. இடித்தா தள்ளினார்கள்? நரிமன் பாயிண்டில் எத்தனையோ கட்டடங்கள் சட்டவிரோதமானவை! தரைமட்டமாக்கினார்களா?

கே: எந்தெந்த வழிகளில் குடிசைவாசிகளுக்கு உதவுகிறீர்கள்?

ப: பம்பாய்வாசிகளில் பாதி பேர் குடிசை வாசிகள்தாம்! இவர்களெல்லாம் விபச்சாரம் செய்பவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் என்று தவறாக எண்ணாதீர்கள்; பாங்கில் பணிபுரிபவர்கள், டீச்சர்கள், அரசாங்க உத்யோகஸ்தர்கள் என்று பலதரப்பட்டவர்களும் குடிசைகளில்தான் வாழ்கிறார்கள்!

இவர்களில் பலருக்குக் குடிநீர், மின்சாரம், கழிவறைகள் போன்ற வசதிகள் நேர்வழியில் கிடைப்பதில்லை! ஷங்கர் டேக்கரி என்றொரு இடம் — கடந்த நாற்பது ஆண்டுகளாகக் குடிநீர் வசதியே இங்கு கிடையாது. ஷரத் பவார் தம் வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டார். இங்கு வசிப்பவர்கள், நகருக்கு 'சப்ளை' செய்யப்படும் பைப் லைனிலிருந்து, திருட்டுத்தனமாக நாலு குழாய்களைப் பொருத்தித் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் பம்பாய்க்கு அளிக்கப்படும் தண்ணீர் எவ்வளவு அசுத்தமாகிறது என்பதை உணர்ந்தும், அரசு கண்டும் காணாதது போலிருக்கிறது!

என் வீட்டு வேலைக்காரி பிரதி மாதம் 150 ரூபாய் மின் கட்டணம் செலுத்துகிறாள்! திருட்டு மின்சாரம் — மீட்டர் கிடையாது! இதில் பாதியை "ஸ்லம் லார்ட்" எனப்படும் பேட்டை வாஸ்தாத் சாப்பிட்டு ஏப்பம் விடுவான்!

எனவே எங்களது முக்கிய பணி, குடிசைவாசிகள் அத்தியாவசியத் தேவைகளைப் பெற உதவுவது — அவர்களுக்கும் அரசுக்குமிடையே இடைத் தரகர்களாய் இருந்து பணம் சம்பாதித்து வரும் கொழுத்த முதலைகளை அகற்றுவது... நாங்கள் இலவசமாக எதுவும் தரப்போவதில்லை... இலவசமாக வழங்கி வழங்கி அவர்களைச் சோம்பேறிப் பிச்சைக்காரர்களாய் ஆக்குவது எங்கள் குறிக்கோளல்ல; அவர்களது உரிமைகள் என்ன என்பதைப் போதித்து, அவற்றைப் போராடிப் பெறக் கற்றுத் தருவதே நோக்கம். இது தவிர ஆரம்பக் கல்வி தொழிற் கல்வி போன்றவற்றுக் ▸

வழிகாட்டல், சுகாதார அறிவு போதித்தல், மருத்துவ உதவி வழங்குதல் போன்றவற்றையும் செய்கிறோம். இதற்கென குடிசைவாசிகள் நல்வாழ்வு இயக்கம் ஒன்றை ஆரம்பித்து, அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். குடிசைவாசிகளைத் தங்கள் சொந்தக் கால்களில் நிற்க வைக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம்.

கே: ஆனால் அவர்கள் தங்கள் சொந்தக் கால்களில் நிற்க விரும்புகிறார்களா...?

ப: இல்லவே இல்லை. அவர்களுக்குக் கால்கள் உள்ளன என்பதையே அரசியல்வாதிகள் மறக்கடித்து விட்டனரே! நாங்கள் ஃபிஸியோ தெரப்பிஸ்ட் மாதிரி — முடக்கப்பட்டு விட்ட அந்தக் கால்களை மஸாஜ் செய்து, ரத்த ஓட்டத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கும் கால்கள் இருப்பதை நினைவுபடுத்துகிறோம். அதன் பிறகுதான் அந்தக் கால்களால் அவர்கள் எழுந்து நிற்க முடியுமென்ற நம்பிக்கையை ஊட்டி, மெதுவாக எழுப்ப வேண்டும். அதற்கு நீண்ட காலமாகும்!

கே: அண்மையில் 'ஹர்ஸத்தில்' பாபா ஆம்தே தலைமையில் ஆதிவாசிகளுடன் சேர்ந்து போராட்டம் நிகழ்த்தினீர்களே!

ப: ஆம்! 'நர்மதா வாலி ப்ராஜக்ட்' "சர்தார் சரோவர் ப்ராஜக்ட்" என்று ம.பியிலும் குஜராத்திலுமாக பெரிய அணைக்கட்டுத் திட்டத்தை இ. காங்கிரஸ் அரசு அறிவித்திருந்ததே. அதை எதிர்த்துத்தான் போராடினோம்.

இதனால் 40,000 ஹெக்டேர் தேக்குக் காடுகள் அழியும், 84,000 ஹெக்டேர் விளை நிலங்கள் நாசமாகும்; இரண்டு லட்சம் மக்கள் வீடிழப்பர். ஹர்ஸத் நகரமே நீரில் மூழ்கி விடும்! ஆண்டாண்டுக் காலமாக அங்கே வசித்து வரும் ஆதிவாசிகளின் நிலைமை என்னாவது? மேலும், இயற்கையை அழிப்பதனால்தானே நாட்டில் மழையின்மையும் பஞ்சமும் தலைவிரித்தாடுகின்றன? நம்மால் மீண்டும் ஒரு தேக்குமரக் காட்டை உருவாக்க முடியுமா? மிஞ்சி மிஞ்சிப் போனால் யூகலிப்டஸைத்தான் பயிரிட்டு நம் ஆயுளுக்குள் வளர்க்க முடியும்... அதனால்தான் போராடினோம். எங்களுடைய இந்தப் போராட்டம் முழு வெற்றி! 50,000 மக்கள் இதில் ஆவேசத்துடன் கலந்து கொண்டார்கள். இதை நான் மணி சங்கர ஐயரிடம் சுட்டிக் காட்டிய போது, அவர் அகங்காரத்துடன் "என்னாலும் ஒரு லட்சம் பேரை அழைத்துக் கொண்டு வர முடியும்" என்று கூறினார்! ஆட்சியிலிருப்போருக்குப் போராட்டத்தை எப்படியாவது முறியடிக்கிற, முடியாது போனால் அலட்சியப்படுத்துகிற மனப்பான்மைதான் இருக்கிறதேயொழிய, 'எதற்காகப் போராடுகிறார்கள்? அதில் நியாயம் இருக்கிறதா?' என்று அனுதாபத்துடன் பார்க்கும் எண்ணமே இருப்பதில்லை. இதுவா ஜனநாயகம்?

கே: உங்கள் குறிக்கோள்களில் எந்த அளவு வெற்றி பெற்றுள்ளதாக நினைக்கிறீர்கள்?

ப: பூஜ்யம்தான்! வெற்றி என்பது இதுவரை எட்டாக் கனியாகத்தானிருக்கிறது. நிவாரணப் நடவடிக்கைகள் போல, பிரச்னைகளுக்கு அவ்வப்போது ஏற்பட்ட தீர்வுகள்தான். ஒட்டுமொத்தமான சமுதாய மாற்றமென்பது ஒரு கணப்பொழுதில் ஏற்படுவது அன்று; இங்கேயும் மாற்றம் வரும்! மறுமலர்ச்சி ஏற்படும்! அப்போது நான் உயிரோடு இருப்பேனோ மாட்டேனோ! ஆனால் அந்த வெற்றியில் ஒரு சிறு பங்கு நிச்சயம் என்னுடையதாக இருக்கும்.

கே: சஃப்தர் ஹஷ்மி கொலைக்குப் பிறகு பிரம்மாண்ட ஊர்வலத்தை உங்கள் தலைமையில் நடத்தினீர்கள்! ஃபிலிம் ஃபெஸ்டிவலில் காங்கிரஸ் மீது நேரடியாகக் கொலை குற்றம் சாட்டினீர்கள் — இதன் விளைவு என்னவாயிற்று?

ப: அதன் விளைவாகத்தான் நான், ராஜ் பப்பர், ஷத்ருகன் சின்ஹா ஆகியோர் டி.வி.யிலிருந்து முழுவதுமாக இருட்டடிப்புச் செய்யப்பட்டோம்; நான் தோன்றிய "ஹாண்ட்லூம்" விளம்பரத்துக்குக் கூடத் தடைவிதிக்கப்பட்டது. பிறகு ராஜீவ் காந்தியே தலையிட்டு, 'இதனால் ஷபானாவுக்கு அதிக விளம்பரமும் முக்கியத்துவமும் கொடுத்தது போலாகிறது' என்று கடிந்து கொண்டதால், தடை நீங்கியது.


கே: நீங்கள் அரசியலில் நேரடியாக இறங்குவது பற்றி யோசிக்கவில்லையா?

ப: அத்தகைய எண்ணம் எனக்கு இருக்கிறது. ஆனால் அதற்குரிய காலம் இன்னும் வரவில்லை என்று நினைக்கிறேன்.

வயிற்றைப் போன்றதே மனமும்; எவ்வளவு திணிக்கிறோம் என்பதன்றி, எவ்வளவு ஜீரணித்துக் கொள்கிறது என்பதே முக்கியம்.

— ஆல்பர்ட் ஜோ.

— புனிதவல்லி இளங்கோ.



கே: இந்தியாவின் தலையாயப் பிரச்னைகளான ஏழ்மை, கல்வியின்மை — இவற்றுக்குத் தீர்வு என்னவென்று நினைக்கிறீர்கள்?

ப: இந்தியாவை ஆட்சி செய்வதென்பது எளிதானது அல்லதான்; பலவீனங்களற்ற ஆளும் கட்சி, பலமான எதிர்க்கட்சி என்று இரண்டும் இணையான சக்தியுடன் செயல்பட வேண்டும். காந்தியப் பொருளாதாரத்துடன் இன்றைய விஞ்ஞான ரீதியான தொழிலறிவையும் கலந்து கிராம முன்னேற்றத்துக்கு ஏற்ப திட்டங்கள் தீட்ட வேண்டும். மத்தியிலேயே அத்தனை அதிகாரத்தையும் வைத்துக் கொள்ளாமல், மாநிலங்களுக்கு அவற்றை பகிர்ந்தளிக்க வேண்டும். நேர்மையான முறையில் செயல்படக் கூடிய பஞ்சாயத்து ராஜ் வரவேற்கத்தக்கது. நிர்வாகம் சுறுசுறுப்படைய வேண்டும்; எல்லாமே தூய்மைபடுத்தப்பட வேண்டும்.

கே: இந்தியப் பெண்களின் நிலைபற்றி... அவர்கள் முன்னேற்றத்துக்கென்று பிரத்யேகமாக ஏதேனும் செய்கிறீர்களா?

ப: பெண்களின் அந்தஸ்தை பொறுத்த வரையில் இந்தியா மிகவும் விசித்திரமான நிலையிலுள்ளது. ஒரு பக்கம் பெண்ணைப் பிரதமராக ஏற்றுக் கொள்கிறோம்; மற்றொரு பக்கம் அவளை வரதட்சணைக்காகத் தீயிட்டுக் கொளுத்துகிறோம். மனைவியைக் கணவன் அடிப்பதை ஏற்கிறோம்; கணவனைப் பிரிந்து மனைவி வாழ்ந்தால் 'அவமானம்' என்கிறோம். இன்றையச் சூழலில் ஆணுக்கு நிகரான சந்தர்ப்பங்களைப் பெண்ணுக்கு அளித்தால் மட்டும் போதாது. அவசியமேற்பட்டால் ஆணை ஒதுக்கி விட்டு வாழக்கூடிய பொருளாதார வசதியையும், கல்வியையும் மனோதிடத்தையும் அவளுக்கு அளிக்க வேண்டும். நான் இதுவரை பெண்களுக்கென்று தனிப்பட்டு எதுவும் செய்யவில்லை. ஆனால் சமூகத்தின் பார்வை மெல்ல மெல்ல மாறி வருவதைச் சந்தோஷத்துடன் கவனித்து வருகிறேன்.

— ஜெயஸ்ரீ ராஜ்

மேலட்டை வண்ணப்படம்: **நரசிம்மன்**

ருஷ்யாவிலிருந்து அன்புடன்...

லியூபா என்றால் ரஷ்ய மொழியில் 'அன்பு' என்று அர்த்தமாம். தமது அன்பைத் தமிழின் மீது காட்டி விட்டார் லியூபா பிச்சிஹினா! இந்தியாவைப் பற்றியும் குறிப்பாக, திராவிட நாகரீகம், மொழிகளைப் பற்றியும் தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருந்த லியூபா, பதினெட்டு வயதில் மாஸ்கோவில் உள்ள அந்நிய மொழிகள் ஸ்தாபனத்தில் தமிழ் வகுப்பில் சேர்ந்தார்.

"மொத்தம் நான்கு வருடங்கள் அங்கு படித்தேன். தமிழ் மொழியின் அடிப்படை இலக்கணம் தவிர திருக்குறள், கம்பராமாயணம் போன்றவற்றைக் கற்றுக் கொண்டேன். எங்கள் பாடத் திட்டத்தில் பல தமிழ்ப் பத்திரிகைகளையும் சேர்த்தார்கள். ஆனந்த விகடன் ஜோக்குகளும் கல்கியில் வந்த கதைகளும் நிறையப் படித்தேன். பலப்பல நவீன இலக்கியங்களையும் படித்து முடித்தேன். இந்த வகையில், மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் நாவலில் இருந்து, அழகிரிசாமி, ஜானகிராமன், புதுமைப்பித்தன், நீல. பத்மநாபன், ஆதவன் என்று பலரின் படைப்புகளைப் படிக்க வாய்ப்புக் கிடைத்தது," என்கிறார் லியூபா.



லியூபா பிச்சிஹினா

லியூபாவின் தமிழ் ஆசிரியையும் ஒரு ரஷ்யர்தான். அவர் பெயர் துருப்னிக்கொவா.

'பாரதியும் அவர் படைப்புக்களும்' 'புதுமைப்பித்தனும் அவர் சிறுகதைகளும்' என்ற தலைப்புக்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் தயாரித்து, மாஸ்கோவில் உள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் ஓரியண்டல் ஸ்டடீஸ்' என்ற மதிப்பு வாய்ந்த நிறுவனத்தில் டாக்டர் பட்டங்களைப் பெற்றிருக்கிறார் லியூபா.

புதுமைப்பித்தனின் சிறுகதைகளில் 'நாசக்கார கும்பல்' என்ற சிறுகதைதான் இவரை மிகவும் கவர்ந்ததாம். ஆராய்ச்சிக் கட்டுரைக்காகச் சென்னைக்கு வந்து, புதுமைப்பித்தனின் உறவினர்களையும், நண்பர்களையும், விசாரித்துப் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டது பற்றி ஆர்வத்துடன் சொல்கிறார். நீல. பத்மநாபனின் 'பள்ளி கொண்டபுரம்' இவரைப் பாதித்த மற்றுமொரு நாவல்.

முப்பத்தொன்பது வயதான லியூபாவின் எதிர்காலத் திட்டம், 'நவீன தமிழ் இலக்கியங்களும் அவற்றின் சமூகக் கண்ணோட்டங்களும்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதுவதுதான்!

சந்திப்பு: **ப்ரியன்**

படம்: **ராஜன்**



கிராம தேவதை

நா. காமராசன்

○○ கண்ணிரண்டும் கதைபேச
கழுத்தின்மேல் பூச்சரம்போல்
கையிரண்டும் மாலையிட,
கன்னிமான் நிற்கின்றாள்.

○○ அடையாளம் தெரிகிறதா! — இவள்
யாரென்று சொல்லுங்கள்!

○○ ரத்தத்தைப் பாலாக்கி
ராத்திரியைப் பகலாக்கி
முத்தமிட்டுத் தாலாட்டி,
முற்றத்தில் குளிப்பாட்டி,
பிள்ளைகளை ஆளாக்கும்
பெண்குலத்தின் பொன்விளக்கோ!

○○ வசந்த மலராய்
வயல்வெளியின் தானியமாய்
முக்கனியாய் மானுடத்தின்
முழுவிளைச்சல் தரும்நிலமோ?

○○ ஆலமரக் காற்றும்
அருவிகளின் பாட்டும்
கேட்டு மயங்கி நிற்கும்
கிராமத்துத் தேவதையோ?

○○ பெண்ணைப் படைப்பதனை
பிரம்மன் நிறுத்திவிட்டால்
மண்ணாகும் உலகமென்று
மௌனமாய்ச் சொல்கின்றாள்.

○○ காலத்தின் நிழலாகி
காவியத்தின் பொருளாகி
பூமிக்குத் தாயான
பூரணியைப் பாருங்கள்.

○○ கண்ணான பெண்கள்தான்
கண்கண்ட தெய்வமென்று
காலமெல்லாம் சொல்லுங்கள்
கைகூப்பி நில்லுங்கள்.

வண்ணப்படம்: தேவவிரதா பானர்ஜி.

சீர்தூக்கிப் பார்த்து செயல்படும்
டெபாசிட்தாரர் ஒருவரின் கணிப்பு!

நாட்டிலுள்ள 450 நிதி நிறுவனங்களுள் சக்தி பைனான்சை நான் ஏன் தேர்ந்தெடுத்தேன்?



“அதன் அபரிமிதமான வளர்ச்சிதான். 31.3.1989 அன்றுடன் முடிவடைந்த ஆண்டில், தொழிலில் இதுவரை எவருமே கண்டிராத வகையில் அதன் நிகர வருடாந்திர டெபாசிட் பெருக்கம் ரூ.24.87 கோடிகள். போட்டிகள் மிகுந்த தொழிலில் இச்செயலாக்கம் நிர்வாகத்தின் சிறப்புமிகு செயல்திறனை எடுத்துக் காட்டுகிறது.”

உண்மையை டெபாசிட்தாரர் தெளிவாக அறிந்துள்ளார். மேற்குறிப்பிட்ட வருடாந்திர நிகர டெபாசிட் பெருக்கம் பொருத்த அளவில், எங்களுக்கு அடுத்தபடியாக இருப்பவர்கள் எங்களது சாதனையில் 65% மட்டுமே பெற்றுள்ளனர். அநேகமாக ஒவ்வொரு வருடமும் சக்தி பைனான்ஸ் தனது திட்ட குறியீட்டிற்கும் அதிகமாகவே டெபாசிட்டுகளை திரட்டுகிறது. இதனுடன் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை அதனை தெளிவாக விளக்குகின்றது. கடந்த கால சாதனைகள் அளித்த தூண்டுதல்கள் காரணமாகத்தான், திட்ட இலக்கு ரூ.100 கோடிகளாக குறிக்கப்பட்டது.

ஒப்பிட முடியாத ஒரு சாதனை (ரூபாய்கள் கோடிகளில்)

மார்ச் 31 அன்றுடன் முடிந்த வருடம்	குறிக்கப் பட்ட குறியீடு	அவ்வருடத்தில் திரட்டப்பட்ட புதிய டெபாசிட்டுகள்	வருட கடைசியில் இருந்த நிலுவை	அவ்வருடத்தின் நிகர பெருக்கம்
1985	-	1.45	3.41	1.42
1986	10	7.61	10.47	7.06
1987	20	16.95	25.12	14.65
1988	40	25.59	43.19	18.07
1989	70	39.17	68.06	24.87

தேசிய அளவில் உள்ள இரண்டு தலைசிறந்த பிரபல "கால எல்லைக்குட்பட்ட கடன்களை" அளிக்கும் நிதி நிறுவனங்களான இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா ஆகிய இரண்டும், சக்தி பைனான்ஸிற்கு முறையே ரூ.5 கோடிகள் மற்றும் ரூ.3 கோடிகளை "கால எல்லைக்குட்பட்ட" கடன்களாக அளித்துள்ளது.

ஆய்திறமிக்க முதலீடு செய்பவர்கள் சக்தி பைனான்ஸை நம்புவதில் வியப்பேதுமில்லை.

சக்தி ஃபைனான்ஸ் லிமிடெட்

எஸ்.என்.பை. நிர்வாக தலைவர்.

பதிவு அலுவலகம்: 475, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர் - 641 018

ACCEPTS/RENEWS DEPOSITS

FIXED DEPOSITS:

Period (Months)	Interest (Per Annum)
25, 30, 36, 42, 48, 54, 60	14%

CASH CERTIFICATES:

Period (Months)	Amount of Deposit	Amount Repayable on maturity Rs.	Annual Yield %
25	Rs. 1,000	1,336	16.13
30		1,416	16.64
36		1,518	17.27
42		1,628	17.94
48		1,745	18.63
54		1,871	19.35
60		2,006	20.12

The deposit more than doubles in five years!

RECURRING DEPOSITS:

Period (Months)	Amount of Deposit (Monthly)	Amount Repayable
25	Rs 50/-	Rs 1,459/-
30		Rs 1,804/-
36		Rs 2,247/-
42		Rs 2,721/-
48		Rs 3,230/-
54		Rs 3,775/-
60		Rs 4,360/

Subject to deduction of tax at source, wherever applicable

Subject to the terms and conditions attached to the Application Form

i) Minimum of Rs 1,000/- for Fixed Deposits/Cash Certificates

ii) **Interest on Fixed Deposits will be paid quarterly at the beginning of each quarter. Optionally interest can also be paid monthly/half-yearly/yearly or at end of the respective periods on maturity.**

iii) **Post-dated Interest Warrants for the entire period of the Deposit issued in advance along with the Fixed Deposit Receipts, payable at par at all Branch Offices of Canara Bank in India.**

iv) **All Branch Offices of Canara Bank, The Karur Vysya Bank Ltd., and The City Union Bank Ltd., will accept remittances on our behalf, free of charge to the depositor. Such amounts will earn interest from the date of such remittances.**

v) **At our Main Offices at Coimbatore, Madras, Madurai and Bangalore, Cash Certificates/Fixed Deposit Receipts together with Post-dated Interest Warrants for the entire period of deposit will be issued within minutes of making the payment.**

vi) The Application Forms for Deposit can also be had from all Offices of the Company, as also those of important Brokers throughout the country

vii) Deposits from Non-Residents of Indian Nationality/Origin will also be accepted on non-repatriation basis.

BRIEF PARTICULARS OF THE COMPANY:

a) Name of the Company: **SAKTHI FINANCE LIMITED**

b) Date of Incorporation: 30-3-1955

c) Business carried on by the Company with details of branches

i) Hire Purchase/Lease Financing of Commercial Vehicles, Equipment, etc.

ii) Leasing of Safe Deposit Lockers

Branches at Bangalore (Richmond Circle, Jayanagar), Bombay (Nariman Point, Chembur and Santa Cruz), Calicut, Coimbatore (R.S. Puram, Cross Cut Road and Avanashi Road), Cannanore, Ernakulam, Erode, Gobichettipalayam, Karaikudi, Kottayam, Kumbakonam, Madras (T. Nagar, Adyar, Anna Nagar, Ashok Nagar, Mylapore, George Town and Mount Road), Madurai (North Veli St., Anna Nagar), New Delhi, Namakkal, Palghat, Pollachi, Pondicherry, Salem, Sakthi Nagar, Tirunelveli, Trichy, Trichur, Trivandrum, Tuticorin and Vellore

d) i) Subsidiary of the Company
Sakthi Financial Services (Cochin) Pvt. Ltd.

ii) Business carried on by the Subsidiary
To deal in Shares, Securities, etc. as a Member of the Stock Exchange.

e) Brief Particulars of the Management
The Company is managed by its Executive Chairman, assisted by two Joint Managing Directors under the supervision and control of the Board

f) Names, addresses and occupations of Directors

Name	Address	Occupation
SRI S.N. PAI (Executive Chairman)	10, II Cross Road, R.A. Puram, Madras - 600 028.	Finance Specialist
SRI M. MANICKAM * (Vice Chairman)	"Sakthi Nilayam", Nachimuthu Gounder Street, Pollachi - 642 001.	Industrialist
SRI M. BALASUBRAMANIAM * (Joint Managing Director)	5, N.K.P.M. Lay Out, Coimbatore - 641 018.	Business
SRI N.K. PAI * (Joint Managing Director)	30 Pioneer Lay Out, Subramaniapuram P.O., Coimbatore - 641 040	Company Executive
SRI P.C. MATHEW I.C.S. (RETD)	10, III Street, Harrington Avenue, Madras - 600 031	Management Specialist
SRI V.B. DESAI	29B, Debonair, 15/4B, Sewarkar Marg, Bombay - 400 016	Stock & Share Broker
SRI K.R. RAMAMANI	105, Dr. Radhakrishnan Salai, Madras - 600 004	Advocate
SRI S.A. MURALI PRASAD	4, Brindavan Street, Madras - 600 004.	Management Consultant
SRI K.R.V. RAMANI	"Surabhi", 153, Kalidas Road, Coimbatore - 641 009	Advocate
SRI A. SHANMUGHASUNDARAM	8, N.K.P.M. Lay Out, Ramaraj Road, Coimbatore - 641 018	Business

* as from 29-9-1989

g) & h) Profits & Dividends

Year Ended	Profit before tax	Profit after tax (Rupees in lakhs)	Dividend	Percentage Equity	Percentage Pref.
31-3-1987	181.76	153.76	34.07	22	10
31-3-1988	325.69	274.76	42.98	24	10
31-3-1989	413.63	347.64	66.77	26	10

i) Summarised Financial Position of the Company

(Rupees in lakhs)

LIABILITIES	As at 31st March 1989	1988	ASSETS	As at 31st March 1989	1988
Share Capital	308.83	308.83	Fixed Assets	3562.55	2032.33
Reserves and Surplus	749.20	478.32	Investments	248.74	83.79
Secured Loans	808.74	304.65	Current Assets	5200.52	3756.87
Unsecured Loans	6855.69	4220.63	Loans and Advances	730.93	478.11
Current Liabilities & Provisions	2087.91	1044.91	Misc. Expenditure (Share Issue Expenses)	5.63	6.74
Total	9798.37	6357.34	Total	9798.37	6357.34

j) The Company is contingently liable to pay Sales Tax of Rs 23.58 lakhs (previous year Rs [illegible] lakhs) on lease rental which matter is now pending with High Courts

k) i) The amount which the Company can raise by way of Deposits: Rs 10523.98 lakhs

ii) The aggregate of Deposits held as on 31-3-1989: Rs 6805.69 lakhs

l) The Company has no overdue deposits other than unclaimed Deposits.

m) i) The Company has complied with the applicable provisions of the Directions.

ii) The compliance with the Directions does not imply that repayment of deposits is guaranteed by the Reserve Bank of India

iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.

The text of this advertisement has been approved by the Board of Directors by a Resolution dated 29th September, 1989

By Order of the Board
For SAKTHI FINANCE LIMITED

(S.N. PAI)
EXECUTIVE CHAIRMAN

Place: Coimbatore
Date: 29th September, 1989

இப்பொழுது நாங்கள் டெபாசிட் தொகைகளுக்குரிய காலாண்டிற்கான வட்டியினை,
ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலேயே அளிக்கின்றோம்.

மணல்வெளி மான்கள்

1

தன் சிரமம் பலித்திருக்கிறதா என்று உடனே முடிவை எதிர்பார்க்கும் தவிப்பு. மேலே போகலாமா?



வியர்த்தது. பின்னங் கழுத்தில் பனியனுக்குள், உடம்பின் ஒவ்வொரு மயிர்க் காலிலும்...

பனியனையும் உரித்துச் சுருட்டிக் கிடாசி விட்டு அப்படியே கிணற்றில், நிற்கிற திட்டி லிருந்தே ஒரு டைவ் அடிக்க வேண்டும்.

'பொறு!' — அவன் உடம்பு அரிப்புக்குக் கட்டளையிட்டான். கட்டியிருந்த லுங்கி அவிழ்ந்தது. ஸ்பானரை ஸக்ஷன் பம்ப் கட்டை மீது வைத்து லுங்கியை இறுகக் கட்டினான்.

இன்னும் இரண்டு சுற்று சுற்றினால் அந்த நட்டு இறுகி விடும். ஸ்பானர்தான் வழுக்குகிறது. கொஞ்சம் வாய் விரிசல். இருந்தாலென்ன? கௌதமுக்குச் சவால்கள் — இப்படிச் சின்னச் சின்ன இடைஞ்சல்கள் பிடிக்கும்.

கௌதம் இரண்டு சுற்று வழுக்கி வழுக்கி டைட் வைத்தான். ஸக்ஷன் பம்பின் நட்டு, மாடு பிடித் திருவிழாவில் பிடித்து நிறுத்திய காளை மாதிரி ஸ்தம்பித்தது.

அவன் ஸ்பானரைக் கீழே வைத்தான். நெற்றி வி ய ர் வை ய விரல் வைத்து வழித்தெறிந்தான்.

ஏழு மணிக்குக் கிணற்றில் இறங்கியது. ஒரு மணி நேரம் ஆகியிருக்கலாம்.

போனது ஃபுட் வால்வ் லெதர் என்று தெரியாமல் ஆதிகேசவன் அலைமோதிப் போனான். கார் நெல்லுக்கு அன்றாடம் நீர்ப் பாய்ச்ச மோட்டார் பம்ப் கை விட்டு விட, பழைய பாணியில் கவலை மாடுகளை நம்பினான்.

ஏழு நாட்களாக மோட்டார் சப்தம் ஓய்ந்து போன கிணற்றில் இனி அது கேட்கும்.

ஆதி கிணற்றுக்கு மேலே நிற்பான்.

குரல் கொடுத்தான்.

"ஆதி... மோட்டாரைப் போடு."

கிணற்றில் சுற்றுச் சுவரில் பட்டு எதிரொலிகள். ஒன்று. இரண்டு. மூன்று முறை...

பதில் வரவில்லை.

எங்கே போய் விட்டான்?

வையவன்


ஸ்பானரை எடுக்க கௌதம் குனிந்த போது அவன் முதுகில் லொட்டென்று குறி பார்த்து அடித்த மாதிரி எதுவோ தாக்கியது. முதுகைத் தாக்கி விட்டு அந்த ஏதோ ஒன்று தாவி விழுந்து தண்ணீரில் மறைந்தது.

சிவுக்கென்று தலைநிமிர்த்தினான்.

கிணற்றுக்கு மேலே சாலும் வடக்கயிறும் தொங்கின.

யாரும் தென்படவில்லை. ஆனாலும் யாரோ விளையாடுகிறார்கள்.

ஆதியா? இல்லை. அவனிடம் ஆதி விளையாட மாட்டான்.



ஸ்பானரை இன்னும் எடுக்கவில்லை. எனவே மீண்டும் குனிந்தான்.

லொட்டென்று மீண்டும் முதுகில் பனியனின் ஈர நைப்புக்கு உறைக்கிற மாதிரி ஒரு கொட்டையளவு ஏதோ விழுந்தது. அதிகம் வலிக்கவில்லை.

வெள்ளி மணலாக அடி தெரிந்த கிணற்று நீரின் இளநீலத்தில் ஒரு சிலும்பல். இப்போது விழுந்தது ஒரு சின்னஞ்சிறு மாம்பிஞ்சு.

கௌதம் மனசில் கௌளி சொல்லிற்று.

''மேலே ஏறி வந்தா என்ன நடக்கும் தெரியுமா நித்யா?''

'நித்யா' என்று கிணற்றில் எதிரொலி வந்தது. மும்முறை.

கிணற்று நீரின் ஒருபுறத்தில், கரை மீதிருந்த நித்யாவின் பிம்பம் சிலும்பலில் தெளிந்தது.

''என்ன பண்ணுவே?'' — நித்யா கேட்டாள்.

அவன் பிம்பத்தைப் பார்த்தே பேசினான்.

''ஆத்து மணல்லே, அன்னக் கூடையை இடுப்பிலே தூக்க வச்சு ஓட ஓடத் தூரத்து



ஒரு நாள் திலகர் நண்பரைச் சந்திக்கச் சென்றார். ஸி.ஐ.டி. ஒருவனும் வழக்கம் போல் பின் தொடர்ந்தான். நண்பரிடம் நேரம் போனதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்த திலகர், விடைபெற்று வெளியே வரும் போது ஸி.ஐ.டி. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்! அவனை அப்படியே விட்டுச் சென்றால் கடமையைச் செய்யாத காரணத்துக்காக அவன் அதிகாரிகளின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடும். எனவே அவனைத் தட்டி எழுப்பி, ''என் வேலை முடிந்து நான் திரும்பிச் செல்கிறேன்; நீ உன் கடமையைச் செய்ய வேண்டாமா? புறப்படு'' என்று கூறி விட்டு நடந்தார் திலகர்.

— எம். கதிர்வேல்.

வேன்.''

''நீ!'' என்றாள் நித்யா — ஏகத்தாளம். கொஞ்சம் சவால்.

கிணற்றின் அலைகள் தத்தித் தத்தி, கோடை வானத்தின் வெளிர் நீலப் பின்னணியில் நித்யாவின் முக பிம்பத்தை அலைக் கழித்தன. அவள் பற்கள் தெரியச் சிரித்தாள்.

''மேலே யாரும் இல்லியா?''

அவன் பிம்பத்தைப் பார்த்துப் பேசினான். அவளும் அவன் பிம்பத்தைப் பார்த்துப் பதில் சொன்னாள்.

''கேக்கறே பாரேன் கேள்வி!''

நாக்கைக் கடித்துக் கொண்டான்.

முட்டாள்! யாராவது இருந்தால் அவள் இப்படி விளையாடுவாளா?

''ஆதி இருப்பானே!'' அவன் சமாளித்தான்.

''நுணா மரத்துப் பம்பு ஷெட்டாண்ட ஒரு கூட்டம் நிக்குது. அவரு அங்கே நிக்கறாரு.''

''கூட்டமா?''

''ஆமா... என்னமோ தகராறுன்னு நெனைக்கிறேன்.''

''சரிதான். இப்பத்திக்கி வர மாட்டான்! அப்ப ஒண்ணு செய்யு...''

''என்ன?''

''கெணத்திலே குதிச்சுடு!''

''ஐயா வந்து காப்பாத்திடுவீங்க...''

''யூ மிஸ் த பாய்ண்ட்.''

''இந்த இங்கிலீஷ்தானே வேண்டாங்கறது. நான் வெறும் ப்ளஸ்டூ. தமிழ் மீடியம். நீ பி.எஸ்.ஸி. — ஒப்புக்கறேன். தமிழ் போதும் எனக்கு.''

நித்யாவின் சிவந்த முகத்தைக் கிணற்றின் மேல் ஏறி, கொஞ்சல் கோபம் ஏற்றுகிற வரிச் செம்மையோடு பார்க்க மனசு தவித்தது.

''கோவம் வந்தாச்சா?''

''பின்னே?''

''நீ பாயிண்ட்டை மிஸ் பண்ணிட்டேன்னேன்.''

''என்ன பாயிண்ட்?''

''நீ குதிச்சா உன்னைக் காப்பாத்தற சாக்கிலே சேர்ந்து குளிக்கலாம் பாரு.''

''இப்ப நெஜமாலும் ஒன் தலை மேல குதிச்சுடுவேன்.''

''இன்னும் சௌகரியம்.''

''வர வர உனக்கு வாய் கொழுத்துப் போச்சு. நான் போறேன்.''

அவள் முகம் விருட்டென்று மறைந்தது.

''நித்யா... நித்யா!''

''என்ன?'' மீண்டும் அவள் பிம்பம்.

''மோட்டார் ஸ்விட்ச் தெரியுமில்லே ஒனக்கு?''

''சொல்லு...''

''அதைப் போடேன். ஃபுட் வால்வ் லெதர் மாத்தினேன். தண்ணி எடுக்குதான்னு பார்க்கணும்.''

''கரெண்ட் போயி அரை மணி நேரம் ஆவுது.''

''வழக்கமா ஒங்க அம்மாதானே துணி துவைக்க வருவாங்க?''

''சொந்தக்காரங்க கருமாதிக்குப் போயிருக்காங்க.''

''அதான் நேரா இங்கே வந்துட்டே.''

''ஆமா. மெக்கானிக்கு பம்ப் ஷெட்டிப்பேருக்குக் கெணத்திலே எறங்கி இருப்பாருன்னு ஞான திருஷ்டியிலே தெரிஞ்சது.'' — மீண்டும் தலை மறைந்தாள்.

''துணி துவைக்கணுமா வேண்டாமா?''

''அதான் கரண்ட்டும் இல்லே.. தண்ணியும் இறைக்கலியே!''

''மாடுங்க நுகத்தடி பூட்டி நிக்குதுங்க இல்லே?''

''நிக்குதுங்க.''

''இரு... தோ வர்றேன்.''

அவன் ஒவ்வொரு செருகாகப் படிக்குப் பதில் கிணற்றோடு பதித்திருந்த ஜல்லிக் கல்லில் தாவி ஏறினான், என்ன வேகமாக ஏறுகிறான்! கால் வழுக்கி விடாது? என்று நினைத்தாள் நித்யா.

அவளுக்கு அவன் வேகத்தின் மீது இலேசான பயம்.

அவன் கடைசி ஜல்லிக் கல்லில் நின்ற போது கண் பூத்து விடுகிற மாதிரி கிழக்கு மேற்காய் ஆற்று மணல் தெரிந்தது. விட்டலாபுரத்திற்கும் அன்னவாசலுக்கும் இடையில் பாலாற்றின் குறுக்கே போட்ட நீண்ட தாம் போகிப் பாதை தெரிந்தது.

கல் பரவிய அந்தப் பாதை மீது எட்டரை மணி ரயிலின் வரவுக்காகப் பூந்துறை ஸ்டேஷனுக்குச் செல்லும் டவுன் பஸ் தெரிந்தது.

அந்த எட்டரை மணி பஸ்ஸைப் பார்க்கும்போதெல்லாம் ஒரு மீன் கொத்தி மாதிரி மனசு இறந்த காலத்திற்குப் பாய்கிறது.

ஒரு நொடி — இல்லை; ஒரு நொடியில்

ஒரு சிறு கூறு...

அந்த பஸ்ஸில்தான் பூந்துறையில் அம்மா இறங்குவாள் என்ற ஆவலோடு பதினாலு வயது கௌதம் பூந்துறைக்குப் போனான். அவள் வந்தாள், சவமாக!

மனசு விசித்திரமானது. பழக்க வாசனையுள்ள புறா மாதிரி ஒரே கூட்டிற்குத் திரும்பித் திரும்பிப் போகிறது.

நினைவை உதறி விட்டு நித்யாவைப் பார்த்தான். பத்தொன்பது வயசில் எதற்குக் கோடாலி முடிச்சு?

சாக்லேட் பாவாடை. பொன்னிழை ஓடிய கறுப்புத் தாவணி...

அவன் அவள் திலகத்தை, கண்மையை, முகத்தை ரசித்துக் கொண்டே நிற்பதை நித்யாவும் ரசித்தாள்.

''இவ்வளவு சிவப்பு ரொம்ப ஓவர்!''

அவன் தன் நிறத்தைச் சொல்கிறான் என்று அவளுக்கும் புரிந்தது.

''என்ன பண்ணச் சொல்றே? கறுப்பு பெயிண்ட் அடிச்சுக்கவா?''

''முயற்சி...''

''இதைச் சொல்றதுக்குத்தான் கெணத்தை விட்டு மேல வந்தியா?''

பூட்டிய நுகத்தடியோடு சிவனே என்று நிற்கும் கவலை மாடுகளை நோக்கி அவன் நடந்தான்.

''தா... ஹைற!'' என்று மாடுகளை அதட்டினான். ஒன்று திரும்பிப் பார்த்துக் கொம்புகளை ஆட்டிற்று. கலகலவென்று கழுத்துச் சலங்கை மணிகள் அதிர்ந்தன.

''அது முட்டற மாடு. ஒன்னைக் கெணத்துலே தள்ளப் போவுது'' என்று நித்யா மிரட்டினாள்.

''இப்பப் பாரு...''

கௌதம் அவற்றின் அருகே சென்று கழுத்தை நீவி, முதுகை இதமாகத் தட்டிக் கொடுத்தான். கொம்பை ஆட்டிய மாட்டின் முதுகுத் தோல் சிலிர்த்துத் துடித்தது.

வடக்கயிற்றைப் பிடித்துக் கொண்டு பின்னோக்கி இழுத்தான். மாடுகள் இரண்டும் பின்வாங்கி நடந்தன. கிணற்றை எட்டிப் பார்த்தான். சால் கிணற்று நீரை முத்தமிட்டது. அமிழ்ந்தது. நிறைந்தது.

'தா... ஹைற' என்று மாடுகளைத்தட்டி விட்டதும், தாழ்வாகக் குழி போல் இறங்கிய நடைபாதையில் அவை நகர்ந்தன. கூடவே போய் ஒருவாகில் சிவுக்கென்று வடக் கயிற்றின் மீது உட்கார்ந்தான். அவற்றின் இழுவைப் பளு சற்றே குறைந்தது.

கிரிகிரிகிரியென்று ராட்டின சங்கீதம். இன்னும் கொஞ்சம்.. இன்னும் கொஞ்சம் என்று கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல.

தொட்டியில் கொக்கரித்துக் கொண்டு தண்ணீர் பாய்ந்தது.

''பரவால்லே. எண்பது மார்க்!'' என்றாள் நித்யா.

திரும்பி அவளைப் பார்த்தான். அவள் கண்களில் வேறு வெள்ளம். பொய்க் கூச்சமின்றி, மாசுபடாத சௌஜன்யத்தோடு. அந்த வெளியீட்டிலேயே கிட்டும் பரவசத்தோடு....

...தொட்டி நீர் மாதிரி மனசுள் நிறைந்தது. மாடுகளை விட்டு விட்டு...

அவன் இச்சை ஓடிய ஓட்டத்தை இழுத்துப் பிடித்தான் — மூக்கணாங்கயிறு மாதிரி. வேலை முக்கியமானது. உரம் ஊட்டுவது!

''ரெண்டு சாலோட நிறுத்திக்கோ. நான் மொதல்லே துணியை நனைச்சுக்கணும்!''

இரண்டாவது சாலுக்கு மாடுகளைக் கிணற்று மேட்டுக்கு ஏற்றும் போது தான் கௌதம் திரும்பிப் பார்த்தான்.

நுணா மரத்துப் பம்பு ஷெட் தெரிந்தது. சிறு கூட்டம். ஆதி கையை ஆட்டி ஆட்டிப் பேசும் அங்க அசைவு.

தகராறு யாருடன்?

சால் கிணற்றில் அமிழ்ந்து சாலுடன் இணைந்த தொண்டலக் கயிறு இழுத்தது. ஆதி கையை நீட்டி நீட்டிப் பேசக் கண்ட அதிர்ச்சியில் கௌதம் சால் நிரம்பியதைப் பொருட்படுத்தவில்லை.

ஆதி அப்படிப் பேசுகிறவன் அல்ல!

கன்னத்தில் அறைந்தால் கூட மென்று விழுங்கி வாங்கிக் கொள்பவன்.

கூட்டத்தைப் பிளந்து, இழுத்துப் பிடித்த இரண்டு புஜங்களை உதறிக் கொண்டு, நுணா மரத்துப் பம்பு ஷெட்டில் குடியிருக்கும் மாசிலா, ஓங்கி ஆதி மார்பில் ஒரு குத்து விட்டது இங்கிருந்து தெரிந்தது.

ஆதி பதிலுக்கு அவன் மீது தாவி விட்டான். அதற்குள் நாலைந்து பேர் இழுத்து, அவனைத் தடுத்துக் கொண்டு நின்றனர்.

''மாட்டுக்காரே'' நீ இப்படி ஓட்டினா நான் துணியை நனைச்ச மாதிரிதான்!''

நித்யா அதட்டினாள்.

கவனம் திருப்பி, நிற்கும் மாடுகளை தட்டிக் கொடுத்தான்.

இரண்டாவது சால் நீர் தொட்டிக்குள் கொப்புளித்தது.

''பழைய டி. வி. யை வித்துட்டுப் புதுசா கலர் டி. வி. வாங்கச் சொல்லி என் மனைவி இப்ப நச்சரிக்கிறதேயில்லே...''

''ஏங்க...?''

''நீயும்தான் பழசாயிட்டேன்னு ஒரு நாள் பேச்சுவாக்கில் சொன்னேன்...''

— மணியன் தர்மலிங்கம்.



அருள்வாக்கு



மனஸ் கவடு விட்டுக் கொண்டு நானாவித ருசி பேதங்களில் போனாலும் அதன் இயற்கையிலேயே அதை விட்டுப் பிடித்துக் கொஞ்சம் கொஞ்சமாக வழிக்குக் கொண்டு வந்து ஒன்றிலேயே நிற்பதற்குப் பக்குவப்படுத்தத்தான் மதம் ஏற்பட்டிருக்கிறதேயொழிய, எடுத்த எடுப்பிலேயே மனஸை ஒன்றிலேயே அமுக்கிப் போடுவதற்கில்லை. இப்படி வற்புறுத்திப் பண்ணினால் மனஸின் இயற்கைப்படி அது ஈடுகொடுக்க முடியாமல் திணறி, திமிறிக் கஷ்டப்பட்டுக் கொண்டு முடிவிலே ஜடம் மாதிரியோ, இல்லாவிட்டால் எதிர்த் திசையில் வெறித்தனமாகவோதான் போகும். அதனால், நமது மதம் செய்கிற முதல் காரியம், நானாவிதமான லௌகிக ருசிகளிலேயே ஸந்தோஷிக்கிற மனஸை நானாவிதமான தெய்விக ருசிகளைக் காட்டி ஸந்தோஷப்படுத்தி, அந்த மனஸின் அழுக்கை எடுத்துத் தெளிவு பண்ணுவதுதான். இப்படி நன்றாக அழுக்கு போய், தெளிந்த தெளிவாக ஆகிப் பக்குவப்பட்ட அப்புறம், முடிவில்தான் நானாத்வ ரூபமான த்வைத அனுபவங்களை விட்டு ஒன்றேயான அத்வைதம் என்று கொண்டு போவது.

அதனால் பிள்ளையார், ஸுப்ரமண்ய ஸ்வாமி, அம்பாள், சிவன், விஷ்ணு, ராமன், க்ருஷ்ணன், நவக்ரஹம், ஐயனார் என்று எல்லாவற்றையும் வைத்துக் கொண்டே விதவிதமான அலங்காரம் பண்ணி, ஒவ்வொன்றுக்கும் அததற்கான நியமங்களை, அனுஷ்டானம் பண்ணி, ருசி பேதத்திலேயே நிறைவு காண்கிற மனஸுக்கு ஸந்தோஷம் கொடுத்துக் கொடுத்து... அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மேலே உசத்திக் கொண்டு போவோம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

''நுணா மரத்துப் பம்பு ஷெட்டிலே அடிதடி போல இருக்கு நித்யா!''

அவளும் திரும்பினாள்.

தூரத்தில் நுணா மரத்தடியில் கூட்டம் இரு பிளவாக ஆதியையும் மாசிலாவையும் பிரித்து நிறுத்திக் கொண்டிருந்தது.

''யாரு யாரை அடிச்சது?''

''மாசிலா ஆதியை அடிச்சுட்டான்.''

நித்யா பார்த்துக் கொண்டே நின்றாள். முகம் திரும்பாமல் சொன்னாள்.

''இது இத்தோட நிக்கப் போறதில்லே..''

அவள் குரலில் ஏதோ வாக்கு சொல்கிற மாதிரி ஒரு விலக்கம்.

''என்ன சொல்றே?''

''ஆமா! நாலஞ்சு நாளுக்கு முன்னாடி கூட ஊர்ல ஆதியண்ணனுக்கும் மாசிலாவுக்கும் தகராறுன்னு பேச்சு அடிபட்டது.''

''தகராறா?''

''ஒனக்குத் தெரியாது! நீ எங்கே இருக்கே? ஊர் ஊரா பம்பு ஷெட் ரிப்பேருக்குப் போயிடறே...''

''என்ன விஷயம்?''

''ஆதியண்ணன் மாசிலாவுக்குத் தெரிஞ்சவன் யார்கிட்டேயோ துபாய்க்குப் போறதுக்காக ஆயிரம் ரூபாய் பணம் குடுத்திருக்காம்'' ஆறு மாசமாகப் போவுது. இதோ அதோன்னு இழுக்கிறானாம் அந்த ஆளு...

ஆதிக்கு அப்படி ஓர் ஆசை உண்டு என்று கௌதம் அறிவான். இருபத்தெட்டு வயசாகியும் எதிலும் நிலைகொள்ள முடியவில்லை அவனால்.

மேஸ்திரி வேலை செய்தான். டீக்கடை வைத்தான். டைலராயிருந்தான். ஜவ்வாது மலையில் மூங்கில் கூப்பு காண்ட்ராக்டராக இருந்த முனீம்சாயபுக்கு உதவியாளாய்ப் போனான்.

இந்த நிலம் கூட குத்தகைப் பயிர்தான். நிலைகொள்வதற்கு, தன்னைக் கண்டுபிடிப்பதற்கு, அவன் செய்து வரும் இடைவிடாத பரிசோதனைகளில் இதுதான் சமீபமானது.

துபாய்! எத்தனை மனக்கோட்டைகளுக்கு அங்கே கதவு திறந்திருக்கிறது? தங்கம் தெருவிலே கொட்டிக் கிடக்கிறதென்று போகிறார்களோ!

''பா..பா..பாபா'' என்று குரல் கேட்டுத் திரும்பினான்.

தலையில் கஞ்சிக் கலயத்தோடு ஆதியின் அம்மா மங்கலட்சுமி நின்றாள்.

அவள் பிறவி ஊமை.

மகன் எங்கே என்று கேட்கிறாள்.

என்ன சொல்வது?

''கஞ்சிக் கலயத்தை வச்சுட்டுப் போகச் சொல்லு. வேற விவரம் சொல்லாதே. அதுக்கு மனசு துடிச்சுடும். வாயும் பேச முடியாம பேபேன்னு கத்திக்கிட்டு கண்ணிலே மாலை மாலையாத் தண்ணி விடும்'' என்றாள் நித்யா.

அவனுக்கும் அது சரியென்று பட்டது.

(தொடரும்)



நளினத்துடன் வலிமையும் வேண்டும்!

விளையாட்டுதான்... ஆனால் அதை ரொம்ப 'சீரியஸா'க எடுத்துக் கொண்டு விட்டார்கள் இந்த ஐந்து பெண்களும். இல்லாவிட்டால் ஒரு நாளைப் போல் காலை நாலு மணிக்கெல்லாம் எழுந்து, தயாராகி, சென்னை போட் கிளப்புக்குப் போய், ஐந்தே முக்கால் மணிக்கே பயிற்சியைத் தொடங்குவார்களா...? முதல் பதினைந்து இருபது நிமிடங்களுக்கு எளிமை




• விஜயா



• காயத்ரி




• பவித்ரா



• சதுரா

• ஆர்த்தி



யான உடற்பயிற்சிகள், பிறகு சுமார் ஒன்று முதல் ஒன்றரை மணிநேரம் வரை பக்கிங்காம் கால்வாயில் படகு செலுத்தும் விளையாட்டில் பயிற்சி; கரையேறியதும் பளு தூக்கும் பயிற்சி; இவ்வளவும் முடிந்ததும், கல்லூரி, படிப்பு, அஸைன்மெண்ட், டெஸ்ட், எக்ஸாம் — என்று மற்ற எல்லா கல்லூரி மாணவிகளும் சந்திக்கும் சவால்கள்....

பளு தூக்குவது வேண்டுமானால் சிரமமான காரியம், உல்லாசமாகப் படகு ஒட்டுவதில் என்ன பெரிய கஷ்டம்? என்று சிலர் கேட்கக்கூடும். படகு செலுத்துவோரைப் பார்த்தால் அது ரொம்ப எளிமையான காரியமாகத்தான் தோன்றும். ஆனால் துடுப்பு பிடித்துப் பாருங்கள்... தண்ணீரின் அழுத்தத்தைத் துளைத்து முன்னேற முடியாமல் தோள்கள் விட்டுப் போகும்; படகு ஒரே இடத்தில் வட்டமடித்துத் தள்ளாடும். உள்ளங் கைகள் கொப்பளித்துப் போகும்...

ஆர்த்தி, விஜயா, காயத்ரி, பவித்ரா, சதுரா என்ற ஐந்து பெண்களும் ஆரம்பத்தில் இந்தக் கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்கத்தான் செய்தார்கள். ஆனால் கை புண்ணாவது பற்றியும் வெயிலில் தோல் கறுத்துப் போவது பற்றியும் கவலைப்படவில்லை. விடாது பயிற்சி செய்தார்கள். விளைவு: தேசிய அளவிலான பெண்கள் படகு செலுத்தும் போட்டியில் (rowing) தமிழ்நாடு சார்பாகப் பங்கேற்று, முதலாவதாக வந்தார்கள். பிறகு சண்டிகரில் நடந்த ஆசிய நாடுகளுக்கிடையேயான பெண்கள் படகு செலுத்தும் போட்டியில் இரண்டாவதாக வந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்கள்.

ஐந்து பெண்களையும் சென்னை போட் கிளப்பில் சந்தித்துப் பேசினோம்:

''உங்களுக்கு இந்த விளையாட்டில் ஆர்வம் எப்படி ஏற்பட்டது....?''

''எங்களுள் விஜயா தவிர மற்ற நால்வரின் குடும்பத்தினருக்கு இந்த விளையாட்டில் ஆர்வம் இருக்கிறது. பெற்றோர் அல்லது உறவினர்கள் சென்னை போட் கிளப் உறுப்பினர்கள். அவர்கள் மூலமாக இந்த விளையாட்டில் ஆர்வம் வந்து அவர்கள் ஊக்கத்தால் வளர்ந்தது... விஜயா மட்டும் சுயமாகத் தோன்றிய ஆர்வத்தால் வந்து சேர்ந்தாள்.''

''ஆரம்ப காலப் பயிற்சி பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்...''

''முதல் முதலில் 'பாங்க் டப்' (bank tub) எனப்படும் நகராத படகில்தான் அமர்ந்து பயிற்சி எடுத்துக் கொண்டோம். நுட்பமான அசைவுகள் மூலம் படகைக் கட்டுப்படுத்துவது எப்படி என்று தெரிந்து கொண்டோம். அதற்குப் பிறகு உல்லாசப் படகுகளைச் செலுத்த அனுமதிக்கப்பட்டோம். அவற்றில் சிறிது காலம் பயிற்சி பெற்று, 'கிளிங்கர்' என்ற ஒரு வகைப் படகு செலுத்த 'ப்ரமோஷன்' கிடைத்தது. ஒவ்வொரு கட்டத்திலும் படகின் வேகம் அதிகரிக்கும். வேகம் அதிகரிக்க அதிகரிக்கக் கட்டுப்படுத்துவதும், திசை மாறாமல் செலுத்துவதும் கடினமா

கும்...''

''இந்த விளையாட்டின் தனித்தன்மை என்ன?''


''சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் படகு செலுத்த விரும்புபவர்களுக்கு ஒரு மல்யுத்த வீரனின் வலிமையும் ஒரு பாலே நடனக் கலைஞரின் நளினமும் ஒருங்கே அமைந்திருக்க வேண்டும். துடுப்பு வலிப்பதற்குத் திண்மையான தோள்கள் இருந்தால்தான் முடியும். அதற்காகத்தான் நாங்கள் பளு தூக்கும் பயிற்சி செய்கிறோம். இந்தப் பயிற்சியைக் கூட ஏடாகூடமாகச் செய்தால் உதவிகரமாய் இருப்பதற்குப் பதில் உபத்திரவமாகிவிடும். அதனால் மிகுந்த கவனம் தேவை... மேலும், ஐந்து பேர் சேர்ந்து ஒரு படகைச் செலுத்தும் போது ஒருத்தர் சிறிது தவறாக அசைந்தால்கூட படகு திசை மாறிவிடும்; அல்லது வேகம் குறையும்; ஐவரும் ஒருவராகச் செயல்பட வேண்டும். இதற்குத்தான் ஐந்து பேரும் ஒன்று சேர்ந்து பயிற்சி செய்கிறோம்.

''ஒருத்தர் 'காக்ஸ்' எனப்படும் படகின் ஒரு முனையில் அமர்ந்து கயிறுகளைக் கொண்டு படகு கோணலாகச் செல்லாமல் சீராக நூல் பிடித்த மாதிரி செலுத்துவார். மற்ற நால்வரும் அவரவர் இடத்தில்தான் உட்கார்ந்து கொள்வோம். இடத்துக்குத் தக்கபடி அசைவுகளில் நுணுக்கமான மாற்றங்கள் இருக்கும். எங்கள் எடை கூடப் படகின் வேகத்தைப் பாதிக்கும். சராசரியாக ஐம்பத்தேழு கிலோ எடைதான் நாங்கள் இருக்க வேண்டும். 'காக்ஸ்' பொறுப்பு வகிப்பவர் குறைந்தபட்சம் நாற்பத்தைந்து கிலோ எடையுள்ளவராக இருக்க வேண்டும். சர்வதேசப் பந்தயங்களில் எடை விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருப்பார்கள். 0.25 கிராம் எடை கூடுதலாக இருந்தால் கூட, பந்தயம் ஆரம்பிக்கும் முன்னர் எங்களை ஓட வைத்து, வியர்வையை வெளியேற்றுவதன் மூலம் எடையைக் குறைப்பார்கள்... இவ்வளவு நிபந்தனைகளும் நுணுக்கங்களும் மற்ற பிரபலமான விளையாட்டுக்களில் கிடையாது அல்லவா...?''

என்று அந்த ஐந்து பெண்களும் சொன்னார்கள்.

'உங்கள் ஒட்டிய வயிறுகளையும் திரண்ட தோள்களையும் பார்த்தாலே தெரிகிறதே' என்று மனத்துக்குள் எண்ணியபடி அவர்களுடைய சண்டிகர் அனுபவங்களைப் பற்றிக் கேட்டோம். அவ்வளவுதான்! ஒரேயடியாகப் பொரிந்து தள்ளிவிட்டார்கள்...

''ஒரு மாத காலம் சண்டிகரில் பயிற்சி முகாம். அதன் இறுதியில் சர்வதேசப் போட்டி. முகாமுக்கு வந்திருந்த எல்லா அணிகளும் 'சுக்னா' என்ற ஏரியில்தான் பயிற்சி செய்ய வேண்டும். ஒரு சமயத்தில் ஓர் அணிதான் பயிற்சி செய்ய முடியும் என்பதால், சிறுபான்மையினரான பெண்கள் அணிகள் இரண்டுக்கும் (எங்கள் அணி தவிர மேற்கு வங்க அணியும் வந்திருந்தது) கடைசியில்தான் நேரம் ஒதுக்கப்பட்டது. எல்லா ஆண்கள் அணிகளும் பயிற்சி



முடித்து வெளியேறுவதற்குள் வெயில் உச்சிக்கு வந்துவிடும். சாப்பிட்டு விட்டுப் பயிற்சி செய்ய முடியாது என்பதால் காயக் காயக் காத்திருப்போம். வியர்க்க விறுவிறுக்கப் பயிற்சி செய்வோம்.

''தங்கும் இட வசதிகளும் ஆரம்பத்தில் சரியாகச் செய்து தரப்படவில்லை. பிறகு திருமதி மில்கா சிங் என்பவரின் தலையீட்டால் நிலைமை பெருமளவு சீரடைந்தது. பந்தயத் துவக்க தினத்தில் அணிவதற்குச் சீருடைகள் தைத்துத் தருவதிலும் தாமதம். அதனால் நாங்கள் துவக்க விழாவுக்குக் கால தாமதமாகப் போய்ச் சேர்ந்து கிண்டலுக்கு உள்ளானோம்.

பந்தயத்தின் போதும் ஒரு மாற்றுக் குறைவான 'எய்லிங்ஸ்' என்ற படகே எங்களுக்குத் தரப்பட்டது. ஆண்கள் அணிக்கு மட்டும் மிகச் சிறந்த வேகமான 'எம்பாக்கர்' படகைத் தந்தார்கள். இந்தோனேஷியப் பெண்கள் அணி ஆறே வினாடிகள் வித்தியாசத்தில் எங்களைத் தோற்கடித்தது. எங்களுக்கும் சரியான படகு வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் முதலாவதாக வந்திருக்கக் கூடுமே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை...''

''இவ்வளவையும் மீறி நீங்கள் சிறப்பாகத்தானே செயலாற்றியிருக்கிறீர்கள்...! தமிழ்நாட்டுக்கும் தாய்நாட்டுக்கும் பெருமை சேர்த்திருக்கிறீர்கள்...?''

''எங்கள் சாதனை, வெற்றி எல்லாவற்றையும் நாங்கள் எங்கள் பயிற்சியாளர் சாக்கோ கண்டடில் அவர்களுக்குத்தான் சமர்ப்பிக்கிறோம். எங்கள் ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட கவனம் செலுத்திப் பயிற்றுவித்தார். தமது சொந்தச் செலவில் சண்டிகர் வந்து, தமது சொந்த அலுவல்களையெல்லாம் மறந்துவிட்டு எங்களுக்குப் பயிற்சியளித்தார். அவரை நீங்கள் சந்திக்க வேண்டும்...''

சாக்கோ கண்டத்தில்லைச் சந்தித்தோம். அவரோ, ''இந்தப் பெண்களின் வெற்றிக்குக் காரணம் இவர்களுடைய கடுமையான உழைப்பும்பயிற்சியும்தான்'' என்று மிகப் பெருந்தன்மையுடன் கூறி முடித்து விட்டார்!

சந்திப்பு: **சீதா ரவி**

வண்ணப்படம் மற்றும் புகைப்படங்கள்: **யோகா**

24

இரண்டாவது சூரியன்

உடம்பு முழுக்க பயத்திலும் கலவரத்திலும் தூக்கிப் போட்டது. நினைக்க நினைக்க அருவருப்பும் ஆத்திரமும் நெஞ்சுக்குள் கிளறின.

"அதான் அதிகமா ஆடாத. விடியோகாரு அந்தாளை வசம்மா புடிச்சுத் தூக்கிக்கிட்டுப் போயிட்டாரே — நீயேன் இன்னும் உதடு கடிச்சுக்கிட்டு தவிக்கிறே?" — நாகம்மாள் தோளில் கைவைக்க உடம்பு இன்னும் நடுங்கிற்று.

உறுத்து. நாகம்மாவை ஊடுருவிப் பார்த்தாள்.

உனக்குப் பழக்கமாகிவிட்டதடி! எல்லா வேதனைகளும் சாதாரணமாகி விட்டன. புருஷனிடம் தலைமயிர் இழுபட்டு நடந்து, தெருவில் தள்ளப்பட்டு, புரண்டு நிமிர, மிதி வாங்கி, புரள அடி வாங்கி, வலியில் அலறுவதிலேயே 'எல்லாம் தீர்ந்துவிட்டது' என்று நினைப்பு எழுந்து, உன் அலறலில் அவன் வெற்றி பெற்றதும்... நல்லவேளை தலைமுடியை விட்டானே என்று நிம்மதி எழுந்து... நானும் உன்னை மாதிரிதானடி இருந்தேன். இன்று யுத்தம் இரண்டு அறையோடு நின்று விட்டது என்று நானும் சந்தோஷப்பட்டிருக்கிறேன். நல்லவேளை. புருஷன் அடித்து, பக்கத்து வீட்டிற்குத் தெரியவில்லை என்று மகிழ்ந்திருக்கிறேன்.

நாகம்மா! இந்த இடைவெளிக்குப் பிறகு திருமணத்தைத் தாங்க முடியாது அறுத்துக் கொண்டு வந்து தலைநிமிர்ந்து நின்ற என்னை, என் சுதந்திரத்தை, என்னால் தனித்து இருக்க முடியும் என்கிற என் நம்பிக்கையை, வீட்டுப் படியேறி அசைத்துக் காட்டுகிறேன் பார்' என்று ஆணவம் காட்டுகிற போது, என் தினசரி நிம்மதி குலைக்கிற போது — உள்ளே பொங்கும் சீற்றத்தை நிறுத்த முடியவில்லை.

பேசி வாக்குவாதம் புரிந்தால் சொற்களாலேயே அடித்து வீழ்த்துவேன். வழக்கு என்று தெருவுக்கு வந்து நீதிமன்றம் ஏறினால், எத்தனை ஆயிரம் செலவானாலும் — எத்தனை நாட்கள் இழுபட்டாலும் — தாங்கி, உன் தளையறுப்பேன். என்னைவிட நீ என்ன உசத்தி என்று கொக்கரித்தால், எதில் வேண்டுமானாலும் போட்டி வை. ஜெயித்துக் காட்டுகிறேன் என்று நெஞ்சு நிமிர்த்துவேன். உனக்குத் தெரிந்த தமிழும் உனக்குத் தெரியாத விஞ்ஞானமும் எனக்குத் தெரியும் என்று என்னை நிரூபிப்பேன். நான் இல்லாமல் நீ இல்லை என்கிற உன் மமதையை வேரறுப்பேன். ஆனால் இவையெல்லாம் விட்டுவிட்டு நீ உடல் வலிவு காட்டுகிறாய்! என்னால் எதிர்த்து உன்னை அடித்துப் புரட்ட முடியாது என்கிற தைரியத்தில் என் எதிரே குடித்துவிட்டு ஆடுகிறாய்! என் கூந்தலைப் பற்றி இழுக்கிறாய் — என் விரல்களை நெரித்து வலி உண்டாக்கி, என்னை அலற வைத்து, என்னை ஜெயித்து விட முடியும் என்று எதிர்த்து வருகிறாய். தசை வலிவு காட்டுகிறாய்!

உன் குடியும் கூச்சலும் என்னை அவமானப்படுத்திவிட முடியாது. உன்னை அப்புறப்படுத்த எனக்கு ஆள் தேவைப்பட்டதே, அது அவமானம்! முடி பிடித்து இழுத்தால் என்ன செய்வாய் என்று முஷ்டி மடக்க, நான் செய்வதறியாது திகைக்கிறேனே, அது கேவலம். என்னை ஜெயிக்க உடம்பு பலத்தால்தான் உன்னால் முடியும்.

விடமாட்டேன். இந்த இடத்திலும் உன்னை நான் ஜெயிக்க விட மாட்டேன். 'அடியும் உதையும், குத்தும் வாங்கிப் பழக்கப்பட்டவள் — மறுபடி போடுவோம்!' என்று வந்திருக்கிறாய் இல்லையா? ரௌடித்தனம் காட்டுகிறாய் இல்லையா?

ஆனால் நான் பயந்தது உண்மை! ஆறடி உயர ஆள் எதிரே மாடு மாதிரி தள்ளாடி நிற்க, மிருகம் மாதிரி உறும, கலவரமானது உண்மை. யாரோ நண்பர் அகற்றி உன்னை எடுத்துப் போக, 'அப்பா!' என்று அடங்கியது உண்மை.

இந்தப் பயமும் இந்த விடுதலையும்தான் என்னை அவமானப்பட வைக்கின்றன. உன் இருப்பே எனக்குக் கலவரமாக இருக்கிறதே என்கிற நிலைதான் பெரிய வேதனை.

பானுமதி! உதறு இதை. ஒழித்துவிடு இதை. விடாதே. பெரிதாக்கு. அவனை வன்மம் கொள். வலிவுகாட்டி அடையலாம் என்று இன்னும் அவன் நினைக்கிறான். கொல் அவனை! பழிவாங்கு! நாறு அடிபட்டுச் செத்துப் போ — இல்லை, அடித்து நொறுக்கு! பயப்பட பயப்பட, பதுங்கப் பதுங்க வலிவு காட்டுவார்கள். பரத் எதற்கு உனக்கு? எவரேனும் உன்னை எதிர்க்கும் போதெல்லாம் பரத் அங்கு வருவானா? ஏன் பதுங்குகிறாய் பானுமதி? எங்கே எவர்

பாலகுமாரன்

பின்னே ஒளிய முயற்சி செய்கிறாய்?

பானுமதி விருட்டென்று எழுந்து போய் வேறு புடைவை மாற்றிக் கொண்டாள். முன் தலை வாரிக் கொண்டாள். பீரோ திறந்து நூறு ரூபாய் நோட்டுக்களைச் சுருட்டி எடுத்துக் கொண்டாள்.

''நாகம்மா குழந்தைகளைப் பார்த்துக்கோ. வாசற் கதவைத் தாழ் போட்டுக்கோ. யார் வந்தாலும் திறக்காதே.''

''என்னம்மா? ரொம்பத் தொலைவா?''

''நான் இதை ரிப்போர்ட் பண்ணப் போறேன். அந்த ஆளை நாற அடிக்கப் போறேன்.''

''ஐயோ! எதுக்கு? வேணாம் விடு சொல்றேன்...''

''இல்லை நாகம்மா இப்ப விட்டா மறுபடி மறுபடி வந்து கலாட்டா பண்ணத் தோணும் நாளைக்கு. ஒரு அடி வச்சுட்டாத் தான், வாலாட்ட முடியாதபடி நறுக்கிட்டாத் தான் நல்லது. பொம்பளை தனியா இருக்கா, ஆடிப் பார்க்கலாம்னு நினைக்கிறவனைச் சும்மா விடக்கூடாது!''

''உனக்குத்தான் கெட்ட பேரு!''

''எம்பேரு கெட்டு வருஷமாச்சு...''

''நான் சொல்றதைக் கேள்...'' நாகம்மாள் ஆரம்பித்தாள்.


''கைவிடு! கைவிடு முதல்ல... உன் வேலை குழந்தைகளைக் கவனிக்கறது. அதைப் பார். எனக்குப் புத்தி சொல்லாதே.''


தெரு முக்குக்கு விரைவாய் நடந்து ஆட்டோ பிடித்தாள்.

போகும் போது தெருவில் பல மனிதர்களும் தன் விரைவை, மனக் கலவரத்தை உற்றுக் கவனிப்பது போல் பட்டது.

''**தே**னாம்பேட்டைக்குப் போப்பா.''

''எங்கம்மா தேனாம்பேட்டைல?''






"படம் நல்லாத்தான் எடுத்திருக்கேன்; இருந்தும் கூட்டமே வராததற்கு 'டைட்டில்'தான் காரணமாயிருக்கணும்..."

"'டைட்டில்' என்னங்க?"

"'உள்ளே வா! உதைக்கிறேன்'!"

— எஸ். ப்ரியதர்சினி.



மானேஜர்: ஏம்மா! தினம் லேட்டா வர்றே?

லேடி டைப்பிஸ்ட்: எந்தப் புடைவையைக் கட்டிக்கிட்டு ஆபீஸுக்கு வர்றதுன்னு முடிவு பண்றதுக்குள்ளே மணி பத்தாயிடுது சார்...!

— மணியன் தர்மலிங்கம்.

"சி. எம். வீட்டுக்கு — சீக்கிரம் போ."

ஆட்டோக்காரன் உற்று முகம் பார்த்துவிட்டு வண்டி எடுத்தான்.

வீட்டில் தலைவர் இல்லை போலிருக்கிறது. ஒரு செக்யூரிட்டி போலீஸும் யாரோ டிரைவர் மாதிரி ஓர் ஆளும் பேசிக் கொண்டிருந்தார்கள். வராந்தாவில் எழுந்து நின்று வரவேற்றார்கள்.

"என்னங்க?"

"தலைவர் மனைவியைப் பார்க்கணும்."

"யாரு நீங்க?"

"பானுமதின்னு சொல்லுங்க."

ஆள் உள்ளே போனதும் வாசலில் மனம் தவித்தது. இது அதிகமில்லையா? அசிங்கமில்லையா? இவர்கள் வரைக்கும் தன் குடும்ப விவகாரம் வர வேண்டுமா? ஆயிரம் வேலை ஆயிரம் பிரச்னை இவர்களுக்கு இருக்கும். இதில் என் சுமையை வேறு ஏன் இங்கே இழுக்க வேண்டும்? 'என்னால தாண்டி தலைவரை உனக்குத் தெரியும். என் பேரு சொல்லித்தாண்டி உம் பேரு அங்கே சொல்லணும்' — அந்த ஆளின் கூச்சல் காதுக்குள் எழுந்தது.

பார்ப்போம். எனக்கு என்று மரியாதை இருக்கிறதா, பார்ப்போம்.

"கூப்பிடறாங்க..." வராந்தா தாண்டி, ஹால் கதவு திறந்து விட்டார்கள். வந்த அம்மா பேரக் குழந்தைகளுக்குச் சாதம் கொடுத்துக் கொண்டிருந்திருப்பார்கள் போலிருக்கிறது. புடைவையிலும், முழங்கையிலும் சோற்றுப் பருக்கைகள் ஒட்டிக் கொண்டிருந்தன. பின்னால் குழந்தைகள் ஓடி வந்தன.

அடேடே, வெறும் கையோடு வந்தோமே என்று ஒரு கணம் தோன்றிற்று.

"என்ன பானுமதி? அவரு இல்லையே. கோட்டைக்குப் போயிருக்காரே."

"இல்லேம்மா. நான் அம்மாவைப் பார்க்க வந்தேன்."

"வா, உள்ளே வா. பசங்களைக் கூட்டிக்கிட்டுப் போங்கம்மா." — குரல் கொடுத்துவிட்டு டைனிங் டேபிள் மாதிரி இடத்தில் உட்கார்ந்து கொள்ள, பானுமதி என்ன செய்வது என்று தெரியாமல் நின்றாள்.

"உட்காரு. எத்தனை நாளாச்சு பார்த்து! ஏன் வரத் தோணலை."

"பயம்."

"பயமா? என்கிட்டேயா? என்ன கூத்து இது?"

"ஏன் இப்படிச் செய்துட்டேன்னு திட்டுவீங்களோன்னு பயம்; கவலை..."

"அடி போடி! காலுக்கு ஒத்து வராத செருப்பைக் கழட்டிப் போடறதை விட்டு, யாரோ கவலைப்படுவாங்கன்னா இருக்க முடியும்? வேணும்னுட்டா செய்யறது இதை! செய்யத்தான் முடியுமா? பொறுத்துப் பொறுத்து, முடியலைன்னு ஒரு முடிவுக்கு வந்திருப்பே. படிச்ச புள்ளையாச்சே — நல்லது கெட்டது தெரிஞ்சவனாச்சேன்னு தான் அணைச்சுக்கிட்டது. யாரு கொடி உசரம் பறக்குதோ அங்கே போய் நிக்கறேன்னா, உன்னை மனுஷன்ல சேர்த்துக்க முடியுமா? பாடின பாட்டெல்லாம் பொய்யின்னு ஆயிடுச்சுல்ல... இப்போ என்ன சாப்பிடற...?"

"ஒண்ணும் வேணாம்மா..."

"என்னன்னு சொல்லு..."

"என்னவோ மனசுக் கலக்கம் உங்களையெல்லாம் பார்க்கணும் போல இருந்தது."

"ஏன் பானுமதி சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லையே?"

"வேலையிருக்கும்மா."

"பசங்க நல்லாயிருக்காங்க இல்லை?"

"அது ஒண்ணுதான் உசிரோட வச்சிருக்கு."

"அப்பா அம்மா துணையா இருக்காங்களா?"

பானுமதி பேசாதிருந்தாள்.

"சொல்லு..."

"யார் துணையும் வேணாம்மா. தனியா இருந்துக்குவேன். பயமே இல்லை. பத்து வருஷத்துல பசங்க பெரிசாகி, என்னையும் காப்பாத்தி, அதுங்களையும் தயார் பண்ணிக்கும்..."

"அதுக்குப் பத்து வருஷம் போகணுமே... இப்ப என்ன கஷ்டம் சொல்லு?"

ஆம்ப்ரோ மில்க் பேஸ்

ஸ்கூல் குழந்தைகளின் பிஸ்கெட்



Sista's-EIL-245/89 TAM-A

பாலில் உள்ள எல்லா ஊட்டச்சத்துக்களும் அடங்கியது.

பானுமதி தொண்டையில் சோற்றுக் கவளம் சிக்கியது மாதிரி தவித்தாள். விழிகள் உருண்டு, நாலு திசையும் இலக்கின்றிப் பாய்ந்தன... நெஞ்சின் சுமை இறுக்கிக் கொள்ள வேதனை கொடுத்தது.

''மறுபடி ஏதாவது தொந்தரவு தர்றானா?''

எல்லாப் பெண்களுக்கும் எல்லாப் பெண்களின் அவல நிலையும் தெளிவாய்த் தெரியும் போலும்! திருமணம் செய்து, வாழ்ந்து வளர்ந்து, புருஷன் சுகதுக்கத்தில் ஈடுகொடுத்துப் பொது வாழ்வுக்குப் புருஷனைத் தத்துக் கொடுத்துத் தன் சந்தோஷம் தன்னிருப்பு மறந்து, தான் பெற்றதற்குத் திருமணம் செய்து, அவை வேரூன்றும் வரை கிளை பரப்பி, பூ மலர இன்று இத்தனை மணம் வீசுதலுக்கும் கீழே எத்தனை உழைப்பு தேவைப்பட்டிருக்கிறது? எத்தனை இறுக்கம் அவசியமாகியிருக்கிறது!' என்று அந்தப் பெண்களுக்குத் தெரிந்திருந்தது. வாழ்வின் ஒவ்வொரு அடியெடுத்து வைத்தலும் எத்தனை சிரமம் என்பதைக் காலம் அவளுக்குக் கற்றுக் கொடுத்திருந்தது. வீடு என்பதின் கனம், கவனம் எல்லாம் அத்துபடியாய் இருந்தது. இல்லையெனில் உடனே அந்தக் கேள்வி கேட்க முடியாது.

''சொல்லு! ஏன் மென்னு முழுங்கறே? ஏதுனா தொந்தரவு தர்றானா?''

பானுமதி ஆமென்று தலையசைத்தாள். தலைகுனிந்து கொண்டாள்.

அப்படித்தான் சொல்ல முடியும்.

ஆனால் அது போதும். அந்த அம்மாள் முகம் மாறுதலாயிற்று. முதன் மந்திரியின் மனைவியாய் அல்லாது ஒரு பெண்ணாய் — தானும் கோபம் கொண்டார்.

''வீட்டண்டை வந்து கத்தினானா? சரியாச் சொல்லேன்,'' — பானுமதி மீதே கோபத்தைத் திருப்பினார்.

''என்னை வச்சுத்தான் உனக்கு அவரைத் தெரியும் — நீ என்னடி போன் பண்றதுன்னு... கொஞ்ச நேரம் முந்தி...''

''கொஞ்ச நேரம் முந்தி...?''

''குடிச்சுட்டு ரகளை. அசிங்கமாக் கூச்சல். பசங்க... பசங்க... எம் பசங்க... உடைஞ்சு போய் அழுதும்மா. அப்பாவும் பிடிக்காம, அம்மாவும் பிடிக்காம, இரண்டும் கன்னத்துல கைவைச்சுக்கிட்டு, வீட்டுப் பின்பக்கம் தனியே உட்கார்ந்து அழுதுங்க...'' பானுமதி பேச முடியாது அழுதாள்.

''நீ போ. நீ வீட்டுக்குப் போ. போய்ப் பசங்களைப் பாரு. அவங்களை விட்டுட்டு ஏன் வந்தே...? யாரு வாசல்ல...? டிரைவரைக் கூப்பிடு...! நீ போ. முதல்ல வீட்டுக்கு.''

மூன்று நிமிடத்தில் ஆட்டோவை அனுப்பி விட்டு, அவர்கள் வீட்டுக் காரில் வீடு நோக்கிப் போனாள்.

அடுத்த அரை மணியில் கவிஞர் வீட்டு வாசலில் ஒரு இன்ஸ்பெக்டர் கதவு தட்டி அவரை வெளியே வரச் சொன்னார்.

''என்ன?''

''சி. எம். உங்களை வரச் சொன்னாரு.''

''என்ன ப்ரதர்? என்ன விஷயம்?''

''எனக்குத் தெரியாது.''

''வர்றேன், போங்க.''

''வண்டியில கூட்டிக்கிட்டு வரச் சொன்னார்.''

''என் வண்டியில வர்றேன், போங்க..''

''இல்லைங்க! ஜீப்புல வந்துடுங்க!''

''ஜீப்பா? என்கிட்ட வண்டி இருக்கு தோழரே...''

''ஜீப்ல வாங்க சார்! ப்ளீஸ்!''

''எதுக்கு ஜீப்ல? கலாட்டா பண்றே என்னை?''

''வரலேன்னா கைது பண்ணிடுவேன்!''

''ஏய்! என்ன...?''

''படிச்சவன்னு பார்க்கிறேன். ஏய், ஊய்ன்னா நடக்கிறதே வேற. வாய்யா வெளியே!''

கவிஞருக்கு உள்ளே இருந்த அமிலம் வாய்க்கு வந்தது. பயத்தில் கண் உருண்டது.


(தொடரும்)

அமெரிக்க நீதிபதி ஒருவர் அறுபது வயதில் திருமணம் செய்து கொண்டார். நண்பர் அவரிடம் இவ்வளவு காலம் தாமதித்ததற்குக் காரணம் கேட்டார்.

அதற்கு நீதிபதி "என் மனைவி எனக்கு ஏற்றவளாக இருந்தால், 'இத்தகைய மனைவி கிடைக்க இவ்வளவு காலம் காத்திருந்தது நல்லதாகப் போயிற்று'' என்று மகிழ்ச்சி அடையலாம். ஒருவேளை அவளது பண்புகள் எனக்குப் பிடிக்காமலிருந்தால் ''இன்னும் கொஞ்ச காலம் தானே இவளுடன் வாழப் போகிறோம்'' என்று சமாதானம் செய்து கொள்ளலாம். எப்படிப் பார்த்தாலும் என் முடிவு சரியானதே, அல்லவா! என்று பதிலளித்தார்.

— எம். கதிர்வேல்.






திருப்பர்: உங்களுக்கும் அந்தக் காமெடியனுக்கும் காதல்னு கிசுகிசு எழுதின பத்திரிகை நிருபர் நான்தான்!

நடிகை: வயிற்றெரிச்சலைக் கொட்டிக் காதீங்க சார்... ஒரு முன்னணி ஹீரோ உங்களுக்குக் கிடைக்காமலா போனார்?

— மணியன் தர்மலிங்கம்.

எழுதலாமே எங்களுக்கு!...



★ வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவரா நீங்கள்?

★ ஆங்கில மொழியில் போதிய புலமை யின்மையினால் உங்களது முன்னேற்றம் தடைபடுகிறதா?

★ மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை ஓரளவு புரிந்து கொண்டாலும், அவர்களிடம் ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசிவிடுவோமோ என்று தயக்கமாக இருக்கிறதா?

★ ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற உங்களது விருப்பம் நிறைவேற பல வழிகளில் முயன்றும், பல புத்தகங்களைப் படித்தும் நீங்கள் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்பட வில்லையா?

★ இக்குறைகளை யாரிடம் கூறுவது, எப்படித் தீர்வு காண்பது என்பது பற்றி சிந்தித்து வருகிறீர்கள் அல்லவா?

கவலையை விடுங்கள்.

தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாட வேண்டும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் நிறைவேற ஓர் எளிய பயிற்சி முறையினை தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் அளித்து வருகிறார்கள்.


வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் முறையில் இப்பயிற்சியை மேற் கொள்ளலாம். "நேர்முகப் பயிற்சியும் உண்டு".

இன்றே ஒரு போஸ்ட் கார்டில் உங்களது விருப்பத்தை எழுதலாமே எங்களுக்கு.

நீங்கள் எழுத வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
த. பெ. எண் 4986,
9, மேட்லி ரோடு, தி.நகர்,
சென்னை 600 017.

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

/SL/5113/TAM

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

வெள்ளை உடையில் ஒரு நிஜமான தேவதை

அக்கா டாக்டருக்கும் அண்ணன் இஞ்சினியருக்கும் படித்துக் கொண்டிருந்த போது அந்தப் பெண்ணுக்கு மட்டும் ஏனோ அப்படி ஓர் ஆசை வந்தது...

வெள்ளை உடை உடுத்திக் கொண்டு 'டக், டக்'கென்று கம்பீரமாக நடக்க வேண்டும் என்ற ஆசை! நர்ஸ் பணியில் அதைத் தவிர வேறு ஆயிரம் விஷயங்களும் இருக்கின்றன என்பது அப்போது அந்தப் பெண்ணுக்குத் தெரியவில்லை. தகுதி அடிப்படையில் கிடைத்த எம். பி. பி. எஸ். சீட்டைக் கூட அப்பாவிடம் பிடிவாதம் பண்ணி உதறித் தள்ளினார்! சிநேகிதிகள் திட்டினார்கள்.

'கிடைச்ச எம். பி. பி. எஸ்ஸை விட்டுட்டு நர்ஸாகப் போக வேண்டும் என்று சொல்கிறாயே! உனக்கென்ன பைத்தியமா? நர்ஸ் என்றால் நரக வேதனைதான்! ராப்பகலாய் லோல்பட வேண்டும்...' — பலரும் பலவிதமாகச் சொன்னார்கள். ஆனால் அந்தப் பெண் வித்தியாசமாகச் சிந்தித்தாள்:

''டாக்டராகப் போனால் உடல் காயத்திற்குத்தானே மருந்து போட முடியும்? நர்ஸ் அப்படியல்ல ரணப்பட்ட மனசுக்கும் மருந்து போட முடியும்.''

திருச்சியில் பி. எஸ்ஸி முடித்துவிட்டு, சென்னையில் நர்ஸ் பயிற்சியும் பெற்று, சென்னை அரசு பொது மருத்துவமனையில் நர்ஸாகப் பணிபுரிகின்றார் பொற்செல்வி.

ஆரம்பத்தில் ஆபரேஷன் தியேட்டரில் தாறுமாறாக அறுக்கப்படுகிற உடல்களைப் பார்த்துப் பொற்செல்வி மிரண்டிருக்கிறார். அப்போதெல்லாம் உடன் பணிபுரிந்த சீனியர் சகோதரி ஜெஸிந்தாதான் பொற்செல்வியை மிக மிருதுவாய்ப் பக்குவப்படுத்தியிருக்கின்றார். தொங்குகின்ற உடல் சதையைத் தொட்டு எடுத்து, பொருத்துவதற்குத் தைரியம்... பஞ்சு வைத்து, நோகாமல் கட்டுப் போடுகின்ற விதம்... நோயாளியின் மனசறிந்து வருடலாய்ப் பேசுகின்ற பக்குவம்... சகலத்தையும் அந்தச் சகோதரி சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

தற்போது ஆக்ஸிடென்டில் அடிபட்டு அன்நோன் (unknown) என்று அடையாள மிட்டு வருபவர்களுக்கெல்லாம் பொற்செல்விதான் அம்மா! அவர்களுக்கு மருந்து கொடுப்பதானாலும் சரி, உணவு கொடுப்பதானாலும் சரி, ஒரு தாய்மையின் கனிவு இருக்கும். நோயாளிகள் ஆத்திரத்தில் ஆயிரம் பேசுவார்கள். சகலத்தையும் பொறுமையாகக் கேட்டு, அவர்களின் மனசறிந்து பணிபுரிகின்ற பக்குவம் பொற்செல்விக்குக் கிடைத்த பாக்கியம்.

சென்னை அரசு மருத்துவமனையில் பொற்செல்வியைச் சந்தித்தோம். ''இங்கே துடிதுடிக்கின்ற ஒவ்வொரு நோயாளியும் என் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். என் அம்மா... என் அப்பா... தம்பி... தங்கை... இந்த நினைப்புத்தான் டூட்டி நேரம் கடந்தும் அலுத்துக் கொள்ளாமல் பணியாற்ற ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்தி விடுகின்றது. வீட்டில் இருக்கும்போதும்கூட சதா இவர்களின் நினைவாகவே இருக்கும்... பூரணமாய்க் குணமடைந்து இவர்கள் வீடு திரும்புகின்றபோது, மிக நெருக்கமாய் வந்து கையைப் பிடித்து நெஞ்சில் வைத்துக் கொண்டு, 'யம்மா, நீ மவராசியா இருக்கணும்' என்று கண்ணீர் மல்க உருக்கமாகக் கூறுவார்கள். அப்போது ஏற்படுமே ஒரு பரவசம்... அதை எப்படி சார் வர்ணிப்பது?'' என்று கேட்கும் பொற்செல்வி இந்த ஆண்டின் 'சிறந்த நர்ஸ்' விருதையும் உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களையும் பெற்று, நாநூற்றி ஐம்பது வெள்ளை நர்ஸ்களின் மத்தியில் 'பளிர்' என்று வெள்ளையாகத் தெரிகிறார்.


சரஸ்வதி

படம்: **சுபா**



விஸ்டம் அமைப்பின் 1989 வருட விருது பெற்ற பொற்செல்வி.

குறுநாவல்



'இப்ப என்ன?' என்பது போல் கௌரி நிமிர்ந்து பார்த்தாள். கிருஷ்ணனின் முகத்தில் இருக்கும் கோபப் பளபளப்புக்குக் காரணம் புரியவில்லை — என்றுமே புரிந்ததில்லை! என்ன காரணம் இருக்கும் என்று மண்டையைக் குடைந்து கொண்டு நிற்பதில் ஏதும் லாபமில்லை என்கிற பிரக்ஞை ஏற்பட்டு வெகு நாட்களாகி விட்டன. நிமிஷத்துக்கு நிமிஷம் காரணம் ஜனிக்கும். மாறும். அது ஒரு சுழற்சி. அதிலிருந்து தப்புவதற்கு மார்க்கமில்லை.

கிருஷ்ணனின் கோபத்தில் வார்த்தைகள் வெடிக்காது. அசிங்கமாக ஒரு சொல் தெறிக்காது. அவருக்குக் கோபம் என்று வெளிப் பேருக்குத் தெரியக் கூடத் தெரியாது. இலைகளின் சலசலப்பில், காற்றின் வீச்சில் பிராணிகள் உஷாராவது போல் அவளுக்குப் புரியும் — அவரது நடையில், எங்கோ பார்க்கும் பார்வையில், கைவிரல் அசைவின் நிராகரிப்பில்.

டிரைவர் முத்துசாமி உள்ளே நுழைந்து அவர் தயாராக மாடிப் படிக்கடியில் வைத்திருந்த ஸூட்கேஸை எடுத்துக் கொண்டு போனான்.

காலை ஆகாரம் செய்து கொண்டிருந்த அவர் கவனத்தில் படும்படி கௌரி சட்டினிக் கிண்ணத்தை நகர்த்தி வைத்தாள்.

"இதெல்லாம் நான் பார்த்துக்கறேன்" என்றார் கிருஷ்ணன் கடுமையுடன். "மாலினியை ஜாக்கிரதையாப் பார்த்துக்கோ. கார்த்தாலே டெம்பரேச்சர் செக் பண்ணியா?"

"ஆமாம். நூறு இருந்தது."

"ஃப்ளூதான். மெள்ளக் குறைஞ்சுடும். ஆனா பலவீனம் ரொம்ப இருக்கும். வேளைக்கு வேளை ஜூஸ் எல்லாம் கொடுக்கணும்."

"கொடுக்கறேனே!"

"உனக்கு எல்லாம் தெரியும்தான். இருந்தாலும் நா சொல்றதைக் கேட்டுக்கோ."

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள் — நாகாக்க.

"நான் திரும்ப ரெண்டு நாளாகும். ஜுரம் நிக்கலேன்னா டாக்டர் சங்கரனைக் கூப்பிடு."

"சரி."

"இப்ப வர்ற வைரஸ் ஜுரமெல்லாம் பயங்கரமாத்தான் வருது" என்றார் தமக்குள் பேசிக் கொள்பவரைப் போல. "பிள்ளை வீட்டுக்காரங்க பெண் பார்க்க வர்ற சமயத்திலே இவ சோர்ந்து தெரியப் போறாளேன்னு யோசனையா இருக்கு."

"அதுக்கு இன்னும் இருபது நாளிருக்கே. அதுக்குள்ளே உடம்பு தேறிடும்."

"அதுக்கு நீ பொறுப்பு" என்றார் அவர், கட்டளையிடுபவர் போல. "ஜுரம் வந்த நாக்கு செத்திருக்கும். அதுக்குத் தகுந்தபடி செஞ்சு கொடு."

"சரி" என்றாள் அவள் சலனமில்லாமல்.

"நீங்க கவலைப்படாம போயிட்டு வாங்கோ!"

"மாலினியைத் தனியா விட்டுட்டு எங்கேயும் போயிடாதே!"



"நான் எதுக்குப் போறேன்?"

"பஜனைன்னு யாராவது கூப்பிட்டா போயிடுவே!"

"குழந்தை ஜுரத்திலே படுத்திருக்கும் போதா?"

அதற்கு ஏதும் பதில் சொல்லாமல் அவர் எழுந்து வாஷ்பேசினில் கையைக் கழுவி, வேகமாகத் துண்டில் துடைத்தார். சோபாவின் மேல் வைத்திருந்த ஆபீஸ் அட்டாச்சியைத் தூக்கியபடி அவளைப் பார்த்து, "எனக்கு ஏதாவது தகவல் அனுப்பணும்னா ஆபீசுக்குத் தெரிவி" என்றார்.

"சரி."

திரும்பியே பார்க்காமல், டிரைவர் திறந்து வைத்துக் காத்திருந்த வண்டிக்குள் உட்கார்ந்த கிருஷ்ணனின் முகத்தில் சிந்தனைக் கோடுகள் இருந்தன. 'போய் வருகிறேன்' என்கிற சங்கேதப் பார்வைக்காகக் காத்திருந்து — வராமல், ஏமாற்றத்துடன் அவள் உள்ளே திரும்பினாள்.

மாலினி தூங்கிக் கொண்டிருந்தாள் மூன்று நாள் ஜுரத்தில் கழுத்துப் பட்டை எலும்பு துருத்திக் கொண்டு நின்றது. முகத்தின் வெளுப்பு நீர்த்திருந்தது. நெற்றியில் மென்மையாகக் கையை வைத்துப் பார்த்தாள். ஜுரம் குறைந்திருந்தது. மாலினி கண்களைத் திறந்தாள்.

கௌரி இலேசாகப் புன்னகை செய்தாள்.

"ஏதாவது சாப்பிடறியா மாலினி?"

"வேண்டாம்" என்றாள் மாலினி. "அப்பா போயாச்சா?"

"ஆச்சு. ஹார்லிக்ஸோ ஜூஸோ கொண்டு வரேனே!"

"வேண்டாம்மா. குடிக்கணும் போல இல்லே."

"கொஞ்சம் போல ஜூஸ் தரேன். குடி. இல்லேன்னா கரைச்சு ரஸஞ்சாதம்..."

"அம்மா ப்ளீஸ்!"

"நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறே. அப்புறம் உங்கப்பா என்னைப் பிடிச்சு உலுக்கறார்."

மாலினியின் பார்வை ஒரு வினாடி அவளுடைய பார்வையுடன் கோத்து நின்றது. தர்மா மீட்டரை எடுக்கும் சாக்கில் கௌரி பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

"முதல்லே எனக்குக் குளிக்கணும். உடம்பு ஒரேயடியா க ச க ச த்து ப் போயிருக்கு."

"குளிக்கிறதா?" என்றாள் கௌரி அதிர்ந்து. "ஜுரம் இன்னும் நார்மலுக்கே வரல்லே! துடைச்சு வேணா விடறேன். இப்ப ஜுரம் எத்தனைன்னு பார்க்கலாம்."

"நார்மல்னா குளிப்பேன்!"

"குழந்தை மாதிரி படுத்தாதேடி மாலினி! பத்து நாள்லே பிள்ளை வீட்டுக்காரங்க வர்றதுக்குள்ளே உன்னைச் சரியாக்கணும்."

தர்மாமீட்டர் 99ஐக் காட்டிற்று.

"மத்தியானம் நார்மல் வந்துடும். அப்ப குளிப்பேன்."

"இதைப் பார். ரெண்டு நாளைக்குப் பல்லைக் கடிச்சிண்டு இரு. உங்கப்பா வர்றவரைக்கும். ஒண்ணு கிடக்க ஒண்ணு கோளாறாகிப் போச்சுன்னா நான்தான் அவர்கிட்டப் பேச்சுக் கேக்கணும்."

"எனக்கு என்ன ஆயிடுமோங்கற கவலையை விட அப்பா என்ன சொல்வாரோங்கிற பயம்தான் உனக்கு அதிகமா இருக்கும் போல இருக்கு..."

கௌரி சரேலென்று அவளைப் பார்த்தாள். மாலினி கண்களை மூடிக் கொண்டாள் சோர்வுடன்.

"ஸாரி!"

மூட்டம் படர்ந்து ஸ்தம்பித்து நின்ற ஒரு வினாடிக்குப் பிறகு "ஸ்பன்ஜ்பாத் பண்ணி விடறேன்" என்றாள் கௌரி இயல்பாக. "பவுடர் போட்டு வேற டிரஸ் மாத்தினா கொஞ்சம் ஃப்ரெஷ்ஷா இருக்கும்."

கீஜரின் ஸ்விட்சைப் போட்டு, சூடு பதம் பார்த்து, பிளாஸ்டிக் பேஸினில் நீர் நிரப்பி, சோப்பும், துண்டும், டால்கம் பவுடரும் துவைத்த உடுப்புக்களும் எடுத்துப் படுக்கைக்கு அருகில் வைத்துத் தேர்ந்த நர்ஸைப் போல் கவனமாக உடம்பைத் துடைக்கும் போது, கிருஷ்ணனின் நினைவு எட்டிப் பார்த்தது.

"சீக்கிரம் துடைம்மா, குளிருது!"

அவள் பரபரவென்று துடைத்துப் பவுடரைப் பூசினாள். வேறு உடைகளை அணிவித்து 'பம்'மென்று பரந்த குட்டை மயிரை



வாஸந்தி



ஜின் காக்டு என்ற எழுத்தாளரிடம், "உங்களுக்கு அதிருஷ்டத்தில் நம்பிக்கை உண்டா?" என்று கேட்ட போது, சிரித்தபடி சொன்னார்:

"நிச்சயமாய் உண்டு! நமக்குப் பிடிக்காதவர்களின் வெற்றிக்கு அதைத் தவிர வேறு எதைக் காரணமாய்க் கூற முடியும்?"

— ஜூலி.

ஆதாரம்: (அறிஞர்கள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்)

அதிராமல் பிரஷ் செய்தாள்.

"கல்யாணம் ஆனப்புறம் ஜுரம் வந்தா இப்படியெல்லாம் எனக்கு யார் செய்வா?"

கௌரி சிரித்தாள்.

"உன் புருஷன் செய்வான்."

"செய்வானா? அப்பா உனக்குச் செஞ்சு நான் பார்த்ததில்லே."

அழுக்குத் துணிகளை அள்ளும் சாக்கில் கௌரி குனிந்தாள். இடுப்பில் லேசாக வலித்தது.

"அம்மா ஸாரி."

"எதுக்கு?"

"உனக்கு என்னைப் பத்திக் கவலையில் லேன்னு சொன்னதுக்கு."

மெல்லிய புன்னகை கௌரியின் உதடு களில் கோடிட்டது.

"இப்ப என்ன சாப்பிடறே சொல்லு" என்றாள் பிரகாசமாக.

மாலினியிடமிருந்து பதில் வரவில்லை. கண்ணை மூடிப் படுத்திருந்தாள். கழுத்து வரைப் போர்வையைப் போர்த்தி, "சூடா ரஸஞ்சாதம் கரைச்சுண்டு வரேன்" என் றாள்.

"கூட சிப்ஸ் வேணும்."

கௌரி சிரித்துக் கொண்டே சமையல் கட்டிற்கு நகர்ந்தாள்.

முதலில் பிணக்கு செய்தாலும் வாய்க் குப் பிடித்துத்தான் மாலினி சாப்பிட்டாள்.

"அப்பாடா பிழைச்சேன்!" என்றாள் கௌரி நிம்மதியுடன்.

மாலினி வேறு எதையோ நினைத்துப் புன்னகை செய்வது போலிருந்தது. கட்டில் பக்கத்து மேஜை மேல் இருந்த வாக் மென்னை எடுத்துக் காதில் குழாய் பொருத் தியபடி, "நீயும் போய்ச் சாப்பிடும்மா. நான் பாட்டுக் கேக்கறேன்" என்றாள்.

"சரி. ஏதாவது வேணும்னா கூப்பிடு."

காலையில் இருந்த டென்ஷன் இப் பொழுது இல்லை. மனசு லேசாகிப் போயிருந்தது. பசித்துச் சாப்பிடத் தோன் றிற்று.

ரசம் வார்த்துக் கொள்ளும் போது வாந்தி எடுக்கும் ஓசை கேட்டது. எச்சில் கையை உதறிக் கொண்டு கௌரி ஓடினாள்.

மாலினி வாஷ்பேஸினில் முகத்தைக் கவிழ்த்து வாந்தி எடுத்துக் கொண்டிருந் தாள். கௌரி சட்டென்று அவள் தோளைப் பற்றிக் கொப்புளிக்க நீர்க் கொடுத்தாள். உள்ளே சென்றிருந்ததெல்லாம் சீறிக் கொண்டு வெளியே வந்திருந்தது.

"பிடிச்சுத்தானே சாப்பிட்டே? வாந்தி எடுக்க வர்றதுன்னே நீ சொல்லலியே?" என்றாள் யோசனையுடன்.

சோர்ந்து கண்ணை மூடிப் படுத்து விட்ட மாலினியைப் பார்க்கக் கவலையாக இருந் தது. இப்போது ஜுரமேதுமில்லை. உடம் பைத் துடைத்தது பலவீனப்படுத்தி விட்டதா?

"பேசாம தூங்கு மாலினி. ரெஸ்ட் எடுத்துண்டா சரியாப் போயிடும். கொஞ்ச நேரம் கழிச்சு ஜூஸ் தரேன்."

ஜுரம் வெளியில் வந்து விட்டது. இப்பொழுது உடம்பு கதகதவென்று சுட்டது. 101 டிகிரி ஜுரம் என்று தர்மா மீட்டர் காட்டிற்று. கப்பென்று அடிவயிற்றை ஒரு திகில் கவ்விக் கொண்டது கௌரிக்கு. ஈசுவரா, அவர் வர்றதுக்குள்ளே உடம்பு சரியாயிடணும்.

டாக்டருக்கு போன் செய்தாள். அவர் வீட்டில் இல்லை. அவர் மீண்டும் கிடைப் பதற்குள் இருள் விரிந்து விட்டது. மாலினி அதற்குள் நான்கு முறை வாந்தி எடுத்து விட்டாள். ஜுரம் 103க்கு ஏறிற்று. அலை அலையாகத் திகில் நெஞ்சு வரை பரவிற்று. ஈசுவரா ஈசுவரா என்பதைத் தவிர மூளை இயங்க மறுத்தது.

விவரம் சொன்னதும் "கவலைப்படா தீங்க" என்றார் டாக்டர் சங்கரன் லேசாக. "இந்த ஜுரம் இப்படித்தான். வாந்திக்கு லார்கெக்டைல் கொடுங்க, நின்னுடும். ஜுரத்துக்கு நான் கொடுத்திருக்கிற மருந்தை நிறுத்தாம கொடுங்க."

"நீங்க ஒரு நடை வந்து பாருங்க டாக்டர். எனக்குக் கவலையாயிருக்கு."

"நான் அவசரமா ஒரு ஆபரேஷனுக்குப் போணும்மா. காலையிலே வந்து பார்க்க றேன். லார்கெக்டைல்லே வாந்தி நின்னுடும். நிக்கலேன்னா மறுபடி பாதி மாத்திரை கொடுங்க."

டாக்டரின் அவசரம் குரலில் தொனித் தது. நம்மை முட்டாள் என்று நினைக்கிறார் என்று கூச்சம் ஏற்பட்டது. மருந்து வாங்கி வர வேண்டும். கடை, தெருக் கோடியில் தான் இருந்தது. மாலினியைத் தனியாக விட்டு விட்டுப் போகப் பயமாக இருந்தது. வேறு வழியில்லை என்ற உணர்வில், மாலினிக்கு அருகில், வாந்தி வந்தால் எடுக் கச் சௌகர்யமாய் ஒரு சின்ன பேஸினும் குவளையில் நீரும் துடைத்துக் கொள்ள டவலும் வைத்து, "அஞ்சே நிமிஷத்திலே வரேன் மாலினி" என்று வீட்டைப் பூட்டி ஓட்டமும் நடையுமாக மருந்துக் கடைக்குச்

சென்று மூச்சிரைக்க நின்ற போது, மருந்துக் கடை இளைஞன் விநோதமாகப் பார்த்தான்.

"பெண்ணுக்கு ஜுரம்பா. ஒரே வாந்தி யெடுக்கறா. இவங்க வேற ஊர்லே இல்லே."

"இப்ப வர்ற ஃப்ளூ அப்படித்தான் பயமுறுத்தும். அப்புறம் சரியாப் போயிரும்."

சரியாப் போயிடணும். பகவானே. இவர் வர்றதுக்குள்ளே சரியாயிடணும்.

பணத்தைக் கொடுக்கும் போது பர்சிலிருந்து நாணயங்கள் எல்லாம் சிதறி விழுந்தன.

"எதுக்கும்மா இப்படிப் பதற்றப்படறீங்க?"

அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு வீட்டிற்கு விரைந்தாள். மறுபடியும் மாலினி வாந்தி எடுத்திருந்தாள். பூஜையறையிலிருந்து விபூதியைக் கொண்டு வந்து அவள் நெற்றியில் இடும் போது விரல் நடுங்கிற்று. கண்ணில் நீர் துளிர்த்தது.

"மாலினி இதைச் சாப்பிடு. வாந்தி நிக்கும்."

நிற்கவில்லை. ஒரு சொட்டு நீர் உள்ளே தங்கவில்லை. கொடுக்கக் கொடுக்க இரட்டிப்பாய் வெளியே சீறிக் கொண்டு வந்தது. விலா எலும்பு இழுத்துக் கொண்டது. டாக்டர் கிடைக்கவில்லை. மார்க்கம் புலப்படவில்லை. கிருஷ்ணனுக்குத் தகவல் தெரிவிக்க இனிமேல் முடியாது. அலுவலகம் மூடி எவ்வளவோ நேரமாகியிருக்கும். மாலினி கண்ணே திறக்காமல் கூப்பிட்ட குரலுக்குக் கூட ஏன் என்று கேட்கும் சக்தியில்லாமல் கூனித்துக் கிடந்தாள்.

இரவு நீள நீள, அவளுக்கே தூக்கமா, மயக்கமா என்று புரியாத நினைவும் விழிப்புமாக இருந்தது.

"குழந்தைக்கு மறுபடி எப்படி ஜுரம் வந்தது? குளிப்பாட்டினியா? காத்துலே அழைச்சிண்டு போனியா? கண்டதைத் திங்கக் குடுத்தியா?"

"குழந்தைன்னா ஜுரம் வராதா?"

"வரும். நின்னப்புறம் மறுபடி வந்ததுன்னா அஜாக்கிரதைன்னு அர்த்தம். கவனிப்பு சரியில்லேன்னு அர்த்தம்."

ஈசுவரா. இந்த வாந்தி நிக்கணும். அவர் வர்றதுக்குள்ளே உடம்பு சரியாயிடணும். விபரீதமா ஏதும் ஆயிடக் கூடாது.

நினைப்பே உடம்பை உலுக்கிற்று. அப்படிக் கூட ஆகுமா? சாதாரண ஃப்ளூ ஜுரம் விபரீதமாகப் போகுமா? அந்த மருந்துக் கடைக்காரன் சொன்னது போல இப்படித்தான் பயமுறுத்தும். நான் அதிகமாத்தான் படபடக்கறேன்.

மாலினியிடமிருந்து பேச்சே இல்லை. இப்போது வாந்தி இல்லை. நல்ல ஜுரம் அடித்தது. மயக்கமா தூக்கமா என்று புரியவில்லை. அசையாமல் கிடந்தாள். ஒரு பொழுதுக்குள் என்ன நேர்ந்து விட்டது?

"உன் பொறுப்பு!"

— குரல் உக்கிரமாகி நாடி நரம்பையெல்லாம் ஊடுருவிற்று.

இரவு இரண்டு மணி என்கிற தயக்கத்தை மீறிய கலவரத்துடன் டாக்டரின் வீட்டுக்கு டெலிபோன் செய்த போது டாக்டரின் மனைவியின் பதிலில் எரிச்சல் தெரிந்தது.

"இப்பத்தான் அவங்க வீட்டுக்கு வந்து படுத்தாங்க. நீங்க போன் பண்ணினா காலையிலே எட்டு மணிக்கு வர்றதாத் தெரிவிக்கச் சொன்னாங்க."

"பொண்ணு கண்ணைத் தொறக்காம படுத்திருக்காம்மா. கவலையாயிருக்கும்மா!"

"காலையிலே வந்து பார்ப்பாங்க."

டாக்டரின் மனைவி போனை வைத்து விட்டாள். இப்பொழுது என்ன செய்வது? வேறு எந்த டாக்டரையும் தெரியாது. ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போவதா? எப்படி? எந்த ஆஸ்பத்திரி? அழைத்துப் போகும் அளவுக்கு நிலைமை மோசமா? ஒன்றுமே புரியவில்லை. படிப்பறிவில்லாத மூடம் போல் உணர்வேற்பட்டது.

இரவு முழுவதும் பதைத்துப் பிரார்த்தித்துத் தூங்காமல் உட்கார்ந்தபடியே கழித்துக் காலையில் வேலைக்காரி கதவைத் தட்டும் போது தூக்கம் கண்களை மூடியிருந்தது.

"என்னம்மா இப்பத்தான் எழுந்திருச்சீங்களா" என்ற கேள்விக்குப் பதில் சொல்லக் கூட முடியாமல் உடம்பு அசத்திற்று.

மாலினிக்கு இன்னும் நல்ல ஜுரம் இருந்தது. கூப்பிட்டால் பதில் வரவில்லை.


டாக்டருக்கு போன் செய்ய அவள் விரையும் போது அவரே வந்தார் — நல்ல வேளையாய். மாலினியைப் பார்த்ததும் அவர் முகம் மாறிப் போனதை அவள் கலவரத்துடன் கவனித்தாள்.

"உடனே ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டுப் போகணும்மா."

"நீங்க இப்போ எடுத்துக்கிட்டிருக்கிற படத்தில் எல்லாருமே புதுமுகங்களாமே. ஏன்?"

"பழைய முகங்களுக்கெல்லாம் பணப்பாக்கி இருக்கே!"

— கிழை. அ. கதிர்வேல்.



"ஏன் டாக்டர்?" என்றாள் அதிர்ந்து.

"உடம்பிலே தண்ணி வத்திட்டதும்மா. டீ–ஹைட்ரேஷன் ஆயிட்டது. ட்ரிப்பிலே வைக்கணும்."

அவளுக்கு அழுகை வெடித்தது.

"அதுக்குத்தான் நான் ராத்திரி அத்தனை பதற்றப்பட்டேன், டாக்டர்."

"ஏம்மா நான் சொன்ன மாத்திரையைக் கொடுத்தீங்களா?"

"கொடுக்காம?" என்றாள் அவள் வேகமாக. "அவசர அவசரமா மருந்துக் கடைக்கு ஓடிப் போய்... அவங்க வேற ஊர்லே இல்லே..."

கோர்வையாகப் பேச முடியாமல் பீதியில் வெடித்த கற்பனைச் சூழலில் சிக்கிக்



கொண்டு அவள் அழ ஆரம்பித்தாள்.

"கவலைப்படாதீங்க. நான்தான் வந்துட்டேன் இல்லே. நானே என் காரிலே கூட்டிட்டுப் போறேன்."

"சரியாயிடுவாளா டாக்டர்?"

"சரியாயிடுவாம்மா. எதுக்கு இத்தனை பயப்படறீங்க?"

மாலினி இரவு தூங்கவில்லை; மயக்கத்தில் இருந்தாள் என்று அப்பொழுது தான் புரிந்தது. அடி வயிறு பந்தாகச் சுருண்டது. இது என்ன சோதனை! ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியெல்லாம் டாக்டரும் பேசவில்லை. மடியில் கண் விழிக்காமல் படுத்திருந்த மாலினியின் கன்னங்களை அவள் பித்துப் பிடித்தவள் போல் வருடியபடி கண்ணீர் விட்டாள். 'என்னை ஏமாத்திடாதேடி கொழந்தே...'

ஆஸ்பத்திரி கவனிப்பார் இல்லாமல் கிடந்தது. ஸ்டிரைக் என்றார்கள். சில டாக்டர்கள் மட்டும் வளைய வந்து கொண்டிருந்தார்கள். காலியாக இருந்த ஒரு படுக்கையில் மாலினியைக் கிடத்தினார்கள். டாக்டரே ட்ரிப்பைக் கொண்டு வந்து பொருத்தினார்.

ஓர் இளம் டாக்டர் கூட வந்தார். நாடியைப் பரிசோதித்து விட்டு, ''இனிமே சரியாயிடும்மா, கவலைப்படாதீங்க'' என்றார் டாக்டர் சங்கரன். ''இவர்தான் வார்ட் டாக்டர். அப்பப்ப வந்து கவனிச்சுக்குவார்.''

கௌரிக்கு நன்றி பெருக்கெடுத்தது. ''ரொம்ப தாங்க்ஸ்'' என்பதற்குள் துக்கம் தொண்டையை அடைத்தது.

சங்கரனுடன் வார்ட் டாக்டரும் கிளம்பினார். ''இங்கதான் கோடியிலே என் ரூம் இருக்கு. அவசியம்னா கூப்பிடுங்க'' என்றார் சிநேகிதமாக.

ஒரு பெரிய சோர்வும் நிம்மதியும் அவளை ஆட்கொண்டன. என்ன செய்வது என்று தவிக்க வேண்டியதில்லை இப்போது. உடனுக்குடன் கவனிக்க டாக்டர்கள் இருக்கிறார்கள். அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கண்ணை மூடிக் கொண்டாள். அடித்துப் போட்டது போல் உடம்பு அசத்திற்று. இப்படிப்பட்ட ஒரு திருப்பம் வரும் என்று நேற்று நினைத்திருக்கவில்லை. இதற்கான காரணம் பகவானுக்கே வெளிச்சம். நல்லபடியாகி வீடு போய்ச் சேர்ந்தால் போதும். இவருக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு என்னை ஆளாக்கிடாதே பகவானே. வீடு போய்ச் சேர்ந்து இவ உடம்பைத் தேற்றி, கல்யாணத்துக்கு ஏற்பாடுகள் ஆரம்பிக்கணும். இவ கல்யாணமாகிப் போயிட்டா வீடு எப்படியிருக்கும்...?



சட்டென்று உலுக்கப்பட்டவளாய் அவள் கண்ணைத் திறந்தாள்.

மாலினியின் உடம்பில் ஓர் உதறல் தெரிந்தது. வலிப்பு வந்தது போல் கையும், காலும் இழுத்தன. ட்ரிப் வைத்த ஸலைன் பாட்டில் பயங்கரமாக ஆடிற்று. அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"மாலினி! மாலினி! நர்ஸ்! டாக்டர்!" அவள் பித்துப் பிடித்தவள் போல் அலறினாள். யாரும் வரவில்லை.

"நர்ஸ் யாரும் கிடையாது. ஸ்டிரைக் ஆச்சே!" என்றது பக்கத்துப் படுக்கை.

அவள் வெறிபிடித்தது போல் "டாக்டர், டாக்டர்" என்று கத்திக் கொண்டு ஓடினாள்.

தேடிப் பிடித்து டாக்டருடன் அவள் திரும்பி வந்த போது வலிப்பு அடங்கியிருந்தது. கண் மூடிய முகம் தலையணையிலிருந்து கீழிறங்கியிருந்தது.

இளம் டாக்டர் அவசரமாக நாடியைப் பிடித்துப் பார்த்தார். விழிகளைத் திறந்து பார்த்தார். சலைன் பாட்டிலை ஆட்டிப் பார்த்தார். "மை காட்!" என்று அடிக் குரலில் பிரமித்தார்.

"என்ன டாக்டர் என்ன?" என்று அவள் பதைத்தாள். பயங்கர அனுமானத்தில் விழிகள் விரிந்தன.

"ஸாரி. ஷி இஸ் டெட். என்னால நம்பவே முடியவில்லை" என்று டாக்டர் ட்ரிப் குழாயை மெல்ல அகற்றினார்.

அநியாயமாய் ஏமாற்றப்பட்டது போல் பதறிப் போயிற்று அவளுக்கு. பெரிய குரலில் அழுகை வெடித்தது.

கிருஷ்ணனுக்குத் தகவல் அனுப்பி அவருக்காகக் காத்திருக்கும் வேளையில் 'அவருக்கு நான் என்னடி பதில் சொல்வேன்' என்கிற வார்த்தைகள்தான் பிரமை பிடித்தது போல் திரும்பத் திரும்ப வெளிப்பட்டன.

வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. அவளுக்கு வெலவெலத்துப் போயிற்று. பரிச்சயமான காலடி ஓசை. நெஞ்சில் பதிவது போல. மாலினியின் அறையிலேயே இன்னும் இருந்த சடலத்தின் முன் வந்து குனிந்த முகம் பேயறைந்தாற் போல் இருந்தது. அவருடைய துக்கமும் தன்னுடையதில் சங்கமித்துப் போனது போல் அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் அழுதாள். அவள் தோளைப் பற்றி அவர் சமாதானப்படுத்துவார் என்கிற ஓர் அசட்டு எதிர்பார்ப்பில் அவள் காத்திருந்தாள். என்ன விஷயம், எப்படி நேர்ந்தது என்றாவது அவர் கேட்பார் என்று நினைத்தாள். அவர் எதுவுமே கேட்கவில்லை. ஓர் இறுக்கமான மௌனத்துடன் அறையை விட்டு வெளியேறினார். வெளியில் துக்கம் விசாரிக்க வந்திருந்த தமது ஆபீஸ் சிப்பந்திகளிடம் என்னவோ பேசினார்.

இரண்டு பெண்கள் உள்ளே நுழைந்தார்கள். அவள் தோளை மெல்லத் தொட்டார்கள்.

"எழுந்திருங்க மிஸஸ் கிருஷ்ணன். உடம்பைக் குளிப்பாட்டி புடைவை கட்டி நடுக் கூடத்துக்குக் கொண்டு வரணுமாம். எலெக்ட்ரிக் க்ரிமெட்டோரியத்துக்குப் போறாங்களாமே!"

அடி வயிற்றில் ஏதோ குழன்றது. கண்ணீர் வந்தது. அவள் மெல்ல எழுந்தாள்.

"குளிக்கணும்னு அடம்பிடிச்சியேடி. இப்பக் குளி. இப்பக் குளி. நார்மல் வந்துடுத்து!" அரற்றியபடி காரியங்கள் செய்தாள்.

சாவு வந்தது போலவே அடக்கமும் அவசரமாக நடந்தது. உடலை வேனுக்குள் வைத்து கிருஷ்ணன் கிளம்பிப் போனார். தங்களுக்குத் தோன்றிய விதத்தில் சமாதானம் சொல்லி, வந்திருந்த கூட்டம் கிளம்பிச் சென்றது.

திடீரென்று வெறுமை சூழ்ந்த திகைப்பில் அவள் அமர்ந்திருந்தாள். மாலினி இல்லாமல் இந்த வீடு எப்படியிருக்கும்? அம்மா அம்மாவென்று அவளுடைய நிலையை உறுதிப்படுத்தும் குரலின் முக்கியத்துவம் இப்பொழுதுதான் புரிந்தது போல் அவளுக்குத் துக்கமேற்பட்டது.

தூக்கிவாரிப் போட, அவள் நிமிர்ந்தாள். கிருஷ்ணன் எதிரில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். கப்பென்று ஒரு பயம் கவ்வியது. இந்தப் பயம் காரணம் புரியாமலே அவளுள் அங்கமாகிப் போன ஒன்றாக—

"உங்களுக்குக் கொடுத்த வாக்கை என்னாலே காப்பாத்த முடியலே" என்ற இயலாமையுடன் அழுகையாக வெடித்தது.

"திடீர்னு வாந்தி எப்படி வந்தது?"

"தெரியலியே!" என்றாள் பலஹீனமாக. "ரசஞ்சாதம்தான் கரைச்சுக் கொடுத்தேன். பிடிச்சுத்தான் சாப்பிட்டா."

அவர் கூர்மையாக அவளைப் பார்த்தார்.

"அதோட என்ன கொடுத்தே?"

குரலிலிருந்த கடுமையைக் கண்டு அவளுக்கு நடுக்கமேற்பட்டது.

"சிப்ஸ் கேட்டான்னு ரெண்டே ரெண்டு வில்லை...."

"பஜ்ஜி கேட்டான்னா கொடுத்திருப்பியா?"

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"இரண்டு சிப்ஸ்னாலே அப்படி ஒரு வாந்தி வருமா?"

"அதுதான் எனக்கும் புரியலே" என்றாள் அவள் குழப்பத்துடன். "ஆபரேஷன் கேஸ் இருந்ததாலே டாக்டருக்கும் வந்து பார்க்க முடியலே. பயப்படாதீங்கங்கறார். நான் என்ன செய்வேன்?"

"டாக்டர் சொன்ன மருந்தை ஒழுங்கா கொடுத்தியா?"

இதென்ன குறுக்கு விசாரணை என்கிற ஆயாசத்துடன் அவள் பார்த்தாள்.

"சொன்னபடிதான் கொடுத்தேன். மருந்து வாங்கக் கூட ஆளில்லாமல் கதவைப் பூட்டிண்டு கடைக்கு ஓடியிருக்கேன்."

"மருந்து வாங்கின ரசீதை வெச்சிருக்கியா இல்லே சில்லறையைக் கீழே கொட்டின மாதிரி அதையும் எங்கேயாவது நழுவ

விட்டியா?''

அவள் அதிர்ந்து அவரைப் பார்த்தாள். துப்புத் துலக்கி விட்டுத்தான் இந்த விசாரணை. குபீரென்று துக்கமும் அவமானமும் திமிறிக் கொண்டு எழுந்தன. அவள் பிரயாசையுடன் உள்ளே சென்று கைப் பையிலிருந்த ரசீதைக் கொண்டு வந்து காண்பித்தாள். அதை அவர் மேலோட்டமாகப் பார்த்து,

''மருந்தை வாங்கினா போதுமா? ஒழுங்காக் கொடுத்தாதான் அதுக்குப் பலன் இருக்கும்'' என்றார்.

அவளுக்குப் பொறுமை நழுவிற்று.

''அத்தனை பொறுப்பில்லையா எனக்கு?''

''பொறுப்பிருந்தா வேலைக்காரி காலையில வந்து கதவைத் தட்டற வரைக்கும் தூங்கிண்டிருந்திருப்பியா? பெத்தவளுக்குக் கண்ணை மூடத் தோணுமா?''

அவள் சுளீரென்று அவரை ஏறிட்டுப் பார்த்தாள். இந்த மனுஷனின் நரம்பில் ஓடுவது இரத்தமாக இருக்க முடியாது என்று தோன்றிற்று. பகபகவென்று வெள்ளமாய் இருபது வருஷத்து நினைவுகள் மூச்சை முட்டின. இவருக்கும் தனக்குமிடையே இத்தனை காலமாக ஒட்டிக் கொண்டிருந்த உறவு நூலிழைதான் என்கிற பிரக்ஞையே அவளது பயத்தின் வித்து என்று இப்பொழுது புரிந்தது.

''எனக்குத் தெரியாது. நான் மாலினியைப் பெறல்லைதான்'' என்றாள் அவள் புதிதான தைரியத்துடன். ''அவளைப் பெத்திருந்தா ஒருவேளை அவ செத்திருக்க மாட்டா. டாக்டர் உடனே வந்திருப்பார். ஆஸ்பத்திரியிலே ஸ்டிரைக் இருந்திருக்காது. ட்ரிப் கொடுத்துக் கோளாறாகியிருக்காது...''

''இமிரா...?''

அவள் கையமர்த்தித் தொடர்ந்தாள்.

''எனக்குக் குழந்தை பிறந்தா மூத்தாள் குழந்தையை நான் சரியாக் கவனிக்க மாட்டேன் என்கிற சந்தேகத்தில் நீங்க எங்கிட்டச் சொல்லாமலேயே ஆபரேஷன் பண்ணிக்க வேண்டியிருந்திருக்காது.''

அவர் பதிலே சொல்லாமல் இறுக்கத்துடன் அமர்ந்திருந்தார்.

அவள் சோர்வுடன் எழுந்தாள். ஒரு ஜன்மத்தை விரயம் செய்தது போல் இருந்தது. இந்த மனிதனின் நன்மதிப்பைப் பெற வேண்டும் என்று சதா சர்வகாலமும் பட்ட கவலையும் தாங்கிக் கொண்ட அவமானமும் இன்று மாலினியின் உடம்போடு மின்சாரத்தில் பஸ்மமாகி விட்டதாகத் தோன்றிற்று.

பஸ்மத்திலும் ஏதும் ஜனிக்குமா? துளிர்க்குமா?

ஜனித்தது.

''இனிமே உனக்கு இங்கே வேலையில்லேன்னு நீங்க சீட்டுக் கிழிக்க வேண்டியதில்லே. நானே கிளம்பறேன்'' என்று துளிர்த்துக் கொண்டு கிளம்பிற்று.



"சியாமா! இதோ பார் உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது என்பதை விட நீ பாங்கில் வாங்கும் கணிசமான சம்பளம் ரொம்பவும் பிடித்திருக்கிறது என்பதுதான் நிஜம். காரணம் என் குடும்பத்தின் நிலை அப்படி. என் சம்பளம் குடும்பம் நடத்துவதற்கே இழுபறி என்னும் போது, அதில் மூன்று தங்கைகளுக்குக் கல்யாணம் நடத்துவது என்பது பகல் கனவு. கல்யாணத்திற்கு வாங்கும் கடன்களை அடைக்க, உன் சம்பளம் மிகவும் உதவும் என்பதற்காகத்தான், நான் இந்தக் கல்யாணத்திற்கே சம்மதித்தேன்!''

— ஒரு கணவன் முதலிரவில் பேசும் முதல் பேச்சா இது? 'சட்'டென மனசுக்குள் சுருங்கிப் போனாலும், சுதாரித்துக் கொண்டவளாக, ''இதெல்லாம் என்ன பேச்சு... உங்கள் குடும்பப் பொறுப்புகளில் இனி எனக்கும் சம பங்கு உண்டே... 'என் சம்பளம், உன் சம்பளம் என ஏன் பிரித்துப் பேசுகிறீர்கள்?'' என்றாள் மென்மையாக.

''தட்ஸ் குட்'' எனப் பாராட்டிய ராஜாராமன், ''இன்னொரு விஷயம்... இந்தப் பொறுப்புக்களை எல்லாம் முடிக்கும் வரை 'நாம் இருவர்'தான். நமக்கு ஒருவர் இப்போது வேண்டாம். பிரசவம், குழந்தைப் பராமரிப்பு, படிப்பு இதற்கெல்லாம் இப்போது பட்ஜெட்டில் இடமில்லை... புரிகிறதா?''

அந்த நிமிஷத்திலேயே, தன் இளமைக் கனவுகள் எல்லாம் பொடிப் பொடியாகி, காற்றோடு கரைந்து போனதை உணர்ந்தாள்.

''என்ன பதிலே இல்லை.. நமக்கென்ன வயசாகி விட்டதா என்ன..? வேண்டும் போது பெற்றுக் கொள்ளலாமே.. சம்மதம் தானே'' — என்று கேட்பவனிடம்,

சம்மதிப்பதைத் தவிர வேறு வழி?

விடிந்ததுமே —

நூறு ரூபாய் மிச்சம் பிடிப்பதற்காக, மாமியார்க்காரி வேலைக்காரியை நிறுத்தி விட்டாள். சியாமளா இருக்கும் போது, வேலைக்காரிக்குச் சம்பளம் தருவது தண்டம்தானே?

அன்றிலிருந்து —

இந்த ஏழு வருடங்களில், ஒரு நாள் கூடத் தவறாமல் காலை நாலு மணிக்கெல்லாம் எழ ஆரம்பித்தவள் —

எஸ். பட்டம்மாள்

வாசல் தெளித்துக் கோலம் போடுவதிலிருந்து, காலை ஒன்பது மணிக்குள், நாத்தனார்கள், மாமியார் உட்பட சகலரின் துணிகளையும் துவைத்து உலர்த்துவதிலிருந்து, சமையல், கணவனின் தேவைகள், மாமியாரின் உத்தரவுகள், நாத்தனார்களின் குறைகள் அத்தனையும் கவனித்து, தானும் ரெடியாகி, கிளம்புவதற்குள் —

பஸ் புறப்பட்டு விடும். ஓடும் பஸ்ஸில் உயிரைப் பணயம் வைத்து ஏறி நசுங்கி, பாங்கில் சீட்டில் போய் உட்கார்ந்தால், மாலை ஐந்து வரை கணக்கு வழக்குகள், கஸ்டமர்களின் குறைகள், அது இது என ஆயிரம் வேலைகள். விரல்களின் வலியை நீவி விட்டுக் கொள்வதற்குக் கூட நேரமின்றி வீடு திரும்பினால் —

காலையில் உலர்த்தி விட்டுப் போன துணிகள் அத்தனையும் மடித்து அவரவர் இடத்தில் வைப்பதிலிருந்து அத்தனையும் அவள்தான் செய்ய வேண்டும். தப்பித் தவறித் தெரியாத்தனமாக, கடைசி நாத்தனார் ஜோதி அவளுக்கு உதவ வந்து விட்டாலும், மறுகணமே — மாமியார் போடும் அதட்டலில் ஓடி விடுவாள். இரவு சமையல் முடித்துப் பரிமாறி, சமையலறை அலம்பி விட்டு —

கண்கள் தூக்கத்திற்கும், உடம்பு ஓய்விற்கும் கெஞ்சி அழ, படுக்கைக்கு வந்தால், கணவன் என்பவன்,

மனசைக் கழட்டி ஒரு மூலையில் போட்டு விட்டுக் காத்திருப்பான்.

கடவுளே... இந்த ஏழு வருடங்களில் 'ஓய்வு' என்ற ஒரு சொல்லே அவள் வாழ்வில் இடம்பெறவே இல்லையே.. சம்பளம் பெறாத வேலைக்காரியாக அல்ல; தான் பெறும் ஆயிரத்துக்கும் அதிகமான சம்பளத்தையும் இவர்களிடம் கொடுத்து விட்டு, மனப்பூர்வமாக,

வேலைக்காரியாக, சமையல்காரியாக, 'மனைவி'யாக உழைத்தாளே, அந்த ஓயாத உழைப்பிற்கு என்ன அர்த்தம்....?

இதற்கிடையில் ஒருமுறை... ஒரே ஒரு முறை... அவர்களின் செயற்கைத் தடைகளை எல்லாம் மீறி.. எங்கு தவறாகப் போனதோ, எப்படியோ தானும் ஒரு தாயாகப் போகிறோம் என்பதை உணர்ந்த கணத்தில் பட்ட துன்பம் யாவும் தூசாகத் தெரிய, நாணத்தை மீறிய சந்தோஷத்தில், தனிமையில் கணவனிடம் தெரிவித்தபோது—

'பளார்' எனக் கன்னத்தில் அறைந்தான்! அவனுடைய பொறுப்பின்மை என்று, அவன் ஆடிய ரௌத்ர தாண்டவம் இருக்கிறதே... விடிந்ததும், கதறக் கதற பலி ஆடு போல அவளை ஒரு பெண் டாக்டரிடம் அழைத்துச் சென்று, அரும்பிய மொட்டைக் கிள்ளி எறிந்த பின்னரே ஓய்ந்தான்!

''கல்யாணத்துக்கு மூணு பொண்ணுங்க நிக்கறப்ப இது ஒண்ணுதான்



இப்பக் குறைச்சல்...'' என்ற மாமியாரின் நொடிப்பில் —

குழந்தை பிறந்தால் மகன் தனியாகப் போய் விடுவானோ.. தங்கைகளின் கல்யாணப் பொறுப்பில் அசட்டை காட்டுவானோ... என்ற பயம் தெறிப்பது தெரிந்தது.

மூவருக்கும் திருமணமாகும் வரை குழந்தை ஆசையை.. அந்தத் தவறை அவள் அறவே தவிர்த்து விட்டாள். மூத்தவள் கிரிஜாவிற்கு ஒரு இஞ்ஜீனியர், அடுத்தவள் கமலாவிற்கு ஒரு கல்லூரிப் பேராசிரியர் என மணமுடித்து விட்டு, வாங்கிய கடனோடு மன்றாடிக் கொண்டிருக்கும்போதே, ராஜாராமனின் ஆசைத் தங்கை கடைக்குட்டி, ஜோதி வந்து நின்றாள், தன் தமிழ் ஆசிரியை அன்னபூரணி அம்மாளின் மகன் குமாரைத் தான் காதலிப்பதாகச் சொல்லிக் கொண்டு! துணிச்சல்காரி! முதலில் ராஜாராமன் கோபத்தில் குதித்தாலும் —

தங்கையின் பிடிவாதம், அன்னபூரணியம்மாள், குமார் இருவருடைய பெருந்



புண்ணிய காரியங்களை ஸங்கிராந்தியில் ஏன் அனுஷ்டிக்க வேண்டும்?

மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் ஸூரிய பகவான், ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் ஸூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர்: ஸங்கராந்தி சமயம் ஸூக்ஷ்மமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸ்ங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

ராசி	ஸங்கிரமணத்தின் நாமதேயம்	(ப்ருஹஸ்பதி வாக்குப்பலன்) புண்ணிய காலம்	புண்ணிய பலன்
மகரம்	உத்திராயணம்	பின் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
கும்பம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மீனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மேஷம்	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
ரிஷபம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மிதுனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கர்கடகம்	தக்ஷிணாயனம்	முன் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
சிம்மம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கன்னி	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
துலா	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ண்ணியம்
விருச்சிகம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
தனுசு	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்

ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்

தன்மை... இவற்றின் முன் தோற்றுப் போனான்.

சியாமளாவின் நகைகளைப் போட்டு அப்படி இப்படி ஒப்பேற்றித் திருமணம் முடித்தான். தம்பதிகளைச் சென்னைக்கு ரயிலேற்றி விட்டுத் திரும்பினால், இதற்காகவே காத்திருந்தது போல —

சியாமளாவின் மாமியார் பாத்ருமில் விழுந்து எலும்பை முறித்துக் கொள்ள, மாசக் கணக்கில் ஆஸ்பத்திரி வாசம், ஆயிரக்கணக்கில் கடன், குணமான பிறகும் ஆயுளுக்கும் கட்டிலோடுதான் என்ற நிலை உருவாகி விட்டது.

கணவனின் கட்டளைப்படி —

பாங்க் வேலையை விட்டு விட்டு, கிடைத்த சேமிப்பு நிதி, கிராஜுவிடி எல்லாவற்றையும் துடைத்து வாங்கி — இருந்த கடன்களை அடைத்து விட்டு, மாமியாருக்குப் படுக்கையில் வைத்தே எல்லாப் பணிவிடைகளும் செய்ய முழு நேர நர்ஸாக மாறினாள் சியாமளா!

ஆனால், இந்தச் சமயத்தில் —

பொறுப்புகளும், கடனும் தீர்ந்த நிலையில், ராஜாராமன் ஒரு குழந்தைக்குத் தகப்பனாக ஆசைப்பட்டான். விதி வேறாக இருந்தது.

எந்தக் குழந்தையின் வரவை இவன் தள்ளிப் போட்டானோ, அந்தக் குழந்தை, வர மறுத்து இவர்களை ஏமாற்றிக் கொண்டே போனதுதான் மிச்சம். காரணம் தெரிந்து கொள்ள சியாமளாவை டாக்டரிடம் அழைத்துப் போனான். முழுமையான செக்—அப் செய்யப்பட்டது.

இன்றுதான் முடிவு தெரிந்தது. விதி சியாமளாவின் தாய்மைப்பேற்றை என்றுமே நிரந்தரமாக மறுத்து விட்ட முடிவு!

ஆம்.. கருப்பையில் கட்டி வளர்ந்து வருவதால் கருப்பையை எடுத்து விட வேண்டும் என்பது மட்டுமல்ல.. இதயம் பழுதுபட ஆரம்பித்திருப்பதால், முழு ஓய்வு தேவை. ஆபரேஷனும் தேவைப்படலாம்! என்று கூறி விட்டார் டாக்டர்.

உள்ளம் சில்லு சில்லாக நொறுங்கிய நிலையில், கதறியவாறு, கணவனின் மார்பில் அடைக்கலம் தேட முனைந்த போது, சியாமளா அந்தப் புதிய மனிதனைக் கண்டு அதிர்ந்தாள்.

ராஜாராமன் அவளினும் அதிகமாய் உடைந்து போயிருந்தான். குமுறி வந்த துக்கத்தை அணை போட்டுத் தடுக்க முடியாமல் கண்ணீரில் கரைக்கும் அவனைப் பார்த்த போது சியாமளாவுக்கு வியப்பாக இருந்தது.

"கடவுளா பார்த்துக் கொடுத்த போது என் சுயநலத்துக்காக அதை அழிச்சேனே இப்போ என்ன பண்ணட்டும் சொல்லு..." கையாலாகத்தனத்துடன் அவன் அரற்ற, சியாமளா தன் துக்கம் மறந்து அவனைச் சமாதானப்படுத்தி, தைரியமூட்டுவதில் முனைப்பானாள்.



சின்னச் சின்ன ஆசைகள்

பாண்டியராஜனுக்குக் காதல். புது முகம் ரசிகாவை அவர் டாவு கட்டி ஒருவழியாய் செட்டில் ஆகும் சமயத்தில் தகப்பனார் தாயுடன் ஒரு மாசம் ஃபாரின் டூர் கிளம்ப, ஜமா சேர்த்துக் கொண்டு வீட்டில் தண்ணியடிப்பதிலிருந்து அதுவரை தடை போட்டிருந்த காரியங்களிலெல்லாம் கொண்டாட்டமாய் ஈடுபடுகிறார்ரா? வந்தது வினை. தகப்பனார் உயிருக்குயிராய் வைத்திருந்த காரை ஏதோ குட்டையில் மூழுகடித்து விட்டு அதை மீட்டு எடுத்து ரிப்பேர் பார்க்க, 'வையடா ஐம்பதாயிரம்(!)' என்று கேட்க, அதை ஈடுகட்ட வீட்டை ஒரு பார்ட்டிக்கு வாடகைக்கு விட, அந்தப் பார்ட்டி வீட்டுக்குள் பெண்களை வைத்து பலான பிஸினஸ் செய்ய — பாண்டியராஜ் தவிப்பதும் தொடரும் சிக்கல்களும் விறுவிறுப்பு நிறைந்த வெடிச் சிரிப்புத்தான். (பகுத்தறிவுக் கேள்வி கேட்கப்படாது!)

பாண்டியராஜன் அப்பனுக்குப் பயந்த சுப்பன். நண்பர்களுடன், காதலியுடன் தன்னை மறந்து பேசிக் கொண்டிருக்கும் போது திடுதிப்பென்று நினைத்துக் கொண்டு, 'ஐயோ, மணி ஆறாகப் போவுதே. எங்கப்பா பெல்ட்டைக் கழட்டிக்கு வாரே', என்று விழிகள் சக்கரமாய்ச் சுழல ஒரு துள்ளு துள்ளிக் கொண்டு அவர் பாய்ந் தோடும் நேர்த்தி — விஸிலடிக்கலாம்.

அந்த லைப்ரரி காட்சி சூப்பர். அந்த ஓகே லைப்ரேரியன் லைப்ரரியைப் பூட்டி இழுத்துப் பார்த்து விட்டுப் போன பிற்பாடு உள்ளே புத்தக அலமாரிக்குப் பின்னாலிருந்து ரசிகா ஒருபுறம் வெளிப்பட்டுத் தவிக்க, புத்தகத்தை முகத்தில் கவிழ்த்து நித்திரை வசப்பட்டிருந்த பாண்டியராஜன் இன்னொரு புறம் வந்து கண் விழித்து அலற இருவரும் ஒன்று சேர்ந்து, 'வேறு வழியில்லை இன்று இரவு ஒன்றாய்ப் படுத்துறங்க வேண்டியதுதான்,' என்ற சமரச உடன்படிக்கைக்கு வர, ஏக கிளுகிளுதான்!

தோழர்களில் சின்னி ஜெயந்த் அனியாயச் .சரடு. சினிமாவிலிருந்து அரசியல் பிரமுகர்கள் வரை ஒவ்வொருத்தரிடமும் பேச்சிலே அன்னியோன்னியம் கொண்டாடி, 'நானும் அவரும் இப்படி', என்று அவர் கையோடு கை பின்னிக் காட்ட, இது தெரிந்த இன்னொரு தோழர் வெற்று வெளியில் ரீல் சுற்றி அலுத்துப் போய், 'போதுண்டா சுத்திச் சுத்திக் கை வலிக்குது', என்று விக்ஞாபிக்க... அமர்க்களம்.

தேவலை, புதுமுகம் ரசிகா தேறி விடுவார். ஆனால், பாவம், கவர்ச்சி பிராண்ட் போட்டாயிற்று. எந்தக் கல்லூரி மாணவி சர்வசதா இப்படி மினி ஸ்கர்ட், பிகினி டிரெஸ்ஸில் திரிகிறாள் என்று கேட்காமல் இருக்க முடியவில்லை. அபூர்வமாய்ச் சில நிமிடங்கள் புடைவையும், பூவுமாய் வரும் போது குடும்பப்பாங்குக்கு என்ன குறைச்சல்?

டீ கடை முதலாளி எஸ். எஸ். சந்திரன் இந்த இளசுகளோடு ஒட்டவில்லை. அதே போல்தான் அவர் வாடகைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் வினு சக்ரவர்த்தியும். அட்வான்ஸ் ஐம்பதினாயிரம் தந்து அவர் அக்ரிமெண்ட் பாரத்தில் கையெழுத்து வாங்கும் போது வில்லன் முத்திரை விழுகிறது. அவர் பிஸினஸில் குலுங்கிச் சிரித்துக் கூத்தடித்துக் குவிலி கொச்சைப்படுத்தியிருக்கிறார். அதெல்லாம் கொஞ்சம் அதிதான்.

கோடீசுவரச் சீமான் மிடுக்கும் தோரணையும் விஜயகுமாருக்கு. அவருக்கு அடங்கி ஒடுங்கி, மகன் பாண்டியை அவரது பெல்ட் வீச்சிலிருந்து தடுக்கும் மணிமாலா.

ஆமாம், மனோரமா கூட இருக்கிறாரே! ஒப்புக்குச் சப்பாணி. அந்தக் கடைசி நேரக் கிளைமாக்ஸில் கொஞ்சம் போல் முட்டுக் கொடுத்திருக்கிறார்.

காமெரா சிற்சில பிரேம்கள் உலகப் புகைப்படக் கண்காட்சியில் பரிசு பெறும் தகுதி வாய்ந்தவை.

துயர் விட்டுப் போகும்படி மனம் விட்டுச் சிரிக்க வைக்கிறது கோபு — பாபுவின் வசனத் தெளிப்புக்கள்!

— பி. எஸ். எஸ்.

வெற்றிபாதையில் விரைந்திடுவீர்!

வாழ்வில் வளங்கான வழிகள்



கடலில் திசை தெரியாமல் தவிப்பவர்களுக்கு ''கலங்கரை விளக்கு'' ஒளி தந்து வழி காட்டும் அதுபோல் வாழ்வில் வளம் காணத் துடிப்பவர்களுக்கு முன்னேற்றத்திற்கான வழிகளை நாங்கள் கூறுகிறோம்.

பள்ளிக்கூடத்தில், கல்லூரியில் படித்து விட்டு ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி பேச முடியாமல் தவிக்கிறீர்களா?

சாதாரண தொழிலாளியாக இருந்து கொண்டு ஆங்கில அறிவை எப்படியாவது படித்து முன்னேற வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

எல்லோரும் ஆங்கிலத்தில் பேசும்போது நம்மால் நாலு வார்த்தை கூட பேச முடியவில்லையே என்று ஏங்குகிறீர்களா?

படிக்கக்கூடிய காலத்தில் படிக்காமல் தற்போது தொழில் or வியாபாரத்தில் ஈடுபட்டு இனி எப்படி படிக்க முடியும் என்று ஆழ்ந்த யோசனையில் மூழ்குகிறீர்களா?

கவலையை விடுங்கள் முன்னேற்றத்திற்கான எளிய வழிகள் இதோ, எளிய முறையில் தமிழ் மூலம் தபாலில் ஆங்கிலம் பயிலுவதற்கான சிறந்த பயிற்சியை இந்தியாவிலேயே தலைசிறந்த ஆங்கில கல்வி நிறுவனமாகிய...

''தி அமெரிக்கன் இன்ஸ்டியூட்'' ஏற்று பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சி அளித்து வருகிறது. பல்வேறு ஆங்கில பேராசிரியர்களே இப்பயிற்சியை பாராட்டியுள்ளனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

நீங்கள் செய்ய வேண்டியது ஒரு போஸ்ட் கார்டில் உங்கள் முகவரியை எழுதி தி அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட், எல்லிஸ் நகர், மதுரை-16, என்ற முகவரிக்கு அனுப்புங்கள். இலவச விபரங்கள் வந்து சேரும்.

இது தவிர தமிழ் மூலம் தபாலில் கணக்கர் பயிற்சி பெற்றால் ஒவ்வொரு ஊரிலும் கணக்கர் வேலைக்கு ஏராளமானவர்கள் தேவைப்படுவதால் இதில் மாதம் ரூ. 2000 வரை சம்பாதிக்க வாய்ப்புண்டு, எளிய சுயமான வேலை வாய்ப்பு.

தமிழில் தபால் மூலம் சிறப்பாக ஆங்கிலம் பயில்வதற்கும், தமிழில் தபால் மூலம் கணக்கர் பயிற்சி பெறவும் உடனே தபால் கார்டில் எழுதவும்.

தி அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட்

எல்லிஸ் நகர், மதுரை-16.


LIGHT UP YOUR NIGHTS.
STANROSE
STATE OF THE ART
BED LINEN
SLUMBER SET
BED-SHEETS YOU CAN BUILD A LIFE-STYLE AROUND.



பூர்வகதை

இன்றைக்குச் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் விஜயாலய சோழன் இரண்டாவது சோழ சாம்ராஜ்யத்துக்கு அடிகோலினான். அதைத் தொடர்ந்து பல்வேறு சோழ மன்னர்கள் ஆட்சியில் சோழ சாம்ராஜ்யம் படிப்படியாக வலுவடைந்து விரிவடைந்தது. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் காலத்தில் பாண்டிய குலத்தின் கடைசிப் பிரதிநிதியான வீரபாண்டியன் கொல்லப்பட்டான். பாண்டிய நாடு சோழ சாம்ராஜ்யத்தில் ஐக்கியம் அடைந்தது.

சுந்தர சோழரின் மூத்த புதல்வனும் வீர பாண்டியன் தலைகொண்ட வீராதி வீரனுமான ஆதித்த கரிகாலன் சோழ சாம்ராஜ்யத்தின் இளவரசனாகப் பட்டம் சூட்டப் பெற்றான்.

சுந்தர சோழரின் அருமைப் புதல்வி குந்தவை, மற்றொரு புதல்வன் அருள்மொழிவர்மன் ஆகியோர் நாட்டு மக்களின் பேரன்பைப் பெற்றிருந்தார்கள்.

சுந்தர சோழரின் அரசில் முக்கியப் பதவிகள் வகித்த பழுவேட்டரையர்களுக்கும் இதர சிற்றரசர்களுக்கும் முரட்டுச் சுபாவமுள்ள ஆதித்த கரிகாலனிடம் வெறுப்பு. எனவே எல்லோரும் சேர்ந்து சுந்தர சோழரின் பெரியப்பா மகனான மதுராந்தகத் தேவனே சோழ நாட்டின் அடுத்த சக்கரவர்த்தியாக வேண்டும் என முடிவு செய்து, ரகசியமாகத் திட்டம் தீட்டினார்கள். மதுராந்தகனோ, தனது அன்னை செம்பியன் மாதேவியால் சிவனேசச் செல்வனாக வளர்க்கப்பட்டவன். சிற்றரசர்கள் தூபம் போட்டதால் நாடாளும் ஆசை அவனுக்குள் வளர்ந்தது.

இந் நிலையில்தான் காஞ்சியிலிருந்த ஆதித்த கரிகாலன், தனது நெருங்கிய நண்பனான வாணர் குலத்து வீரன் வந்தியத்தேவனிடம் தஞ்சையிலிருந்த சுந்தர சோழருக்கு ஓலை ஒன்று கொடுத்தனுப்பினான். வந்தியத்தேவன், சந்தர்ப்பவசமாக சிற்றரசர்களின் சதி பற்றித் தெரிந்து கொண்டான். குந்தவை தேவியைச் சந்தித்தான். தனது அனுபவங்களைக் கூறினான். இருவரும் காதல் வயப்பட்டனர். குந்தவை அவனிடம் ஓலை கொடுத்து, இலங்கையில் போர் புரிந்து கொண்டிருந்த அருள்மொழியை அழைத்து வர அனுப்பினாள்.

வந்தியத்தேவன் பல சாகசங்கள் புரிந்து பூங்குழலி என்ற ஓடக்காரப் பெண்ணின் துணையுடன் அருள்மொழியைச் சோழ நாட்டுக்கு அழைத்து வந்தான்.

இதற்கிடையில், வீரபாண்டியனின் ஆபத்துதவிகளான ரவிதாஸன், சோமன் சாம்பவன் முதலானோர் சோழ குலத்தை அடியோடு அழித்து விட்டு மீண்டும் பாண்டிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கச் சதித் திட்டம் தீட்டினார்கள். அவர்களுடன் சதியில் ஈடுபட்டிருந்தவள், பழுவேட்டரையர்களுள் மூத்தவரான பெரிய பழுவேட்டரையரின் இளம் மனைவி—பேரழகி நந்தினி.

நந்தினி குழந்தைப் பருவத்தில் பழையாறை ஆலய பட்டர் வீட்டில் வளர்ந்தவள். ஆதித்த கரிகாலர் அவளிடம் ஈடுபாடு கொள்வதை உணர்ந்து செம்பியன்மாதேவி அவளைப் பாண்டிய நாட்டுக்கு அனுப்பி விட, அங்கு வீரபாண்டியனிடம் அன்பு கொண்டாள். சில காலம் சென்று ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனின் தலையைத் துண்டிக்கவே, கரிகாலனைப் பழிவாங்கும் நோக்குடன்தான் பழுவேட்டரையரை மணந்து சிற்றரசர்களின் சதிச் செயல்களை ஊக்குவித்து, பாண்டியனின் ஆபத்து

அமரர் கல்கி



தவிகளுக்கும் உதவி வந்தாள் நந்தினி.

வந்தியத்தேவன் இலங்கையில் ஊமைச் செவிட்டுப் பெண்மணி ஒருத்தியைக் கண்டான். அருள்மொழிவர்மர், அந்த மாதரசிதான் தன்னைக் குழந்தைப் பருவத்தில் காவிரி நதியில் மூழ்காமல் காத்தவள் என்று நினைவுகூர்ந்தார். இருவரும் அந்த ஊமைப் பெண்ணுக்கும் பழுவூர் நந்தினிக்கும் உள்ள உருவ ஒற்றுமையைக் கண்டு வியந்தார்கள். பூங்குழலி அவளைத் தனது அத்தை என்று அழைத்தாள். சோழ நாடு திரும்பி குந்தவையிடம் விஷயத்தைச் சொன்னார்கள். அந்த ஊமைப் பெண் உண்மையில் சுந்தர சோழருக்கு மிக நெருக்கமானவள் என்பது ஊர்ஜிதமாகியது.

இளமைப் பருவத்தில் சுந்தர சோழர் ஒரு தீவில் சிறிது காலம் அப் பெண்ணுடன் வாழ்க்கை நடத்தியிருந்தார். பிறகு அவளைக் கைவிட்டு சோழ நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றிருந்தார். அவளுக்குத் துரோகம் செய்த குற்ற உணர்வு அவரை வாட்டியது. ஏற்கெனவே பாரிச வாயுவால் தாக்கப்பட்டவர் இன்னும் தளர்ந்து போனார்.

ஊமைப் பெண் மந்தாகினிக்கும் சுந்தர சோழருக்கும் பிறந்தவளே நந்தினி, என்று குந்தவை ஊகித்தாள். அப்போது ஆதித்த கரிகாலன் நந்தினியைச் சந்திக்க கடம்பூர் சம்புவரையர் அரண்மனைக்குப் போய்க் கொண்டிருந்தான். அவனுக்கு நந்தினி பேரில் உள்ள மோகத்தால் நேரக்கூடிய அசம்பாவிதங்களைத் தடுக்க வேண்டும் என்பதற்காக, இலங்கையிலிருந்து திரும்பிய வந்தியத்தேவனுக்கு ஆதித்த கரிகாலனைக் காப்பாற்றும்படி கட்டளையிட்டு அனுப்பினாள் குந்தவை. மந்தாகினியைச் சுந்தர சோழரிடம் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தாள்.

இந்தச் சமயத்தில், வீரபாண்டியனின் ஆபத்துதவிகளுடைய சதியின் உச்சகட்டமாக, ஒரே நாளில் சுந்தர சோழர், ஆதித்தகரிகாலன், அருள்மொழிவர்மர் ஆகிய மூவரையும் கொல்லத் திட்டம் தீட்டப்பட்டது. அருள்மொழிவர்மர் சதியிலிருந்து தப்பி, தஞ்சை அரண்மனையை அடைந்தார். சுந்தர சோழருக்கு வைக்கப்பட்ட குறியைத் தான் ஏற்றுக் கொண்டு உயிர்த்தியாகம் செய்தாள் மந்தாகினி. கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் இருந்த ஆதித்த கரிகாலனைக் காப்பாற்ற வந்தியத்தேவனும் அவனிடம் காதல் கொண்ட சம்புவரையர் மகள் மணிமேகலையும் முயன்றார்கள். ஆனால் அவர்கள் முயற்சி தோல்வியுற்றது. கரிகாலனைக் கொன்றது யார் என்று சரியாகத் தெரியாத நிலையில் கொலைப் பழி வந்தியத்தேவன் மீதும் விழுந்தது.

சோழ நாட்டு முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயர். இவருடைய சீடன் — ஒற்றன் ஆழ்வார்க்கடியான். பெரிய பழுவேட்டரையர்தான் நந்தினியின் பேரில் சந்தேகங்கொண்டு அவளைக் கொல்ல நினைத்துத் தவறுதலாக ஆதித்த கரிகாலனைக் கொன்றார் என்பதாக இவன் எண்ணினான். ஆனால் உண்மையில் நடந்தது என்ன என்பது குழப்பமாகவே இருந்தது. நந்தினி குதிரை ஏறி சோழ நாட்டை விட்டே வெளியேறினாள். பிறகு திரும்பவேயில்லை.

ஆதித்த கரிகாலனின் மரணம் சோழ நாட்டில் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது. மக்கள் அருள்மொழிவர்மரே பட்டத்துக்கு வர வேண்டும் என்று விரும்பினர். அருள்மொழியின் தாய்வழிப் பாட்டனார் மலையமானும் அவன் மீது காதல் கொண்டிருந்த கொடும்பாளூர் வானதியின் குலத்தவரும் அருள்மொழியை ஆதரித்தார்கள். ஆனால் மதுராந்தகத்தேவனுக்குத் தான் சிம்மாசனம் ஏற வேண்டும் என்று ஆசை.

அப்போதுதான் செம்பியன்மாதேவியும் முதன் மந்திரி அநிருத்தரும் மதுராந்தகனுக்கு அவனது பிறப்பைக் குறித்த உண்மையைச் சொன்னார்கள்: மதுராந்தகன் செம்பியன்மாதேவியின் வயிற்றில் பிறந்த பிள்ளை அல்ல. குலப் பெருமையற்ற ஒரு செவிட்டு ஊமைப் பெண்ணுக்குப் பிறந்தவன் அவன் என்பதே அந்த உண்மை!



அத்தியாயம் 49

துர்ப்பாக்கியசாலி

மதுராந்தகன் சிறிது நேரம் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்த பிறகு திடீரென்று எழுந்து நின்று, அநிருத்தரைப் பார்த்து, "முதன் மந்திரி! இதெல்லாம் உமது சூழ்ச்சி! எனக்கு அப்போதே தெரியும்! சுந்தர சோழரின் மக்கள், அதிலும் முக்கியமாக அருள்மொழி வர்மன் பேரில் உமக்குப் பிரியம். அவனுக்குப் பட்டங் கட்ட வேண்டும் என்பது உம்முடைய விருப்பம். அதற்காக, இப்படியெல்லாம் என் தாயாரிடம் பொய்யும் புனை சுருட்டும் கூறி அவருடைய உத்தமமான மனத்தைக் கெடுத்திருக்கிறீர்! அன்பில் பிரம்மராயரே! உமக்கு என்ன தீங்கு நான்செய்தேன்? எதற்காக எனக்கு இந்தத் துரோகம் செய்யப் பார்க்கிறீர்?! உம்முடைய நோக்கத்துக்காக நான் என் தாயாருக்குப் பிள்ளையில்லாமல் போக வேண்டுமா? இந்தமாதிரி ஒரு பயங்கரமான பாதகச் சூழ்ச்சி உலகில் இது வரை யாரும் செய்திருக்க மாட்டார்களே? விஷ்ணு பக்தர்களின் குலத்தில் வந்த அந்தணராகிய நீர் இப்படிச் செய்ய வேண்டுமா? இல்லை, இல்லை! உமது பேரில் தவறு ஒன்றும் இல்லை. இளைய பிராட்டி குந்தவையும் அருள்மொழி வர்மனும் ஏதோ சூழ்ச்சி செய்து இப்படி உம்மைப் பாதகம் செய்யப் பண்ணியிருக்கிறார்கள்!" என்று கத்தினான்.

அநிருத்தர் சாவதானமான குரலில், "இளவரசே! தங்கள் பேரில் எனக்கு அவ்வளவு துவேஷம் இருந்தால், கொட்டுகிற மழையில் மரத்தடியில் விழுந்து கிடந்த தங்களை எடுத்து வந்திருக்க மாட்டேன். அருள்மொழி வர்மரைப் பற்றியும் தாங்கள் குறைகூற வேண்டாம். ஈழங் கொண்ட அவ்வீரர் இந்த நிமிஷத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார் தெரியுமா? தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்துள்ள படை வீரர்களிடத்திலும் மக்களிடத்திலும் சென்று நல்ல வார்த்தை சொல்லி அவர்களைச் சமாதானப் படுத்தி வருகிறார். அவருடைய சித்தப்பாவாகிய தாங்கள் உயிரோடிருக்கும் போது தாம் சிங்காதனம் ஏறுவது தர்மம் அல்லவென்றும், அம்மாதிரி வீரர்களும் மக்களும் கோரக்கூடாதென்றும் சொல்லி அவர்கள் மனத்தை மாற்றிச் சரிப்படுத்த முயன்று வருகிறார்....."

"அப்படியானால், அப்படியானால், நீங்கள் சற்று முன் சொன்ன செய்தி அருள்மொழிக்குத் தெரியாது அல்லவா?"

"அருள்மொழிக்கும் தெரியாது; வேறு யாருக்கும் தெரியாது."

"இனிமேல்தான் எதற்காகத் தெரியப் படுத்த வேண்டும்? அநிருத்தரே! நீர் மட்டும் வாயை மூடிக்கொண்டிருப்பதாக ஒப்புக் கொள்ளும். சக்கரவர்த்தி தங்களுக்கு ஒரு கிராமத்தில் பத்து வேலி நிலந்தானே பட்டயத்தில் எழுதி மானிய சாஸனம் அளித்தார்? நான் உமக்குப் பாண்டிய நாட்டையே பரிசாக அளித்து விடுகிறேன்....."

"ஐயா! என்னை வாயை மூடிக்கொண்டிருக்கச் செய்வதற்குப் பாண்டிய நாட்டைத் தரவேண்டியதில்லை. தங்களுடைய அன்னையின் கட்டளை ஒன்றே போதும். அவரிடம் சொல்லுங்கள்!"

மதுராந்தகன் தன்னை வளர்த்த அன்னையைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"குழந்தாய்! மதுராந்தகா! அநிருத்தர் சொல்லுவது சரிதான். அவருக்கு இருபது வருஷத்துக்கு முன்னாலிருந்து என் இரகசியம் தெரியும். அன்றைக்கு அவர், 'மகாராணி! இது தங்களுடைய இரகசியம். தாங்கள் யாரிடமாவது சொன்னாலன்றி வேறு எவருக்கும் தெரிய முடியாது. என் வாய் மூலமாக ஒரு நாளும் வெளிப்படாது. இது சத்தியம்!' என்று சொன்னார். அதை இன்று வரையில் நிறைவேற்றி வருகிறார். சோழ குலத்துக்கு உண்மையாக நடப்பதாக இவர் சத்தியம் செய்து கொடுத்தவர். ஆயினும் சுந்தர சோழ சக்கரவர்த்தியிடம் கூடச் சொன்னதில்லை. நீ சோழ சிம்மாதனத்தில் ஏற நான் சம்மதித்தால் இவரும் பேசாமலிருந்திருப்பார்..."

ஆம், தாயே! பேசாமலிருந்திருப்பேன். ஆனால் உள்ளத்தில் பொய்யை வைத்துக் கொண்டு முதன் மந்திரி உத்தியோகம் பார்த்திருக்க மாட்டேன். ஸ்ரீரங்கநாதருக்குச் சேவை செய்யப் போயிருப்பேன்!" என்றார் அநிருத்தர்.

"ஆனால் அதற்கு அவசியம் ஒன்றும் நேரப் போவதில்லை. மதுராந்தகன் சிங்காதனம் ஏறமாட்டான். என் விருப்பத்தை நிறைவேற்றுவான். அவனே இராஜ்யம் வேண்டாம் என்று சொல்லி விடுவான்! மகனே! 'ஆம்' என்று ஒப்புக் கொள்ளு!"

என்றாள் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி.

''தாயே! அப்படியானால், நான் சிங்காதனம் ஏறத் தடையாயிருப்பது தாங்கள் ஒருவர்தானா? நான் தங்கள் வயிற்றில் பிறந்த மகனில்லையென்றே வைத்துக் கொள்கிறேன். இருபது வருடங்களுக்கு மேல் தங்கள் வயிற்றில் பிறந்த மகனுக்கு மேல் அருமையாக வளர்த்தீர்கள். இப்போது எதற்காக எனக்கு இந்தத் துரோகம் செய்கிறீர்கள்? நான் தங்களுக்கு என்ன தீங்கு செய்தேன்?''

''குழந்தாய்! நீ எனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. நான்தான் உனக்குப் பெருந் தீங்கு செய்து விட்டேன். இத்தனை நாளும் உன்னை என் வயிற்றில் பெற்ற மகனைப் போலவே வ்ளர்த்து வந்து விட்டு இப்போது 'நீ என் மகன் இல்லை!' என்று சொல்கிறேன். இதனால் உன் மனம் எத்தனை புண்ணாகும் என்பது எனக்குத் தெரியாதா? என் ஆயுள் உள்ள வரையில் இதை நான் வெளியிட்டுச் சொல்லியிருக்க மாட்டேன். முக்கியமாக, உன்னிடம் சொல்லியிருக்க மாட்டேன். ஆனால் என் கணவருக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். நான் புகுந்த சோழ குலத்துக்குத் துரோகம் செய்யக் கூடாது. சோழ குலத்தில் பிறக்காதவனைச் சோழ குல சிங்காதனத்தில் நான் ஏற்றி வைக்கக் கூடாது. ஏற்றுவதற்கு நான் உடந்தையாகவும் இருக்கக் கூடாது. என் மனம் இதைப் பற்றி வேதனை அடையவில்லையென்றா நினைக்கிறாய்? 'நீ என் மகன் அல்ல' என்று சற்று முன்னால் சொன்ன போது என் நெஞ்சே உடைந்து போய் விட்டது. கடைசி வரையில் சொல்வதற்குத் தயங்கினேன். உள்ளம் ஒரே குழப்பமாயிருந்தது. என்னுடைய கடமை என்ன, தர்மம் என்ன என்று தெரிந்து கொள்வதற்காகவே நம்பியாண்டார் நம்பியிடம் போயிருந்தேன். அந்த மகான் தர்ம சூக்ஷ்மத்தை விளக்கமாக எடுத்துச் சொன்னார். 'உலகிலுள்ள மாந்தர் அனைவரும் மகா தேவரின் புதல்வர்கள்தான். சிவ பக்த சிரோமணியான தாங்கள் 'சொந்தக் குழந்தை' என்றும், 'வளர்த்த குழந்தை' என்றும், பேதம் பாராட்ட மாட்டீர்கள். தங்களுடைய சொந்த சொத்துக்கள் எல்லாவற்றையும் வளர்த்த மகனுக்கே கொடுப்பீர்கள். ஆனால் இராஜ்யத்தின் சமாசாரம் வேறு. நம்முடைய பொய்யின் மூலம் இன்னொருவருடைய நியாயமான உரிமையைத் தடை செய்வது பாவமாகும். சோழ குலத்தில் பிறக்காதவனைத் தெரிந்து சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைப்பது குலத்துரோகமாகும். தங்கள் மகனிடமும் சக்கரவர்த்தியிடமும் உண்மையைச் சொல்லி விடுவது தான் தர்மம்' என்று உபதேசித்தார். கேட்டுக் கொண்டு திரும்பி வந்தேன். குமாரா! நீ என் சொந்த மகன் அல்ல என்று சொல்வதில் எனக்குச் சந்தோஷம் இருக்க முடியுமா? சக்கரவர்த்தியிடம் சொல்லும் போதுதான் இதை நான் பெருமையுடன் சொல்ல முடியுமா?''

அச் சமயம் மதுராந்தகன் திடீரென்று எழுந்து, செம்பியன்மாதேவியின் காலில் விழுந்து. ''அன்னையே! எனக்கு இராஜ்யம் வேண்டாம்; சிங்காதனமும் வேண்டாம். இங்கே இருக்கச் சொன்னால் இருக்கிறேன்; தேசாந்திரம் போகச் சொன்னால் போய் விடுகிறேன். ஆனால் நான் தங்கள் மகன் அல்ல; தங்கள் திருவயிற்றில் பிறந்தவன் அல்ல என்று மட்டும் சொல்ல வேண்டாம்! யாரிடமும் சொல்ல வேண்டாம்! சொன்னீர்களானால் அந்த அவமானத்தினாலேயே என் நெஞ்சு வெடித்து இறந்து விடுவேன்!'' என்று கதறினான்.

செம்பியன் மாதேவி கண்களில் நீர் ததும்ப மிகுந்த ஆவலுடன் மதுராந்தகனை வாரி எடுத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.

''குமாரா! உன்னை இந்தத் துன்பம் அணுகாதிருக்கும் பொருட்டுத் தான் இந்த உலக இராஜ்யத்தில் விருப்பமில்லாதவனாகவும் சிவலோக சாம்ராஜ்யத்தில் பற்றுள்ளவனாகவும் வளர்க்க முயன்று வந்தேன். அதில் தோல்வி அடைந்தேன். எந்தப் பாவிகளோ உன் மனத்தைக் கெடுத்து விட்டார்கள். இப்போதும் மோசம் போய் விடவில்லை. நீயாக உன் மனப்பூர்வமாக 'இந்த ராஜ்யம் எனக்கு வேண்டாம்; சுந்தர சோழரின் மகன் அருள்மொழியே அரசாளட்டும்' என்று நாடு நகரமறியச் சொல்லி விட்டாயானால், 'நீ என் மகனல்ல' என்று பகிரங்கமாகச் சொல்ல வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. உன் மனத்தை இப்போது புண்படுத்தியதே எனக்கு அளவிலாத வேதனை தருகிறது. இன்றைக்கு முதன் மந்திரி அநிருத்தரின் முன்னிலையில் ஒப்புக் கொள். மூன்று நாளைக்கெல்லாம் சிற்றரசர்களின் மகா சபை கூடும். அச் சபையின் முன்னிலையிலேயும் ஒப்புக் கொள். 'எனக்கு இராஜ்யம் ஆளும் விருப்பம் இல்லை. சிவபெருமானுடைய கைங்கரியத்திலும் சிவாலயத் திருப்

பணியிலும் ஈடுபட விரும்புகிறேன். என் தந்தை தாயின் கட்டளையும் அதுதான்! அருள்மொழிவர்மனுக்கே பட்டம் கட்டுங்கள்!' என்று சொல்லி விடு. 'சோழ இராஜ்யத்துக்கு விரோதமாக யாரேனும் துர்ப்புத்தி கூறினாலும் செவி சாய்ப்பதில்லை' என்று சத்தியம் செய்து விடு! அப்படிச் செய்து விட்டால் நானாவது முதன் மந்திரியாவது உன் பிறப்பைக் குறித்த இரகசியத்தை வெளியிடுவதற்கே அவசியம் இராது. நீ எப்போதும் போல் என் கண்ணின் மணியான அருமைப் புதல்வனாயிருந்து வருவாய். நாம் இருவரும் சேர்ந்து இந்தப் பரந்த பாரத தேசமெங்கும் யாத்திரை செய்வோம். கன்னியாகுமரியிலிருந்து கைலாசகிரி வரையில் செல்வோம். ஆங்காங்கே சிவாலயத் திருப்பணிகள் செய்வோம். அருள்மொழிவர்மன் என்னிடம் அளவிலாத பக்தி உள்ளவன். உன்னைப் போலவே அவனையும் பெரும்பாலும் நான்தான் வளர்த்தேன். என் பேச்சுக்கு அவன் ஒருகாலும் மாறு சொல்ல மாட்டான்!'' என்றாள் மழவரையர் மகளான செம்பியன் மாதேவி.

மதுராந்தகன் இதைக் கேட்டு நெற்றியை இரண்டு கைகளினாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

''ஆகா! எனக்குப் பிராயம் தெரிந்தது முதல் ஏதேதோ உருவமில்லாத நிழல் போன்ற நினைவுகள் அடிக்கடி தோன்றி எனக்கு வேதனை அளித்து வந்தன. அவற்றுக்கெல்லாம் காரணம் இப்போதுதான் தெரிகிறது. என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலி இந்த உலகத்தில் யார் உண்டு? என்ன வேளையில் என்ன ஜாதகத்தில் பிறந்தேனோ தெரியவில்லை. ஒரே நாளில், ஒரு கண நேரத்தில், தாய் தந்தையரை இழந்தேன்; குலம் கோத்திரம் இழந்தேன்; ஒரு பெரிய மகா இராஜ்யத்தை இழந்தேன்; ஆயிரம் வருஷத்து வீர பரம்பரையில் வந்த சிங்காதனத்தை இழந்தேன்; சிநேகிதர்கள் யாவரையும் இழந்தேன். ஆம்; இந்த உண்மை தெரிந்தால் அப்புறம் எவன் எனக்குச் சிநேகிதனாயிருக்கப் போகிறான்? எனக்குப் பட்டம் கட்டுவதற்காக உயிரைக் கொடுப்பதாய்ப் பிரமாணம் செய்த சிற்றரசர்கள் எல்லாரும் ஒரு நொடியில் என்னைக் கைவிட்டு விடுவார்கள்!.... ஆம்; என்னைப் போன்ற துர்ப்பாக்கியசாலி இந்த உலகம் தோன்றிய தினத்திலிருந்து யாரும் இருந்திருக்க முடியாது. அம்மா! என் அறிவு குழம்புகிறது. தெளிவாகச் சிந்திக்க முடியவில்லை. இரண்டு நாள் அவகாசம் கொடுங்கள்! என் முடிவைச் சொல்லுகிறேன்!'' என்றான்.

''குழந்தாய்! நீ யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? என் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டுதான் இதைச் சொல்கிறேன். ஒன்று நீயாக இராஜ்யத்தைத் துறந்து விடுவதாய் ஒப்புக் கொள்ள வேண்டும். அல்லது நீ என் வயிற்றில் பிறந்த மகன் அல்ல என்பதை நாடு நகரமெல்லாம் அறிய நான் ஒப்புக் கொள்ள வேண்டும். எப்படியும் நீ சிங்காதனம் ஏற முடியாது. நீ யோசித்துச் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்றாள் பெரிய பிராட்டியென்று உலகமெல்லாம் போற்றி வணங்கிய உத்தமி.

அப்போது அநிருத்தர் ''அம்மா! இரண்டு நாள் அவகாசம் கொடுப்பதில் தவறு ஒன்றுமில்லை. மந்திராலோசனை சபையும் மகாஜன சபையும் கூடுவதற்கு இன்னும் மூன்று நாள் இருக்கிறது. அதுவரை இளவரசர் நிம்மதியாக யோசித்துப் பார்க்கட்டும்!'' என்றார்.

''அம்மா! அம்மா! இந்த இரகசியம் தங்களையும் முதன் மந்திரியையும் தவிர வேறு யாருக்காவது தெரியுமா?'' என்று மதுராந்தகன் திடீரென்று தோன்றிய ஆவலுடன் கேட்டான். அவன் உள்ளத்தில் என்ன தீய எண்ணம் தோன்றியதோ, எத்தகைய சூழ்ச்சி முளை விடத் தொடங்கியதோ, நாம் அறியோம்.

மதுராந்தகனுடைய பரபரப்பு மழவரையர் மகளுக்குச் சிறிது வியப்பை அளித்தது. ''எங்களைத் தவிர இன்னும் மூன்று பேருக்கு மட்டும் தெரிந்திருந்தது, மகனே! அவர்களில் உன் தந்தை, — சிவநேசச் செல்வரான என் சிந்தையில் குடிகொண்ட கணவர், — காலமாகி விட்டார். தமக்கையும் தங்கையுமான இரண்டு ஊமை ஸ்திரீகளுக்குத் தெரியும். அவர்களிலும் ஒருத்தி,— உன்னைப் பெற்றவள், — இரண்டு நாளைக்கு முன்பு சுந்தரசோழர் அரண்மனையில் துர்மரணம் அடைந்தாள். அவளுடைய உயிரற்ற உடல் அடக்கம் செய்யப்படாமல் கிடந்தபோதே உன்னிடம் உண்மையைச் சொல்லி விடலாமா என்று பார்த்தேன். ஆனால் மனம் வரவில்லை. உன்னை வேதனைப்படுத்த விருப்பமில்லாமல் சும்மாயிருந்து விட்டேன். மகனே! உன்னைப் பெற்றவளை நினைத்து நீ அழுவதாயிருந்தால் அழு! உன்னை அவள் பெற்றாளேயன்றி, அப்புறம் உனக்கும் அவளுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க

வில்லை. உன்னை வந்து பார்க்க வேண்டும் என்று கூட முயற்சி செய்யவில்லை. அவள் புத்திசுவாதீனத்தை இழந்து பிச்சியாகிப் போய் விட்டாள். அவளை நினைத்து நீ கண்ணீர் விடுவதாயிருந்தால் விடு!'' என்று சொன்னாள் தேவி.

''இல்லை, இல்லை. தங்களைத் தவிர வேறு யாரையும் அன்னையாக நினைக்க என்னால் முடியவில்லை. முன்னாலேயே தாங்கள் சொல்லியிருந்தாலும் அவள் அருகிலே கூடப் போயிருக்க மாட்டேன். இரகசியம் தெரிந்த இன்னொருவர் யார், அம்மா! இந்த இன்னொரு ஊமை ஸ்திரீ யார்?'' என்று கேட்டான்.

''அவளுடைய தங்கைதான். இந்தத் தஞ்சைக்கு வெளியில் நந்தவனம் வைத்து வளர்த்து வருகிறவள். என் வயிற்றில் செத்துப் போய்க் கட்டை போல் பிறந்த சிசுவையும் உன்னையும் மாற்றிப் போட்ட வள் அவள்தான். பிறவி ஊமையும் செவிடு மாதலால் யாரிடமும் சொல்ல மாட்டாள். அவளுக்கும் ஒரு குமாரன் இருக்கிறான். தாயும் மகனும் தஞ்சைத் தளிக்குளத்தார் ஆலயத்துக்குப் புஷ்ப சேவை செய்து வரு கிறார்கள். அவர்களுக்கு மானியம் கொடுத்து நான்தான் ஆதரித்து வரு கிறேன்.''

''ஆகா! அவர்களை எனக்குத் தெரியும். தாய், மகன் இருவரையும் தெரியும். மகன் பெயர் சேந்தன் அமுதன். வந்தியத்தேவன் என்ற ஒற்றன் இங்கிருந்து தப்புவதற்கு உதவி செய்தவன். அம்மா!, அந்தப் பிள் ளைக்கு இதைப் பற்றி ஏதாவது தெரியுமா?''

''தெரியாது, மகனே! தெரியாது! அவனு டைய தாயார் இந்த இரகசியத்தை யாரிட மும் சொல்வதில்லை என்று என்னிடம் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாள். அதைப் பற்றி உனக்குக் கவலை வேண் டாம். அவளைத் தவிர நானும் முதன் மந்திரியுந்தான்!''



மதுராந்தகனுடைய உள்ளத்தில் அச்சமயம் பயங்கரமான தீய எண்ணங்கள் பல தோன்றின. இவர்கள் இருவரும் இவ்வுலகை விட்டு அகன்றால், உண்மையைச் சொல்லக் கூடியவர்கள் யாருமே இல்லை என்று எண்ணினான். முதன் மந்திரிக்கு நான் எந்த விதத்திலும் கடமைப்பட்டிருக்கவில்லை. இந்த மாதரசியோ உண்மையில் என் அன்னை அல்ல. இவர்களிடம் எதற்காக நான் கருணை காட்ட வேண்டும்? ஆகா! என் பிறப்பைக் குறித்த இரகசியத்தை அறிவிப்பதாகச் சுந்தர சோழரின் தோட்டத்தில் கூறினானே, அவன் யார்? பொக்கிஷ நிலவறையில் என்னை வந்திருக்கும்படி சொன்னவன் யார்? அவனை மட்டும் நான் சந்திக்கும்படி நேர்ந்தால்? சுந்தர சோழரைக் கொல்ல முயன்று அவன் அந்த ஊமை ஸ்திரீயைக் கொன்று விட்டான். அவன் பேரில் குற்றமில்லை. அவள்தான் என் தாயார் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். அவள் என் தாயார் என்றால், என் தகப்பனார் யார்? ஒருவேளை.... ஒரு வேளை... இந்த வஞ்சனை நிறைந்த கிழவியும் இந்த வேஷதாரிப் பிரம்மராயனும் என்னை வஞ்சிக்கத்தான் பார்க்கிறார்களோ? உண்மையில் நான் சுந்தர சோழரின் குமாரன்தானோ?.... ஆகா! இந்த உண்மையை எப்படி அறிவது?

''மகனே! நான் போய் வருகிறேன். நன்றாக யோசித்துச் சீக்கிரம் ஒரு முடிவுக்கு வந்து விடு! பெற்ற தாயை விடப் பதின் மடங்கு அன்புடன் உன்னை இருபத்திரண்டு வருஷம் வளர்த்த நான் உனக்குக் கெடுதலைச் சொல்ல மாட்டேன். இந்த நிலையற்ற பூலோக இராஜ்யத்தைத் தியாகம் செய்து விடு! என்றும் அழியாத சிவலோக சாம்ராஜ்யத்தை அடைவதற்கு வழி தேடு!'' என்று கூறினாள் பெரிய

பிராட்டியார்.

இச்சமயம் அவர்கள் யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. அருள்மொழிவர்மன் அந்த அறைக்குள் வந்தான். நேரே செம்பியன் மாதேவியிடம் வந்து நமஸ்கரித்தான்.

"தேவி! தாங்கள் தங்களுடைய அருமைப் புதல்வருக்குக் கூறிய புத்திமதியை எனக்குக் கூறிய புத்திமதியாகவும் ஏற்றுக் கொண்டேன். இந்தச் சோழ சாம்ராஜ்யம் எனக்கு உரியதாக இருக்கும் பட்சத்தில் அதை நான் தியாகம் செய்து விடச் சித்தமாயிருக்கிறேன். தங்களுடைய ஆசியினால் என் உள்ளம் சிவபெருமானுடைய பாத கமலங்களில் செல்லட்டும். சிவலோக சாம்ராஜ்யத்தில் ஒரு சிறிய இடம், — தங்கள் கணவராகிய மகான் கண்டராதித்தர் இருக்கும் இடத்துக்கருகில், எனக்குக் கிடைக்கட்டும்! அவ்வாறு எனக்கு ஆசி கூறுங்கள்!" என்றான்.

இதைக் கேட்ட செம்பியன்மாதேவியும் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு திகைத்து நின்றார்கள.

"தேவி! சற்று முன்னால் தங்கள் செல்வப் புதல்வரிடம் தாங்கள் சொல்லிக் கொண்டிருந்ததை நான் விருப்பமின்றிக் கேட்கும்படியாக நேர்ந்து விட்டது. மன்னிக்க வேணும். இந்த மாளிகையைச் சுற்றி நின்ற ஜனங்களைக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்த்து விட்டுத் திரும்பி வந்தேன். முதன் மந்திரியைப் பார்த்து மேலே நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசுவதற்காக இந்த மாளிகையில் நுழைந்தேன். தாங்களும் இங்கு இருப்பதாக அறிந்ததும் 'பழம் நழுவிப் பாலில்



விழுந்தது போலாயிற்று' என்று எண்ணிக் கொண்டு வந்தேன். தாங்கள் வழக்கத்தைக் காட்டிலும் உரத்த குரலில் பேசினீர்கள். மதுராந்தகத் தேவரும் சப்தம் போட்டுப் பேசினார். உள்ளே பிரவேசிக்கலாமா, வேண்டாமா என்று தயங்கி நிற்கையில் தங்களுடைய சம்பாஷணையில் ஒரு பகுதி என் காதில் விழுந்தது. தேவி! உயிரோடிருப்பவர்களில் தங்களுக்கும் முதன் மந்திரிக்கும் சேந்தன் அமுதனுடைய அன்னைக்கும் மட்டும் மதுராந்தகருடைய பிறப்பைக் குறித்த இரகசியம் தெரியும் என்று சற்று முன் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். அது சரியல்ல. எனக்கும் என் தமக்கையாகிய இளைய பிராட்டிக்கும் கூட அது தெரியும். சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பதற்காகத் தன் இன்னுயிரை ஈந்த மந்தாகினி தேவியை நான் ஈழ நாட்டில் அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. சித்திர பாஷையின் மூலம் அவர் எனக்கு இதையெல்லாம் தெரிவித்தார். நான் என் தமக்கையாரிடம் கூறினேன். இரண்டு பேரும் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். என் சிறிய தகப்பனாராகிய மதுராந்தகத் தேவர்தான் சோழ சிங்காதனத்தில் வீற்றிருக்க வேண்டியவர். அவர் தங்களுடைய சொந்த மகனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு ஆதரவுடன் வளர்க்கப்பட்டவர். என்னைக் காவேரி வெள்ளத்தில் மூழ்காமல் காப்பாற்றியதோடு, பின்னரும் பலமுறை உயிர் பிழைப்பதற்கு உதவி செய்த மந்தாகினி தேவி வயிற்றில் பிறந்த புதல்வர். ஆகையால், எப்படிப் பார்த்தாலும் சோழ சிங்காதனத்தில் ஏற உரிமை உள்ளவர். அவருடைய உரிமையில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், நான் அதைத் தீர்த்து வைப்பேன். சோழ சிங்காதனத்தில் எனக்குள்ள பாத்தியதையைத் தங்கள் பாத தாமரைகளின் ஆணையாகத் தியாகம் செய்வேன். ஆகையால், தாங்கள் மதுராந்தகத் தேவர் தங்கள் புதல்வர் அல்லவென்று சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. மதுராந்தகர் சோழ சிங்காதனத்தைத் தியாகம் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை!"

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறியதைக் கேட்டு அந்த அறையில் இருந்த மூவரும் தங்கள் வாழ்நாளில் என்றும் அடைந்திராத வியப்பையும் பிரமிப்பையும் அடைந்தார்கள்.

அவர்களில் அநிருத்தர்தான் முதலில் அறிவுத் தெளிவு பெற்றார்.


"இளவரசே! தாங்கள் இப்போது கூறிய வார்த்தைகள் காவியத்திலும் இதிகாசத்திலும் இடம்பெற வேண்டும். கருங்கல்லிலும் செப்பேட்டிலும் பொன் தகடுகளிலும் பொறிக்கப்பட வேண்டியவை. ஆனால் இங்கேயுள்ள நாம் மட்டும் இந்த விஷயத்தைப் பற்றித் தீர்மானம் செய்ய முடியாது. சக்கரவர்த்தியையும் மற்ற சிற்றரசர்களையும் கலந்தாலோசிக்க வேண்டும். பின்னொரு காலத்தில் உண்மை வெளியானால் மக்கள் என்ன சொல்வார்கள் என்பதையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இளவரசே! மகா சபை கூடுவதற்கு இன்னும் மூன்று தினங்கள்தான் இருக்கின்றன. அதுவரையில் நாம் ஒவ்வொருவரும் நிதானமாக ஆழ்ந்து யோசனை செய்து பார்ப்போம்!'' என்றார்.

அத்தியாயம் 50

குந்தவையின் கலக்கம்

செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்தவள் இளைய பிராட்டி குந்தவை தேவி. அழகில் ரதியையும், அறிவில் கலைமகளையும், அதிர்ஷ்டத்தில் திருமகளையும் ஒத்தவள். சுந்தர சோழ சக்கரவர்த்தி முதல் சோழ நாட்டின் சாதாரண குடிமக்கள் வரையில் அவளைப் போற்றினார்கள். அரண்மனையில் அவள் காலால் இட்டதைத் தலையினால் செய்ய எத்தனையோ பேர் காத்திருந்தார்கள். சிற்றரசர்கள் தங்கள் குலத்தில் வந்த அரசிளங் குமரிகளுக்குக் குந்தவை தேவியின் பணிப் பெண்ணாக இருக்கும் பாக்கியம் கிடைக்காதா என்று ஏங்கினார்கள். பாரத நாட்டில் அந்நாளில் பேரரசர்களாக விளங்கிய பலரின் பட்டத்துக்குரிய அரச குமாரர்கள் இளையபிராட்டி குந்தவையின் கைப்பிடிக்கும் பாக்கியத்துக்குத் தவம் கிடந்தார்கள்.

அத்தகைய சகல பாக்கியங்களும் வாய்க்கப் பெற்ற இளையபிராட்டி அளவில்லாத சோகக் கடலில் மூழ்கியிருந்தாள். ஆதித்த கரிகாலனுக்கு அவள் சொல்லி அனுப்பிய எச்சரிக்கையெல்லாம் பயனிலதாய்ப் போயிற்று. சம்புவரையர் மாளிகைக்குப் போக வேண்டாமென்று அவனுக்கு அவள் அவசரச் செய்தி சொல்லி அனுப்பியிருந்



தான். அவளுடைய வார்த்தைக்குஎப்போதும் மிக்க மதிப்புக் கொடுக்கக் கூடிய அருமைத் தமையன் இந்த வார்த்தையைத் தட்டி விட்டுக் கடம்பூர் அரண்மனைக்குப் போனான். அங்கே மர்மமான முறையில் அகால மரணமடைந்தான். நந்தினி கரிகால னுக்கும் தனக்கும் அருள்மொழிக்கும் சகோதரி என்றே அவள் நம்பியிருந்தாள். நந்தினி ஏதோ ஒரு காரணத்துக்காக அவன் மீது வஞ்சம் கொண்டிருந்தாள் என்பதை யும் அறிந்திருந்தாள். நந்தினியின் கையினா லேயே கரிகாலன் மரணம் அடைய நேர்ந் திருந்தால் அதைக் காட்டிலும் சோழ குலத் துக்கு ஏற்படக்கூடிய அபகீர்த்தியும் பழியும் வேறெதுவும் இல்லை. கரிகாலன் மரணத் துக்குப் பிறகு நந்தினி என்ன ஆனாள் என்பது தெரியவில்லை.

அருமைத் தமையனைப் பறி கொடுக்க நேர்ந்தது அவளுக்கு எல்லையில்லாத துயரத்தை அளித்தது. உயிர் பிரிந்து இரண்டு நாளைக்குப் பிறகும் அவனுடைய திரு முகத்தில் குடிகொண்டிருந்த வீரக் களையை நினைத்து நினைத்து உருகினாள். ஆகா! என்னவெல்லாம் அந்த மகாவீரன் கனவு கண்டு கொண்டிருந்தான்? கரிகால் பெருவளத்தானைப் போல் இமயமலை வரையில் திக்விஜயம் செய்து அம் மாமலை யின் சிகரத்தில் புலிக் கொடியை நாட்டப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந் தானே? அப்படிப்பட்டவனுடைய திருமேனி அரை நாழிகைப் பொழுதில் எரிந்து பிடிசாம்பலாகி விட்டது. சோழ நாட்டின் மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டது. அப்படிக் கலந்த மண்ணிலிருந்து வருங் காலத்தில் ஆயிரமாயிரம் வீராதி வீரர்கள் தோன்றுவார்கள். சோழ நாட்டிலிருந்து நாலா திசைகளிலும் செல்லுவார்கள். கடல் கடந்து தூர தூர தேசங்களுக்குச் செல் வார்கள். வீரப் போர்கள் புரிந்து சோழ சாம்ராஜ்யத்தின் எல்லையை விஸ்தரிப் பார்கள். போகுமிடங்களிலெல்லாம் வான ளாவிய கோபுரங்களை உடைய கோவில் களை எழுப்புவார்கள். அவைகள் சோழ நாட்டின் பெருமையை உலகுக்கு எடுத்து இயம்பிய வண்ணம் கம்பீரமாக நிற்கும். தமிழையும் தமிழ்க் கலைகளையும் சைவ வைஷ்ணவ சமயங்களையும் பரப்புவார் கள். மூவர் தேவாரப் பதிகங்களும் கடல் கடந்த நாடுகளிலெல்லாம் ஒலி செய்யும். "வெற்றி வேல் வீர வேல்!" என்னும் வெற்றி முழக்கங்கள் கேட்கும்...

இவையெல்லாம் வெறும் கனவு அல்ல. நடக்கக் கூடி யவைதான். அருள்மொழி வர்மன் பிறந்த வேளையின் விசேஷம் பற்றிப் பெரியவர் களும் சோதிடர்களும் அனு பவம் வாய்ந்த தாய்மார்களும் சொல்லி யிருப்பதெல்லாம் உண்மையானால், கரி காலன் கனவு கண்டவையெல்லாம் அருள் மொழிவர்மன் மூலமாக நினைவாகக் கூடும்.

ஆனால், அதற்கு எத்தனை இடைஞ்சல் கள் குறுக்கே நிற்கின்றன? ஆகா! இச் சிற்றரசர்கள் தங்களுக்குள் பூசல் விளை வித்துக் கொண்டு என்ன விபரீதங்கள் விளைவிப்பார்களோ, தெரியவில்லை. மலையமானும் வேளானும் அருள்மொழி வர்மனைச் சிம்மாசனம் ஏற்றியே தீருவ தென்று ஒரே பிடிவாதமாக இருக்கிறார்கள். பழுவேட்டரையர்களும் அவர்களுடைய நண்பர்களும் மதுராந்தகனுக்காகப் படை திரட்டி வருகிறார்கள். சக்கரவர்த்தியோ அடுத்தடுத்து நேர்ந்து விட்ட இரு பெரும் விபத்துக்களால் சோகக் கடலில் ஆழ்ந் திருக்கிறார். யாரிடமும் எதைப் பற்றியும் பேச மறுக்கிறார். இளம் பிராயத்தில் தாம் செய்த பாவத்தை எண்ணி எண்ணிப் பச்சா தாபப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருக் குத் தேறுதல் மொழி சொல்லக் கூட யாருக் கும் தைரியமில்லை. அவருடைய செல்வக் குமாரியாகிய தனக்கே அவரை அணுக அச்சமாயிருக்கிறதென்றால் மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்!

அருள்மொழிவர்மன் இராஜ்யத்தைத் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறான். மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டி வைத்து விட்டுத் தான் சோழர் படைகளுடன் கடல் கடந்து திக் விஜயம் செய்யப் போக விரும்பு கிறான். ஆனால் அதற்கும் எதிர்பாராத முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கிறது. ஏது காரணத்தினாலோ, சோழ நாடே போற்றிப் பணியும் முதிய பிராட்டியான செம்பியன் மாதேவி தம் மகனுக்குப் பட்டம் கட்டுவதை ஆட்சேபிக்கிறார். காலஞ் சென்ற தமது கணவரின் கட்டளை என்கிறார்...

இந்தச் சிக்கல்களெல்லாம் எப்படித் தீரப் போகிறதோ, தெரியவில்லை.

இப்படிச் சோழர் குலத்தைப் பற்றியும் சோழ மகாராஜ்யத் தைப் பற்றியும் ஏற்பட்டிருக் கும் கவலைகள் எல்லாம் போதாவென்று, குந்தவையை இன்னொரு பெருங்கவலை வாட்டி வதைத்தது. அவளுடைய உள்ளங் கவர்ந்த வாணர்குல வீரனைப் பாதாளச்

சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். ஆதித்த கரிகாலனுடைய மரணத்துக்கு அவனைப் பொறுப்பாக்க முயல்கிறார்கள். இதில் அந்தப் பல்லவர் குலத்துப் பார்த்திபேந்திரன் பிடிவாதமாக இருக்கிறான். பாட்டனார் மலையமான் ஒருவேளை தான் சொன்னால் கேட்டு விடுவார். ஆனால் சந்தேகத்துக்கு ஆளாகியிருக்கும் ஒருவன் விஷயத்தில் பெண்பாலாகிய தான் எப்படித் தலையிடுவது? தமையனாகிய ஆதித்த கரிகாலனைக் காட்டிலும் வழிப்போக்கனாக வந்த வந்தியத்தேவன் பேரில் தனக்கு அதிக அபிமானம் என்று ஏற்பட்டால், அதைவிட அபகீர்த்தி வேறு என்ன இருக்கிறது? பார்த்திபேந்திரன் வேணுமென்றே அத்தகைய அபகீர்த்தியைப் பரப்பக் கூடியவன். கரிகாலன் கொலையுண்டு கிடந்த இடத்தில் வந்தியத்தேவனைக் கையும் மெய்யுமாகச் சம்புவரையரும் கந்தமாறனும் பிடித்ததாகப் பார்த்திபேந்திரன் சொல்கிறான். ஆனால் கரிகாலனை ஒரு நிமிடமும் விட்டுப் பிரியக் கூடாது என்று தான் கூறிய வார்த்தையையே வந்தியத்தேவன் நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆதித்த கரிகாலனைக் கொலைகாரர்களிடமிருந்து காப்பாற்றுவதற்கு முயன்று அதில் வெற்றி காண முடியாமல் தோல்வியுற்றிருக்க வேண்டும்.

ஆனால் இதைப் பற்றிய உண்மையை எப்படி அறிந்து கொள்வது? வந்தியத்தேவரைத் தான் போய்ப் பார்க்க முயன்றாலும், அவரைச் சிறையிலிருந்து இங்கே தருவித்தாலும் வீண் சந்தேகங்களுக்கும் பழிச் சொற்களுக்கும் இடங்கொடுக்கும். தன்னைப் பற்றி யாரும் எதுவும் சொல்லத் துணிய மாட்டார்கள்; அப்படிச் சொன்னாலும் கவலையில்லை! ஆனால் கரிகாலனுடைய மரணத்துக்கு அருள்மொழிவர்மனையே காரணமாக்கவும் சில வஞ்சகர்கள் முயன்று வருகிறார்கள். தான் அவசரப்பட்டு ஏதாவது செய்வதால், அவர்களுடைய கட்சிக்கு ஆக்கம் உண்டாகி விடக் கூடாது அல்லவா?

தெய்வமே! தேவி! ஜகன்மாதா! பிறந்ததிலிருந்து ஒரு கவலையுமின்றி வாழ்ந்திருந்த எனக்கு எப்பேர்ப்பட்ட சோதனையை அளித்து விட்டாய்?....

இவ்வாறெல்லாம் குந்தவையின் உள்ளம் எண்ணி எண்ணிப் புண்ணாகிக் கொண்டிருந்தது. கரிகாலனுடைய மரணச் செய்தியும் வந்தியத்தேவர் அதில் சம்பந்தப்பட்டிருக்கும் செய்தியும் வந்தது முதல் இளைய பிராட்டி இரவில் ஒரு கணமும் தூங்க முடியவில்லை. இந்தச் சிக்கலான நிலைமை தீர்வதற்கு வழி கண்டுபிடிக்க யோசித்து யோசித்து, பல வழிகளை யோசித்து, ஒவ்வொன்றையும் நிராகரித்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய உயிருக்குயிரான தோழி வானதியிடம் கூட மனம் விட்டுப் பேசுவதற்கு மறுத்தாள்.

வானதியும் அவளுடைய மனோநிலையை ஒருவாறு உணர்ந்து கொண்டு ஏதும் பேசாமலும் கேட்காமலும் இருந்தாள். குந்தவைக்குப் பக்கத்தில் பெரும்பாலும் நிழல் போல் தொடர்ந்து இருந்து கொண்டு, அந்த நிழலைப் போலவே மௌனமாகவும் இருந்து வந்தாள்.

இவ்விதம் சமயோசிதம் அறிந்து குந்தவையின் சிந்தனைகளில் குறுக்கிடாமல் சர்வ ஜாக்கிரதையாக இருந்து வந்த வானதி அன்றைக்குத் திடீரென்று இளைய பிராட்டியை நெருங்கி, "அக்கா! அக்கா! தங்களைப் பார்ப்பதற்காக ஒரு பெண் வந்திருக்கிறாள். கண்ணீரும் கம்பலையுமாய் நிற்கிறாள். பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது!" என்று சொன்னதும் குந்தவைக்கே சிறிது வியப்பாகப் போய் விட்டது.

"அவள் யார்? என்ன விஷயம் என்று நீ கேட்கவில்லையா?" என்றாள்.

"கேட்டேன், அக்கா! அதைச் சொன்னால் தங்களுக்கு எரிச்சல் வருமோ, என்னமோ! சம்புவரையர் மகள் மணிமேகலையாம்! சின்னப் பழுவேட்டரையர் மாளிகையில் சம்புவரையர் குடும்பத்தைச் சிறை வைத்திருக்கிறார்கள். இவள் ஒருவருக்கும் தெரியாமல் வழி விசாரித்துக் கொண்டு ஓடி வந்திருக்கிறாள். என்ன காரியம் என்று கேட்டால், தங்களிடம் நேரிலேதான் சொல்வேன் என்கிறாள். அவளுடைய கண்ணீர் ததும்பிய முகத்தை நீங்கள் பார்த்தால் உடனே உங்களுடைய மனம் கூட மாறி விடும்!" என்றாள் வானதி.

"அப்படியானால், என் மனம் கல் மனம் என்றா சொல்கிறாய்?" என்றாள் குந்தவை சிறிது கோபமாக.

"தங்களுக்கு உண்மையிலேயே கல் மனம் தான், அக்கா! இல்லாவிட்டால் வந்தியத்தேவரைப் பாதாளச் சிறையில் விட்டு விட்டுச் சும்மா இருப்பீர்களா?" என்றாள் வானதி.

"சரி, சரி! அந்தப் பெண்ணை இங்கே வரச் சொல்!" என்றாள் குந்தவை.

வானதி மானைப் போல் குதித்தோடி மறு நிமிடம் மணிமேகலையை அழைத்துக் கொண்டு வந்தாள்.

(தொடரும்)

தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியாகிற நகைச்சுவைத் துணுக்குகளில் பெண்கள் ரொம்பக் கேலிக்குரியவர்களாகச் சித்திரிக்கப்படுகிறார்களாம். இதை எதிர்த்து, மக்கள் கவனத்தை ஈர்க்க, ஒரு கருத்தரங்கினை ஜனநாயக மாதர் சங்கத்தின் "மீடியா கமிட்டி'' நடத்தியது. இந்தக் குழுவைச் சேர்ந்த மங்கை, பிரபல துணுக்கு எழுத்தாளர் படுதலம் சுகுமாரனைச் சந்தித்த போது.....



* படுதலம் சுகுமாரன்.

பெண்மையைப் பரிகசிப்பது ஜோக் ஆகுமா?

மங்கை: நகைச்சுவைத் துணுக்குகளில் பெண்கள் மிக மோசமாகச் சித்திரிக்கப் படுகிறார்கள். ஊர் வம்பு பேசுகிறவர்களாக, கவர்ச்சிப் பொருள்களாக, ஆண்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறவர்களாகக் காட்டப்படுகிறார்கள். இதுதான் எங்கள் முடிவு.

படுதலம் சுகுமாரன்: நீங்கள் கூறுவது பெரிய ஜோக்காக இருக்கிறது! ஜோக் என்பதன் அடிப்படையை நீங்கள் புரிந்து கொண்டிருந்தால் இந்த மாதிரி ஒரு விஷயத்தையே நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்க மாட்டீர்கள்!

மங்கை: அது என்ன அடிப்படை? அதீத கற்பனையுடன் பெண்களைக் கேலி செய்வதுதானா?

ப.சு: சமுதாய நிகழ்வுகளின் பிரதிபலிப்புத்தான் ஜோக். ஆனால் அது சிரிப்பதற்காக மட்டுமே உருவாக்கப்படுகிறது. ஸீரியஸாக எடுத்துக் கொள்ளப்படுவதற்கு அல்ல.

மங்கை: சமுதாயப் பிரதிபலிப்பு என்று நீங்களே கூறுகிறீர்கள். ஜோக்குகளில் சித்திரிக்கப்படுவது போலவா இன்று பெண்கள் இருக்கிறார்கள்?

ப.சு.: சமுதாயத்தில் நடப்பனவற்றை அப்படியே சொல்வது நியூஸ். அதனுடன் சிறிது கற்பனையை இணைத்து, சிரிப்பு எழச் செய்வது ஜோக்.

மங்கை: சமுதாயத்தில் எத்தனையோ நிகழ்வுகள். பெண்களை மட்டும் சிரிப்புக்குரிய பொருளாக எடுத்துக் கொள்வானேன்?

ப.சு.: அப்படியில்லை; திருடன், பிச்சைக்காரன், டாக்டர், வக்கீல், போலீஸ்காரர், ஆபீஸில் வேலை பார்ப்பவர், அரசியல்வாதி என்று பலதரப்பட்டவர்களைப் பற்றியும் ஜோக்குகள் எழுதப்படுகின்றன. பெண்கள் பற்றிய ஜோக்குகளை நீங்கள் எதிர்ப்பது போல் டாக்டர்களும் வக்கீல்களும் பிறரும் தங்களைப் பற்றிய ஜோக்குகளை எதிர்க்க ஆரம்பிக்கலாம். இப்படியே போனால் ஜோக்கே எழுத முடியாது. மிருகங்களைப் பற்றி மட்டும் எழுதுவது ஒருவேளை சாத்தியமாகலாம். அதற்கும் எஸ்.பி.ஸி.ஏ. எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும்!

மங்கை: நீங்கள் ஒரு விஷயத்தை



மங்கை

ழுமையாக மறந்து விடுகிறீர்கள். டாக்டர், வக்கீல் ஜோக்குகளில் அவர்களை ஆண் என்பதற்காகவோ பெண் என்பதற்காகவோ கேலி செய்வதில்லை. கேலிக்குள்ளாவது அவர்கள் தொழில்தான். ஆனால் பெண்களை அவள் ஒரு பெண் என்பதற்காகவே ஜோக்குகளில் கேலி செய்கிறீர்கள். இதைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம். டாக்டர் ஜோக்கில் ஒரு பெண் டாக்டரைப் படம் போட்டுத் தொழிலைக் கிண்டல் செய்யுங்கள்; பொறுத்துக் கொள்கிறோம். ஆனால் 'பெண்மையைக் கிண்டல் செய்யாதீர்கள்' என்கிறோம்! உதாரணமாக, ஒரு ஆபீஸில், ''மெமோவை ரவிக்கைத் துண்டு வைச்சுக் கொடு! அந்த ஸ்டெனோ வாங்கிக்குவா'' என்று மானேஜர் கூறுவதாக ஜோக் எழுதப்படுகிறது. இங்கே கேலிக்குள்ளாவது ஸ்டெனோ தொழில் அல்ல, பெண்மை.

ப.சு.: இந்த ஜோக்கைப் படித்து விட்டு முதலில் நீங்களே சிரித்திருப்பீர்களே? அப்புறம்தான் ஸீரியஸ்ஸாக எடுத்துக் கொண்டிருப்பீர்கள். ஜோக்குகள் சிரிப்பதற்காக ஏற்பட்டவை. சிரித்து விட்டு மறந்து விட வேண்டியதுதானே? ஏன் ஸீரியஸ்ஸாக எடுத்துக் கொள்ள வேண்டும்? அரசியல்வாதி ஜோக் ஒன்றை ஸீரியஸ்ஸாக எடுத்துக் கொள்ளப் போய் நடந்த அசம்பாவிதங்கள் நாடறிந்தவையல்லவா?

மங்கை: நீங்கள் குறிப்பிடுகிற அந்த நிகழ்ச்சி நடந்திருக்கவே வேண்டியதில்லை. அது வேறு விஷயம். பெண்களாகிய எங்களுக்கு வானளாவிய அதிகாரம் ஏதும் கிடையாது. நாங்கள் எங்கள் கோரிக்கையையும் ஆட்சேபணையையும் உங்கள் பார்வைக்கு வைக்கிறோம், அவ்வளவே. நீங்கள் கூறுவது போல் ஜோக்குகள் படித்து மறந்து விடுவதற்காக மட்டுமே என்ற கருத்து எனக்கு உடன்பாடானது அல்ல. பத்திரிகையை எடுத்ததுமே, வாசகர்கள் முதலில் ஜோக்குகளைத்தான் படிக்கிறார்கள். ஏதேனும் ஒரு பாதிப்பு இல்லாமலிருந்தால் அப்படி ஆர்வத்துடன் படிக்க மாட்டார்கள். ஒரே விஷயத்தை ஸீரியஸ்ஸாகவும் எழுதலாம்; சிரிப்பு வரும்படியும் எழுதலாம். நகைச்சுவை எழுத்துக்கே அதிக வரவேற்பு இருக்கும்; அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி அதிகமாகப் பேசப்படவும் செய்யும்.

ப.சு.: ஜோக்குகளை இவ்வளவு உயர்த்தி நீங்கள் சொல்வதற்கு நன்றி. ஆனால் அதே ஜோக்குகளை நீங்கள் ஜோக்காக எடுத்துக் கொள்ளாமல் குறை கூறுவதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை. ஜோக்கினால் பாதிப்பு உண்டென்றால், அது ஆரோக்கியமான பாதிப்பாக ஏன் இருக்கக் கூடாது? உதாரணமாகப் பல பெண்களுக்கு இயல்பாகவே ரவிக்கைத் துண்டு ஆசை இருக்கத்தான் செய்கிறது. அது குறைய நீங்கள் முன்னர் குறிப்பிட்ட ஜோக் ஏன் உதவியிருக்கக் கூடாது?

மங்கை: ஏன் ஆண்களுக்கு புது சட்டை, புதிய பாண்ட் ஆசை இல்லையா? பெண்களை மட்டும் ஏன் இவ்வாறு இழிவுபடுத்த வேண்டும் என்பதுதான் கேள்வி. இன்று ஆண்—பெண் இருவருமே வேலைக்குப் போகும் போது, வீட்டு வேலைகளைக் கணவனும் மனைவியும் பகிர்ந்து கொள்வது என்பது நடைமுறைப் பழக்கமாகி விட்டது. அவ்வாறிருக்க, வீட்டு வேலைகளில் ஒரு கணவன் உதவுவதை ஏன் கேலி செய்கிறீர்கள்? கணவன் 'சமையல் செய்வதையும் துணி துவைப்பதையும் ஏன் கிண்டல் பண்ணுகிறீர்கள்? இதனால், நல்ல மனம் படைத்த சில கணவன்மார்கள் கூட, மனைவிக்கு உதவுவதை நிறுத்தி விடக் கூடும் அல்லவா?

ப.சு.: இதையே வேறு விதமாகப் பார்க்கலாமே? இப்படிப்பட்ட ஜோக்குகள் அதிகமாக வெளியாகும் போது, 'ஓ! மனைவிக்குக் கணவன் வீட்டு வேலைகளில் உதவுவது சகஜம்தான் போலிருக்கிறது; நாமும் இனி உதவலாம்' என்று மனமாற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது அல்லவா?

மங்கை: அப்படிப்பட்ட ஆரோக்கியமான விளைவை இத்தகைய ஜோக்குகள் ஏற்படுத்துமானால் நல்லதுதான். ஆனால் ஏற்படுத்துமா என்பது பெரிய கேள்விக் குறிதான்!

தொகுப்பு: **மௌஷ்மி**

படங்கள்: **ரமணன்.**



“யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் எனக்கு மிகவும் தேவைப்பட்ட நேரத்தில் உதவியது...அதுவும் மிக விரைவில்!



நல்ல காலம், நான் அதிக செலவு இல்லாத அவர்களுடைய கால்நடை இன்ஷூரன்ஸ் பாலிசியை எடுத்திருந்தேன்.

[illegible]

[illegible]

நீங்களும் இந்த இன்ஷூரன்ஸ் பாலிசி எடுக்கலாமே? இதற்கு செலவு அதிகம் இல்லை!”

யுனைடெட் இந்தியாவின் கால்நடை இன்ஷூரன்ஸ் பாலிசி


மேலும் விவரங்களுக்கு, யுனைடெட் இந்தியா அலுவலகம் அல்லது உங்கள் பகுதியிலுள்ள ஏஜெண்டை அணுகவும்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

([illegible])

24 [illegible], சென்னை 600 014

HTA 7355



ஏழாவது இரவு
12
கதை:
அபர்ணா நாயுடு
சித்திரம்:
யார் அந்த ஆள்? இதுவரை என்கிட்டே நீ சொல்லலையே!
உறுதியாகத் தெரிஞ்சப்புறம் சொல்லலாம்னு இருந்தேன்.
அதே நேரத்தில்—
அவங்க ரெண்டு பேரும் தானே! அது நிச்சயம் தானே!
நமக்குக் கொடுத்திருந்த இன்ஸ்ட்ரக்ஷன் என்ன?
அந்த வீட்டைக் கண்காணிக்கணும். அங்கே இருந்து ரெண்டு பெண்கள் வெளியே போனா ஃபாலோ செய்யணும்.
அப்போ அவங்க தான். அப்புறம் என்ன சந்தேகம்?
சரி, நமக்குள்ளே ஒரு ப்ளான் பண்ணிக்கிட்டா நல்லது.
நீ மெள்ள எழுந்து போய் முன்னால இறங்கற இடத்துக் கிட்டே நின்னுக்க. நான் எழுந்து அவங்க பக்கத்தில் போய் நின்னுக்கறேன்...









ஒரு நிறுத்தத்தில் பஸ் நின்றதும் எழுந்தார்கள். கூட்டத்தை விலக்கி நடந்து முன் பக்க வழியாக இறங்கினார்கள். நடந்தார்கள்.

சிறிது தொலைவு சென்ற போது இடது புறம் ஒரு சந்து தென்பட்டது. அதில் திரும்பி நடந்தார்கள். ஆள் நடமாட்டமில்லாத அந்தப் பாதை இருண்டு கிடந்தது. தெரு விளக்குகள் இல்லாத நிலையில், நிதானமாகச் சற்று தூரம் நடந்து நின்றார்கள்.

அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை. மோட்டார் சைக்கிள் அந்தச் சந்தில் திரும்பியது.

"நடக்கப் போகிற வேடிக்கையைப் பார்" என்று ரஞ்சனாவின் காதில் கிசுகிசுத்தாள் மாலினி. இன்னும் இருவர் அந்த இடத்தில் தங்களைக் கண்காணிப்பதை அறியாமலே....

(தொடரும்)

புத்தாண்டு — பொங்கல் வாழ்த்துக்கள்

ஆர். எம். வீ யின் செல்வாக்கு எப்படி இருக்கிறது?



* செல்வாக்கு எப்படி?

* வே. தென்பரிதி, பாண்டிச்சேரி.

? இந்திய மக்களின் இன்றைய இன்றியமையாத தேவை என்ன?

! "நாடு உனக்காக என்ன செய்தது என்று யோசிக்காதே; நீ நாட்டுக்காக என்ன செய்தாய் என்று சிந்தனை செய்!" என்றார் கென்னடி. இந்த உணர்வை இன்று மிக அதிகமாகப் பெற்றிருப்பவர்கள் ஜப்பானியர். வருந்தத்தக்க அளவில் குறைவாகப் பெற்றிருப்பவர் நாம்! 'உரிமை, உரிமை' என்று எடுத்ததற்கெல்லாம் போராடக் கற்றிருக்கும் நாம், கடமையைத் தட்டிக் கழிப்பதிலும் நிபுணர்களாய் இருக்கிறோம்! ஆக இன்றையத் தேவை, கடமை உணர்வுடன் கூடிய தேசப்பற்று.

* தமிழ் எழிலன், காஞ்சிபுரம் *

? ராஜீவ் காந்தி பாராளுமன்றத்தில் வெளுத்து வாங்குகிறாரே?

! 'ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு' என்று ஆரம்பத்தில் சொன்ன இ. காங்கிரஸ், இன்று முட்டுக்கட்டை போடுவதற்கே முதலிடம் தருகிறது என்றாலும் எதிர்க்கட்சி தலைவர் என்ற முறையில் கடமை உணர்ந்து செயலாற்றுகிறார் ராஜீவ் — மறுப்பதற்கில்லை. இதனாலேயே பாராளுமன்ற நடவடிக்கைகளில் சுவாரஸ்யம் கூடுகிறது. தோழமைக் கட்சித் தலைவர் ஜெயலலிதா இவ்விஷயத்தில் ராஜீவிடம் பாடம் படிக்கலாம்.

* மு. கி. பிரேம்குமார், வில்லாபுரம்.

? 1989 ஆம் ஆண்டின் மறக்க முடியாத கொடிய சம்பவம்?

! ருமேனிய சர்வாதிகாரியை வீழ்த்தக் கிட்டத்தட்ட 70 00 மக்கள் பலியானதுதான். செஞ்சீனாவில் தியானென்மன் சதுக்கத்தில் சீன மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்ததாகக் குறிப்பிடலாம்.

* எஸ். நடராஜன், அயனூர்பேட்டை.

? மறைந்த கார்ட்டூனிஸ்ட் சங்கர் பற்றி...?

! "சங்கர், என்னை விட்டு வைக்காதீர்கள்!" என்று நேரு இவரைக் கேட்டுக் கொண்டார் என்றால், அது நேருவின் பெருந்தன்மையை மட்டும் சுட்டிக் காட்டவில்லை; சங்கரின் ஆற்றலையும் நடுநிலை நோக்கையும் உணர்த்துகிறது. நேருவின் நண்பரான அவர், குழந்தைகளுக்காக சர்வ தேசச் சித்திரப் போட்டி நடத்தியதும், குழந்தைகள் புத்தக டிரஸ்ட் உருவாகக் காரணமாயிருந்ததும் வியப்பளிப்பன அல்ல. அவருடைய மிகப் பெரிய சாதனை, கார்ட்டூன்களுக்கே முக்கியத்துவம் தந்து ஒரு வாரப் பத்திரிகையை வெற்றிகரமாக நீண்ட காலம் நடத்திக் காட்டியதுதான்.

* ஆர். கே. லிங்கேசன், பள்ளம்.

? ஆர். எம். வீயின் அரசியல் செல்வாக்கு இப்போது எப்படி இருக்கிறது?

! நடந்து வந்த பாதையை விட்டு விலகிச் சென்று, பிராமணர் சங்க மாநாட்டில் பேசியேனும் அனுதாபம் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறது!

* வசந்தா காந்த், கருப்பம்புலம்.

? 'ராசியில்லாதவர்' என்பதாகக் கருதப் படும் சிவாஜி கணேசன் தமிழக ஜனதா தளக் கட்சியின் தலைவராகியுள்ளாரே?

! அவருடைய 'ராசியின்மை' தமிழ்க ஜனதா தளத்தைப் பாதித்தால் பாதித்து விட்டுப் போகிறது; ஏற்கெனவே உள்ளதற்கு மோசமாகி விடாது. அவருடைய அந்த 'ராசியின்மை' மத்திய அரசைப் பாதிக்காமல் இருந்தால் சரி!

* சிவகாமி நடராஜன், சென்னை — 7.

? லா. ச. ரா.வின் 'சிந்தா நதி' அகாதமி பரிசு பெற்றுள்ளதே?

! அவருடைய எழுத்து வாசகர்களுக்காகப் படைக்கப்படும் இலக்கியம் அல்ல; இலக்கியவாதிகளுக்காகப் படைக்கப்படும் இலக்கியம்!

* டி. தாழை பிரபு, குடியாத்தம்.

? சமீபத்தில் ரசித்த நகைச்சுவை?

! டாக்டர் ஹண்டே அ. இ. அ. தி. மு. க. விலிருந்து விலகி, ஜனதா தளத்தில் சேர்ந்தது புன்னகை புரிய வைத்தது என்றால், அதற்கு அவர் கூறிய காரணம் குபீர் சிரிப்பை வரவழைத்தது! அ. தி. மு. க., காங்கிரஸுக்காகத்தான் உழைத்து வருகிறதாம்! ஒரு வழியாகக் கண்டுபிடித்து விட்டார், பாருங்கள்!

* கே. ரமேஷ், சென்னை — 52.

? மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தியாவில் அரசியல்தரம் எந்த அளவில் இருக்கிறது?

! காங்கிரஸுக்கு வோட்டுப் போடவில்லை என்பதற்காக ஒரு பெண்ணை நிர்வாணமாக்கி ஊர்வலம் விடும் நமக்கு, மற்ற நாடுகளுடன் ஒப்பு நோக்குதல் வேறு வேண்டிக் கிடக்கிறதா, என்ன! (நெல்லூர் அருகே கோதண்டராமபுரம் சம்பவம் — ஹிந்து 25. 12. 89)

* சாகுல் அமீது, திருச்சி.

? மூன்று முறை ஆசிய கோப்பையைத் தக்க வைத்துக் கொண்ட பாகிஸ்தான் ஹாக்கி அணி குறித்து?

! கிரிக்கெட்டைப் போலவே இதிலும் வெற்றி ஒன்றே குறியாக சீரியஸ்ஸாக ஆடுகிறார்கள். நம் வீரர்கள் கோல் ஏதும் போட முடியாததற்குப் பாக் கோல் கீப்பர் மன்ஸுர் அஹமத்தின் அபாரமான விழிப்புணர்ச்சியும் திறமையும் ஒரு முக்கிய காரணம்.

* கே. எஸ். முத்துசாமி, கள்ளியம்புதூர்.

? ஜாதிகள் பெயரில் சங்கங்கள் அமைப்பது தடை செய்யப்படுமா?

! ஜாதி வேற்றுமைகள் ஒழிய வேண்டும் என்பதற்காக அரசு கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கிறது. ஆனால் இதன் மூலம் பிறக்கும் குழந்தையின் ஜாதியைத் தீர்மானிக்க முடியாமல் அதன் எதிர்காலமே பாழாகிற ஆபத்து இருக்கிறது! உதாரணமாக, சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்து வரும் ஒரு மாணவியின் தந்தை பிராமணர்; தாய் நாயர் வகுப்பைச் சேர்ந்தவர். இம் மாணவி, பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். ஆனால் நிர்வாகம் இது தவறாக நடந்து விட்டதாகக் கருதி, அவரை இறுதி ஆண்டுப் பரீட்சை எழுத விடாமல் தடுத்து விடுகிற அபாயம் இருப்பதாகத் தெரிகிறது! இப்படியெல்லாம் குட்டை குழப்பிக் கொண்டிருக்கும் அரசு, ஜாதிச் சங்கங்களையாவது, தடை செய்யவாவது? அதெல்லாம் லட்சியக் கனவுகள் தான்!

* ரேகாப் பிரியன், நீடாமங்கலம்.


? ஓசியில் பேப்பர் படிப்பவர்கள் பற்றி...?

! வசதியற்றவர்கள் இரவல் வாங்கியேனும் படிப்பதைப் பாராட்ட வேண்டும். நாட்டு நடப்பைத் தெரிந்து கொண்டு சிந்திக்க வேண்டியது ஒவ்வொருவனுக்கும் உள்ள கடமை. வசதி உள்ளவர்கள் ஓ.சி. யில் படிக்கும் போது என் போன்றவர்களின் பிழைப்பைக் கெடுக்கிறார்கள்!

* வெளுத்து வாங்குகிறார்!



* அறிவுரை





* கார்ட்டூன் சாதனை



* குபீர் சிரிப்பு!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

தமிழ் எழிலன்,
ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜ்,
68—A, நெல்லுக்காரத் தெரு,
காஞ்சிபுரம் — 631 502.

மாற்று மனிதனும் மூப்பு ஆராய்ச்சியும்...

22 அடுத்த நூற்றாண்டு...

அடுத்த நூற்றாண்டில் நம் முக்கிய கவலை நம் ஆரோக்கியம். எத்தனை கண்டுபிடித்தால் என்ன, செத்துப் போய் விடப் போகிறோம்... என்று நம் கண்டுபிடிப்புக்கள் எல்லாவற்றிலும் ஒரு தற்காலிகம் வந்து விடுகிறது. 'எதிர்காலத்துக்கு நாம் விட்டுச் செல்லப் போவது கல்லறைகளே' என்று கவிஞர் சொன்னபடி மரணத்தின் நிழல் நம் தத்துவங்களையும் விஞ்ஞான முயற்சிகளையும் அதிகம் பாதிக்கிறது.

போன நூற்றாண்டுகளில் மருத்துவ இயல் மலேரியா, காலரா, பாக்டீரியா, வைரஸ் என்று நோய் நாடல் — நிவாரணம், இதில்தான் கவனம் செலுத்தி வந்தது. இந்த நூற்றாண்டில் 'ஸ்பேர் பார்ட்,' தேய்ந்து போகும் அங்கங்களுக்கு மாற்று அங்கங்கள், அது இதயமோ, சிறுநீரகமோ, காலோ, கண்ணோ... இதில்தான் அதிகம் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிகள்தான் அடுத்த நூற்றாண்டில் தீவிரமாகத் தொடரும்... அதனுடன் ஜெனட்டிக் இன்ஜினியரிங் — நம் உடலின் திசுக்களை வெட்டி ஒட்டும் வேலை — இதிலும் நிறைய ஆராய்ச்சி.

மாற்று அங்கங்களைப் பார்க்கலாம். இதில் இரண்டு வகை உண்டு. மற்றொரு உடலிலிருந்து அந்த அங்கத்தைப் பிரித்து, ஊனமுற்றவர்களுக்குப் பொருத்துவது; செயற்கை ப்ளாஸ்டிக், உலோக,மோட்டார், பம்ப் அங்கங்கள் பொருத்திப் பார்ப்பது.

இதில் முன்னதில்தான் அதிக வெற்றி. இப்போதெல்லாம் யார் வேண்டுமானாலும் யாருக்கும் 'கிட்னி' தரலாம். ஆளுக்கு ஆள் பொருந்தாமைகளைச் சமாளிக்க மருந்துகள் வந்துவிட்டன!

சிறுநீரக மாற்றம் சாதாரணமாகச் செய்கிறார்கள் அதேபோல் கல்லீரல் போன்ற அங்கங்களையும் மாற்றுவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். மாற்று இதயம் அதிகப்படியாக வரவில்லை. காரணம் — இதயத்தை மாற்ற ஓர் ஆசாமி இறந்தாக வேண்டும்! 'இறப்பு' என்பது எப்போது என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

மாற்று இதயம் பொருத்திச் சில வருடங்கள் வாழ்கிறவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள்.

சிறுநீரகத்தை மெஷின் மூலமும் செயல்படுத்தலாம். இவ்வகை டயலிஸிஸ் இயந்திரங்கள் — அளவில் பெரிதாய் இருப்பவை, தற்போது சிறிதாகிக் கொண்டு வருகின்றன. அடுத்த நூற்றாண்டில் பாக்கெட்டுக்குள் ஒரு நாளில் பொருத்திக் கொள்ளக் கூடியசிறுநீரகஇயந்திரங்கள் வரும்சாத்தியம் உள்ளது.

கை, கால் ஜாயிண்ட் முறிந்து, தளர்ந்து போனதற்கெல்லாம் இப்போது சர்வ சாதாரணமாகச் செயற்கை அங்கங்கள் உபயோகித்து ஓடி ஆடுகிறார்கள்.

ப்ளாஸ்டிக், அல்லது எவர்சில்வர் துண்டுகளை உள்ளே பொருத்துவது... செயற்கை

* உலகின் முதல் முதுகெலும்பு மாற்று அறுவைச் சிகிச்சை பத்தொன்பது மணி நேரம் நீடித்தது.



இடுப்பு, தோள் பட்டை இவற்றை முழுசாக மாற்றுவது எல்லாம் தினசரி நடக்கின்றன. போன வெள்ளிக்கிழமை வரை கணக்குப்படி அமெரிக்காவில் இவ்வாறான அங்க மாற்றங்கள் பெற்றவர்கள் இருபது லட்சம் பேர் உள்ளனர்!

அடுத்தது இதயம். அடுத்த நூற்றாண்டில் ப்ளாஸ்டிக் இ த ய த் தை ப் பற்றிக் கவிதை எழுதுவார்கள்! பேஸ்மேக்கர். சின்னச் சின்ன வால்வுகள் என்று துவங்கிய மாற்று இதய இயல், இப்போது முழு இதயத்துக்கும் மெஷின் கொண்டு வந்து விட்டது. 1977 — இல் ஒரு பசு மாட்டுக்கு மாற்று இதயம் அமைத்து 184 நாட்கள். பாலியுரித்தேன் உபயத்தில் உயிர் வாழ்ந்தது அமெரிக்க யுட்டா நகரத்தில்... தென்

ஆப்பிரிக்காவில் கிறிஸ்டியன் பெர்னார்டு முதல் மாற்று இதய (மனிதனுக்கு மனிதன்) ஆபரேஷன் செய்தார். முதல் இயந்திர இதயம் ஜார்விக் — 5 என்பது. சுமாராக ஒரு காற்றழுத்தத்தில் இயங்கக்கூடிய ப்ளாஸ்டிக் இரட்டைப் 'பம்ப்'பைப் படுக்கையடியில் வைத்து, எப்படியோ பேஷண்ட்டை உயிர் வாழ வைத்தார்கள். என்ன, பொடி நடையாக ஒரு சிகரெட் வாங்கக் கடை வரை போக வேண்டும் என்றால் கொஞ்சம் கஷ்டம்.

கார்னியா ட்ரான்ஸ்ப்ளாண்ட் என்பது இப்போது சாதாரணமாக நடக்கிறது. அண்மையில் இறந்த என் நண்பரின் கண்கள் மட்டும் அடுத்த நாள் பார்க்கத் துவங்கி விட்டன!

இதே ரேட்டில் போனால் அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர்கள் ஸைபார்க் (CYBORG) என்று சொல்கிற மாற்று மனிதன் உருவாகி விடுவான் என்று தோன்றுகிறது! ப்ளாஸ்டிக் மண்டையோடு, அக்ரிலிக் கண்கள், ப்ளாஸ்டிக் காது, பற்கள், தாடை, எலக்ட்ரானிக் தொண்டை, சுவாச வாசலில் ரத்த சுத்திக்காக ஃபில்டர், பேஸ் மேக்கர்,* வலுவான இதய வால்வுகள், டேக்கரான் ரத்த நாளங்கள், செயற்கைப் புஜங்கள், கை, கால், மூளை, முழங்கால் மூட்டு, ப்ளாஸ்டிக் விரல்கள், மூளைக்குச் செல்லும் நீரைக் கட்டுப்படுத்தும் வால்வு, காது கேட்க ஹியரிங் எய்டு, அழகான ப்ளாஸ்டிக் மூக்கு...

— இவை அனைத்தையும் ஒவ்வொன்றாக அமைத்துக் கொண்டு வாழ்நாட்களை நீட்டிக் கொண்டே போகலாம்.

ஒன்றே ஒன்று விட்டுப் போயிருக்கிறது. மூளை! மூளையை மாற்றி அமைக்க அடுத்த நூற்றாண்டின் இறுதி வரை கூடச் சாத்தியமில்லை என்கிறார்கள். ஏனெனில் மூளையினுள் இருக்கும் கோடானு கோடி இணைப்புக்களை முழுதும் புரிந்து கொள்ள நூறு வருஷமாகும்.

* 'பேஸ் மேக்கர்' பொருத்தப்பட்ட குழந்தை.



மற்றொரு நோக்கில், வயதாவது, இறந்து போவது என்பவை என்ன என்கிற ஆராய்ச்சியில் பலர் ஆழ்ந்திருக்கிறார்கள்.

மூப்பு என்பது என்ன? ஏன் தலைமயிர் நரைக்கிறது? ஏன் தோல் சுருங்குகிறது? ஏன் செத்துப் போகிறோம்? இதற்குப் பலவித பதில்கள்..

நம் உடல் என்பது செல் மெஷின் என்று சொல்லலாம். திசுக்கள், உயிரணுக்கள் தினம் தினம் தம்மைப் புதுப்பித்துக் கொண்டும் புறக்கணித்துக் கொண்டும் இருக்கின்றன. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' தான் மனித உடல்! இதில் வயசாக வயசாகப் புதியன புகுதல் என்பது குறைந்து கொண்டே வருகிறது. பழையன கழியாமல் உடலில் சேர்ந்து போகிறது. மேலும், சில வகை செல்கள் ஒரு வயசுக்கப்புறம் புதுப்பிக்கப்படுவதே இல்லை.

மூன்று காரணங்களும் சேர்ந்துதான் நாம் மூப்பு எய்துகிறோம். 1961 — இல் லியனார்டு ஹேஃப்ளிக் என்கிற அமெரிக்க டாக்டர், ஓர் உடலின் திசுக்கள் மொத்தமும் ஐம்பது தடவைதான் புதுப்பித்துக் கொள்கின்றன என்று கண்டறிந்தார். உள்ளுக்குள்ளே ஒரு மானசீகக் கடிகாரம் இந்தச் சுய ரிப்பேரைக் கட்டுப்படுத்துகிறது. ஹைட்ரோ கார்ட்டிஸோன், விட்டமின் ஈ போன்ற வஸ்துக்கள் இந்த அம்பதை நூறாக்குகின்றன என்று கண்டுபிடித்துள்ளார்கள். நம் மூளையின் அடிப்பாகத்தில் இருக்கும் பிட்யூட்டரி சுரப்பியில் சுரக்கும் ஒரு ஹார்மோனில் இருக்கிறது சூட்சுமம் என்கிறார்கள்.

வயசாவதற்குக் காரணம் ஒன்று மட்டும் இருந்தால் அதைச் சுலபமாக வெல்ல முடியும். காரணங்கள் பல. ஃப்ராங்க் ஹெர்பர்ட், 'ட்யூன்' என்கிற தம் விஞ்ஞானக் கதையில், ஜெரியாட்ரிக் ஜூஸ் என்கிற மருந்து தருகிறார். அதைச் சாப்பிட்டால் சர்சுவதம்... ஜேம்ஸ் ப்ளிஷ், 'ஆன்ட்டி அகாத்திக் டிரக்' என்னும் மருந்து தந்து வாழ்க்கையை நீட்டுகிறார்...(கதையில்தான்). தேவாசுரர்கள் பாற்கடல் கடைந்து எடுத்த அமிர்தம் சாசுவதம் தரும் என்பதும் ஒரு வகையில் சைன்ஸ் ஃபிக்ஷன்தான்! மேலே தொடர்வதற்கு முன் மூளைக்கு நிஜமாகவே சற்றுச் சுறுசுறுப்புத் தந்து, மூப்பைத் தவிர்க்கக் கூடிய ஆறு கேள்விகள்: (மார்ட்டின்

சுஜாதா

கார்ட்னர் உபயம்)

i 121 எப்போது 16 ஆகும்?

ii கீழ் வருவனவற்றில் மூன்று தப்புக்கள் உள்ளன. அவை யாவை?

அ) $2+2 = 4$
ஆ) $5-4 = 1$
இ) $4+\frac{1}{2}=2$
ஈ) $7-(-4) = 11$
உ) $10(6-6) = 10$

iii குறுக்கெழுத்தை நிரப்புங்கள்.

இடமிருந்து வலம்:

1. நெருப்புக்கள்
2. பாடல்கள்
3. வழிமுதல் நான்கு
4. பள்ளி இறுதி நான்கு

மேலிருந்து கீழ்

1. மலர் வரும் திருநாள்
2. புத்தாடை மத்தாப்பு தினம்
3. போனஸ் பலருக்கு உண்டு.
4. ஐப்பசி விழா.

iv. ஒரு கூடையில் பதினைந்து ஆப்பிள் பழங்களிலிருந்து மூன்றை எடுத்து விடுகிறீர்கள். எத்தனைப் பழங்கள் உங்களிடம் இருக்கும்.

v. ஒரு கடையில் கிளி விற்றவன் 'இந்தக் கிளி தான் கேட்கும் அத்தனை வார்த்தைகளையும் திருப்பிச் சொல்லும்' என்று ஒரு கிளியை விற்றான். வாங்கி எடுத்துச் சென்றவன் வீட்டில் கிளி பேசவே இல்லை. கடைக்காரன் ஏமாற்றவில்லை. எப்படி?

vi. ஒரு ரெஸ்டாரெண்ட்டில் காப்பி ஆர்டர் செய்தவர் இந்தக் காப்பியில் ஈ என்று புறக்கணித்தார். சர்வர் வேறு கப் கொண்டு வைக்க, அவர் கோபித்து, 'ஏம்பா, அதே கப்பையே ஈயை எடுத்துட்டுத் திருப்பிக் கொண்டு வந்திருக்கிறாயே' என்று சப்தம் போட்டார்.
எப்படி அவருக்குத் தெரிந்தது?
விடைகள் அடுத்த வாரம்.

(தொடரும்)

சிகரத்தைத் தொட்ட பெண்கள்



* ஊர்வசி



19,376 அடி உயர மலைச் சிகரத்தின் மீது ஏறி வெற்றிக் கொடி நாட்டித் திரும்பியுள்ளனர் சில என்.ஸி.ஸி. மாணவிகள். இந்தக் குழுவில் இடம் பெற்ற இருவர் சென்னை எதிராஜ் கல்லூரிப் பெண்கள். ஊர்வசி உம்மத்; மனு ஆனந்த்.

உத்திரப் பிரதேச மாநிலத்தில் விண்ணளாவும் கார்வால் மலையிலுள்ள ருதுகைரா சிகரம்தான் இவர்கள் வெற்றி கொண்ட மலை முகடு.

''மலையுச்சியை அடைந்ததும் வெற்றிக் களிப்பை விட அந்தச் சுற்றுச் சூழலின் பிரமிக்க வைத்தப் பேரழகே எங்களை ஆட்கொண்டது. அதிலிருந்து விடுபட்ட பிறகே சந்தோஷத்தில் ஒருவரையொருவர் தழுவித் தட்டிக் கொடுத்துக் கொண்டோம்'' என்கிறார் ஊர்வசி.

''ஒரு பெண்கள் அணி ருதுகைராவை அடைந்தது இதுவே முதல் முறை. பல அபாயங்களையும் கஷ்டங்களையும் வழியில் சந்தித்தோம். ஆனால், அவற்றைத் தாக்குப்பிடிப்பதற்கான வலிமையையும் நுண்ணறிவையும் எங்களுக்குப் பயிற்சி முகாமில் அளித்திருந்தார்கள்'' என்கிறார் மனு.

— எஸ். ஆர்.

புகைப்படங்கள்: ஸ்ரீஹரி.

பொருத்தம்



மழை வரும் போல வானம் இருண்டு கிடந்தது. அவசரமாகச் சாமான்களைப் 'பேக்' பண்ணச் சொல்லி விட்டு, கவுண்டர் பக்கம் திரும்பும் போதுதான் அவன் கண்ணில் பட்டான். சசி கண்ணை விரித்து நம்ப முடியாமல் பார்த்தாள். விஜய்தான்!

''ஹலோ...

விஜய் யாரோ யாரையோ கூப்பிட்டுத் திரும்பிப் பார்க்கிற த்வனியில் திரும்பினான். நிமிடத்தில் அந்தக் கண்களில் ஆச்சரியம் மின்னிற்று. கவுண்டரில் அவசரமாகப் பணத்தை நுழைத்து, பில்லையும் மீதிச் சில்லறையையும் வாங்கிக் கொண்டாள்.

''பேக் பண்ணிட்டீங்களா சசி?''

''இல்லே... பில் போட்றான்...''

சாமான்களை அந்தச் சின்னப் பையன் பில்லோடு சேர்த்துத் தர, சசி கவுண்டரில் பணம் கொடுத்தாள். விஜய் முகத்தில் இன்னும் ஆச்சரியம் இருந்தது. கையிலிருந்த கூடையை இயல்பாய் வாங்கிக் கொண்டான்.

''என்ன இங்கே சசி...? ஆச்சரியமாயிருக்கு!''

''நான் போன மாசம் எஸ். கே. ஜி. கம்பெனியில ஜாயின் பண்ணினேன். ஹாஸ்டல்ல இருக்கேன்.''

மேலே என்ன பேசுவது என்று தெரியவில்லை. நிறையப் பேச வேண்டும் என்கிற உத்வேகம் எழும்பிற்று. ஆனால் முடியவில்லை.

எத்தனையோ அந்நியோன்னியமாக இருந்த குடும்பங்கள்தான். சின்ன வயசில் 'லீவ்' என்று கிளம்பிப் போய்த் தங்கி இருந்துவிட்டு வந்த ஸ்நேகம். பிள்ளைகள் வளர வளரக் கடிதம் மூலம் மட்டும் பரிமாறிக் கொண்ட உறவு, பளிச்சென்று கல் எறிந்த மாதிரி திடீரென்று கீறல் விட்டுவிட்டது. சங்கரன் மாமாவுக்குத்தான் அந்த எண்ணம் முதன் முதலில் தோன்றியது. ஒரு தடவை வீட்டுக்கு வந்த போது அப்பாவிடம் தனியாகச் சொல்லியிருக்கிறார். போகும் போது 'இந்த வாரக் கடைசியில சேலத்துக்கு வாடா... என்ன சசி? டெஸ்ட் அது, இதுன்னு டபாய்க்காதே, வந்துடு' என்று சொல்லிக் கிளம்பிச் சென்னார்.

அடுத்த நாள் அப்பா பஸ்ஸுக்கு 'புக்' பண்ணினார். சனிக்கிழமை ராத்திரி பஸ். ப்ராட்வே பஸ் ஸ்டாண்டின் மனுஷ நெருக்கடியில் நின்றிருந்த போது அம்மா ஓரமாய்க் கூப்பிட்டாள்.

''சசி... சங்கரன் மாமா பையனை ஞாபகமிருக்கா...?''

''ஏம்மா?''

''சங்கரன் மாமா உனக்கு அவன் பொருத்தம்னு நினைக்கிறார். ஒரு தடவை நீங்க ரெண்டு பேரும் பார்த்துக்கிட்டீங்கன்னா நல்லாயிருக்கும். நீயும் படிப்பை முடிக்கப் போறே. உன்னை யாரும் கட்டாயப்படுத்தலே. விஜயைப் பாரு. பிடிச்சிருந்தா முடிச்சிடலாம். ஆனா ஒண்ணு சசி... இது நல்ல இடம். இதே மாதிரி திரும்ப வரும்னு சொல்ல முடியாது.

பஸ் ஸ்டாண்ட் இரைச்சல் சட்டென்று நிசப்தமாகி விட்ட பிரமை. சசி நம்ப முடியாமல் அம்மாவைப் பார்த்தாள். இது என்ன திடுமென்று...? கடவுளே! கல்யா

-தமயந்தி-



பெயரில் நளினம்; முயற்சியில் தைரியம்!

தேர்தல் முடிந்த கையோடு டீ.வி.யில் திரையிடப்பட்ட ஒரு டாக்குமெண்டரி இந்தியா முழுவதையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது! வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்படுவது பற்றி மக்கள் ஏற்கெனவே பத்திரிகைகளில் படித்து அறிந்திருந்தாலும் அங்கு நடந்தவற்றை நேரில் பார்ப்பது போல் டீ.வி.யில் கண்டதும் பிரமிப்பு அடைந்தனர். அரசியல் தலைவர்களின் மறைமுக ஆதரவு காரணமாகத் துணிவு பெற்றிருந்த குண்டர்களைப் பேட்டி கண்டும் இருந்தார் படத்தைத் தயாரித்த நளினி சிங். வன்முறைச் சூழலில் புகுந்து துணிவுடன் நளினி செயல்பட்டதானது மக்களிடையே பரபரப்பையும் பெண் குலத்துக்குப் பெருமையையும் ஏற்படுத்தியது. காங்கிரஸ் சார்பில் மட்டுமல்ல, தேசிய முன்னணி சார்பிலும் குண்டர்கள் செயல்பட்டனர்; கள்ள வோட்டுக்களை வோட்டுப் பெட்டிகளில் திணித்தனர் என்று நிரூபித்திருந்தார் நளினி. மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படவும் தேர்தல் முறை சீரடையவும் அடிக்கல் நாட்டியுள்ளார் நளினி.

ஆதாரம்: வீக்லி.

ணமா...? எனக்கா? யார் அவன்? எப்படி இருப்பான்? சின்ன வயசில் பார்த்தது. எல்லாரையும் போல ஒரு சின்ன வயசு உருவம் மட்டும் மனசிலிருக்கிறது.

இப்போது கல்யாணம் அவசியமா? இல்லை! இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் கழித்து... எப்போது பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறதோ — அப்போது பண்ணிக் கொள்ள வேண்டும். வேலை பார்க்க வேண்டும். கிடைக்கிற நேரத்தில் ஓவியம், நாடகம் என்று இருக்க வேண்டும். இதே ரசனையுடன் உள்ள ஒருவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

சசி பஸ் ஸ்டாண்ட் சுவரில் சாய்ந்து கொண்டாள். சேலம் பஸ் உறுமிக் கொண்டு வந்து நின்றது. வரமாட்டேன் என்று சொல்லலாமா? என்ன ஆகும்? பிரளயம் வெடிக்கும். பஸ் ஸ்டாண்ட் அசிங்கமாகும். சூட்கேஸ் முதலில் ஏறியது. சசி எல்லோரும் ஏறிய பிறகு ஏறினாள். கொஞ்ச நேரத்தில் எல்லோரும் பஸ்ஸின் மங்கல் வெளிச்சத்தில் தூங்க ஆரம்பிக்க, சசி ஜன்னல் வழியாய் நகர்ந்த இருட்டை வெறித்தாள்.

சேலம் பஸ் ஸ்டாண்டில் காருடன் சங்கரன் மாமா நின்றிருந்தார்.

''எப்படியிருக்கேம்மா?''

''உம்...''

போகிற வழியெல்லாம் இடத்தைக் காட்டியபடி ஓட்டினார். பதில் வராமல் போக, 'சசி ரொம்ப டொயட் ஆயிட்டாடா'' என்று அப்பாவிடம் சொல்லிப் பெரிதாகச் சிரித்தார்.

வீட்டு வாசலில் அத்தை நின்றிருந்தாள். இறங்கியதும் இறுகக் கட்டிக் கொண்டாள். வீடு பிரம்மாண்டமாய் இருந்தது. வாசலில் டோபர்மேன் குரைத்தது. அத்தை பெட்டியை வாங்கிக் கொண்டாள்.

''வாம்மா...''

உள்ளிருந்து அவன் வந்தான். கறுப்பாய், உயரமில்லாமல், முடியைச் சிலுப்பிக் கொண்டு அப்பாவுடன் கைகுலுக்கினான்.

''எப்ப பஸ் ஏறினீங்க மாமா?''

''நேத்து ராத்திரிப்பா. ரொம்ப டையரிங் ஜர்னி.''

சம்பிரதாயமாகப் பேசிக் கொண்டார்கள். பிஸினஸ் பற்றி நிறையப் பேசினான். இசை பிடிக்காது என்றான். ஓவியத்தில் ஈடுபாடு இல்லை என்றான்.

''எங்க சசி நல்லா வரைவா,'' — அம்மா பெருமையாகச் சொன்னாள்.

குளித்து முடித்துக் கையில் கிடைத்த புத்தகத்துடன் உட்கார்ந்த போது சங்கரன் மாமா கூப்பிட்டார்.

''சசி... கார்ட்ஸ் விளையாடேன்...''

அம்மா கண்ணால் 'போ... மானத்தை வாங்காதே' என்றாள். அத்தை கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே கூட்டிப் போனாள். அவனுடன் கூட நாலைந்து பேர் இருந்தார்கள். பக்கத்து வீட்டுக் கடைக்குட்டி, கூட வேலை பார்க்கிறவர்கள் என்று ஒவ்வொருவராய் அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

அவன் ஒருவிதமான சிரிப்புடன் பார்த்தான். எப்படி... எப்படி இவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியும்? என் மனசிலிருக்கும் உருவத்திற்கும் இவனுக்கு முள்ள வித்தியாசத்தில் எப்படி 'சரி' என்று சொல்ல முடியும்? சதாநேரம் வேலை வேலை என்று அலைகிறவன் பொருந்துவானா? கால் வைக்கவே தயங்கும் போது எப்படி நீந்த முடியும்?

கிளம்புவதற்கு முன்னால் சாப்பிட உட்கார்ந்த போது, உடலின் மீது பார்வை ஊர்வது போலிருந்தது. சசி சட்டென்று கண்ணை உயர்த்திப் பார்த்தாள். எதிர் அறையில் அவன் ஃபோன் பேசுகிற தினுசில் நேராக உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

சசி சட்டென்று பார்வையைத் திருப்பி

னான். உடம்பு முழுக்கப் படபடத்தது. கடவுளே! இதென்ன பார்வை!

ஊர் திரும்பியதும் அம்மா முடிவு கேட்டாள். வேண்டாம் என்கிற பதில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் எப்படித் தெரிவிக்க என்று அப்பா கவலைப் பட்டார்.

சங்கரன் மாமா கொஞ்ச நாட்கள் கழித்துக் கடிதம் எழுதினார்.

'சசியைப் பற்றி விஜய்யுடன் பேசினேன். அவளைப் பார்த்தால் தன் தங்கையைப் போலிருக்கிறது என்று கூறிவிட்டான். திரும்பத் திரும்பக் கேட்டபோது. 'வேணாம்ப்பா... விட்டுடு' என்று சொல்லி விட்டான்...' என்று சின்னதாய் எழுதியிருந்தார்.

அப்பாவுக்கு நிம்மதி. எப்படிச் சொல்ல என்று தவித்த தவிப்புக்கு முடிவு ஏற்பட்டுப் போன திருப்தி.

சசிக்கு இலேசாய் மனசுக்குள் நெருடிற்று. தங்கை... எப்படி இப்படித் தோன்றும்? அந்த உறவின் தண்டவாளத்தில் எதுவுமே போகாத போது. எல்லாமே வேறு திசையில் போய்க் கொண்டிருந்த போது... அந்தப் பார்வையை நினைத்ததும் மனசில் இலேசாக அருவருப்புத் தோன்றியது.

"உங்ககிட்டே பேசணும் விஜய்."

விஜய் சின்னக் கண்களை உயர்த்திப் பார்த்தான். ஷர்ட் மணிக்கட்டை விலக்கி மணி பார்த்தான்.

"ஓ.கே. ஹோட்டலுக்குப் போவோமா?"

"உம்..."

ஹோட்டலில் கூட்டமில்லாத இடத்தில் உட்கார, மனத்தில் கேள்வி எழும்பிற்று. இவனிடம் கேட்டுவிடுவது நல்லதா? ஏன் அப்படிச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் 'தங்கை' என்றாய்? என்றால் என்ன சொல்வான்?

"என்ன சாப்பிடறீங்க?"

"எனிதிங்."

அவனே மெனு-கார்டைப் பார்த்துச் சர்வரிடம் சொன்னான். கைகளை மேஜைக்கு மேல் வைத்து விரல்களைப் பின்னிக் கொண்டான்.

"சொல்லுங்க."

சசி உதட்டை ஈரப்படுத்திக் கொண்டாள். ஏ.ஸி. குளிரில் உடல் மேலும் ஜில்லென்று ஆனது.

"நீங்க விருப்பமில்லைன்னு சொல்லியிருக்கலாம். ஆனா... தங்கச்சி, அது, இதுன்னு சொன்னது ரொம்ப நாடகத்தனமா இருந்துச்சு. அப்படி ஒரு எண்ணம் ஏற்படக்கூடிய சூழ்நிலைல நம்மளை நம்ம அப்பா அம்மா வைக்கலை..."

சர்வர் ரசவடையைக் கொண்டு வந்து மேஜையில் வைத்தான். விஜய் அந்த இருட்டான வெளிச்சத்தில் அவள் கண்களை ஆச்சரியத்துடன் நேராகப் பார்த்தான்.

"நான் அப்படிச் சொல்லலை சசி. நீங்க எனக்கு ஏத்த பொண்ணில்லைன்னு தோணிச்சு. எனக்கு மேனேஜிங் திறமை உள்ள பொண்ணு வேணும்ப்பா. இந்தப் பொண்ணில்லைன்னு சொன்னேன்."

"சங்கரன் மாமா அப்படி எழுதியிருந்தார்."

"ஃபோன் பேசறப்போ உங்களைப் பார்த்தது கண்ணாலயாவது — 'கவலைப் படாதீங்க. எனக்கும் சம்மதமில்லை'ன்னு சொல்ல நினைச்சுத்தான் சசி. ஆனா, நீங்க பயந்திட்டீங்கன்னு நினைக்கிறேன். சாப்பிடுங்க சசி."

சசி ஒன்றும் புரியாமல் ஸ்பூனால் வடையைப் பிய்த்தாள். விஜய் படபடப்பாய்த் தண்ணீர் குடித்தான்.

"அப்பா அப்படி எழுதினார்னு தெரியாது சசி. உங்க மனசு புரியுது எனக்கு. பேசின பிறகு எல்லாமே தெளிவாயிடுத்து சசி."

விஜய் நாப்கினில் கையைத் துடைத்துக் கொண்டான். கிளம்புவோமா என்கிற பாவனையில் கண்ணை உயர்த்திக் கேட்டு, குடையை எடுத்துக் கொண்டு நடந்தான். வெளியே வந்தபோது வெளிச்சமாயிருந்தது. விஜய் ஸ்நேகமாய்க் குடையை நீட்டினான்.

"வோ... வரட்டுமா...? ஒரு நாள் வீட்டுக்கு வாங்க சசி."

"இனிமே என்னால வர முடியும் விஜய். மனசு சகஜமாயிடுச்சு. வீட்டுக்கு வந்தால் சங்கோஜமா இருக்காது."

அடுத்த இதழில்

●● நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு என்ன காரணம்?

●● ஓரிடத்தில் கூட வெற்றி பெறாத தி.மு.க. மத்திய அமைச்சரவையில் இடம்பெறலாமா?

●● டி.ஜி.பி. ரங்கசாமி மாற்றப்பட்டதேன்? கட்சிக்காரர்களின் தலையீடா?

— இப்படி ஏராளமான கேள்விகளுக்கு முதல்வர் கலைஞரின் சிறப்புப் பேட்டி...



வில்லனை தாராயோ? 12

இப்போதுதான் படிக்கத் துவங்குகிற தாமதக்காரர்களுக்காக, இதுவரை நிகழ்ந்த கதையின் கருக்:

வந்தனா படித்தவள். மிடில் கிளாஸ். அண்ணன், தங்கை, அம்மா, அண்ணி, அண்ணியின் குழந்தை கொண்ட குடும்பம். வந்தனா சுதந்திர டைப். தன்மானம் அதிகம். ஆண்கள் மேல் வெறுப்பு கொண்டவள். சென்னை ரேடியோவில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பகுதி நேரப் பணிபுரியும் அவள் தொழிலதிபர் அரவிந்தைப் பேட்டி காண்கிறாள். அரவிந்த் பணத்தைத் தூக்கும் கும்பலில் மாறுபட்டவன். பெண்ணை மதிப்பவன். அரவிந்திற்கு வந்தனாவைப் பிடித்து விடுகிறது. அவளுக்குத் தன் அலுவலகத்திலேயே வேலை போட்டுத் தருவதோடு, சில சலுகைகளும் செய்ய முன்வருகிறான். 'உன் தகுதிக்குப் பொருந்தாதவள்' என்று நண்பன் கிருஷ்ணன் சொல்வதைப் பொருட்படுத்தாமல் வந்தனாவை மணக்க விரும்பி, ஒரு மாலையில் அவளை அறைக்கு அழைத்துக் கண்ணியமாகத் தன் விருப்பத்தைச் சொல்கிறான். இந்த நோக்கத்தோடுதான் தனக்கு வேலை போட்டுக் கொடுத்தான் என்று யோசிக்க, வந்தனாவின் தன்மானம் சூடேற, மறுநாள் தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் பழைய வேலையைத் தொடர்கிறாள். 'அவளை அடைய வேண்டுமென்றால் என் யோசனையைக் கேள்' என்கிறான் நண்பன் கிருஷ்ணன்.

"என்ன சொல்றே நீ?" என்றான் அரவிந்த்.

கிருஷ்ணன் உடனே எழுந்து கொண்டு, "இரு. இந்த மாதிரி விஷயமெல்லாம் பூமில நின்னு பேசக் கூடாது. மிதந்துக்கிட்டுப் பேசணும். வர்றேன் இரு." என்று இறங்கிச் சென்று தனது பைக் சைடு பாக்ஸில் இருந்து அந்த வெளிநாட்டு விஸ்கி பாட்டிலை எடுத்துக் கொண்டு மீண்டும் மாடிக்கு வந்தான்.

"ஒரு கஸ்ட்டமர் கொடுத்தார்" என்றவன் ரெஃப்ரிஜிரேட்டரைத் திறந்து ஐஸ் வாட்டர் எடுத்தான். இரண்டு டம்ளர்கள் எடுத்து வந்து அவனே கலந்தான்.

"டேய்! எதுக்குடா இப்ப இது!" என்றானேயொழிய அரவிந்த் முழு மனத்துடன் மறுக்க முன்வரவில்லை. எதிலாவது தன் மனநிலையை ஒளித்துக் கொள்ள வேண்டுமென்று இருந்தது.

பட்டுக்கோட்டை பிரபாகர்

"பிடி, குடி, அப்புறம் சொல்றேன்."

வாங்கிக் கொண்ட அரவிந்த் கடகடவென்று குடித்தான். கிருஷ்ணன் கீழே சமையலறைக்குச் சென்று தட்டில் மிக்சர் கொட்டி எடுத்து வந்தான். "எதாச்சும் வாங்கிட்டு வரச் சொல்லலாம்னு பார்த்தேன். எல்லாரும் போய்ட்டாங்க."

"ஆறு மணியானா எல்லாரும் போய்டுவாங்க கிருஷ்." என்றான் இலேசாகப் போதையை உணர ஆரம்பித்தான். எதிரே கிருஷ்ணன் பிடித்திருப்பது ஒரு கிளாஸா இரண்டு கிளாஸா?

இரண்டாவது ரவுண்டு இரண்டு பேருக்கும் ஊற்றிக் கொண்டு கிருஷ்ணன் சொன்னான், "அரவிந்த், உனக்கு வியாபார விஷயத்தில மட்டும்தான் மூளை பிரமாதமா வேலை செய்யுது. பலான விஷயங்கள்ல நீ எல்.கே.ஜி. கூடத் தாண்டலை கண்ணா."

"ஏன் அப்படிச் சொல்றே?"

"உனக்கு லேடீஸ் சைக்காலஜி தெரியலையே. ஒரு மாசம் உன் ஆபீஸ்ல வேலை பார்த்தவளை உன்னால மடக்கிப் போட முடியலையே."

"எனக்கு அவளோட இயல்பான சம்மதம் வேணும்னு விரும்புறேன் கிருஷ்..."

"உன் தலை! சரி, அதுக்குத்தான் என்ன முயற்சி செஞ்சே?"

"பக்குவமா மனசைத் திறந்து பேசினேன்."

"வெண்டைக்காய் மாதிரி வழவழன்னு. 'வரம் கொடு சாமி'ன்னு கோயில்ல வேண்டற மாதிரி, மண்டி போடாத குறையா வேண்டியிருக்கே. அதான் தப்புன்னு சொல்றேன். பொம்பளைங்களுக்கு எப்பவுமே கெஞ்சற ஆம்பளையைவிட, கொஞ்சற ஆம்பளையைத்தான் பிடிக்கும். நீ முழம் முழமா டயலாக் அடிச்சதுக்குப் பதிலா இன்னொரு காரியம் செஞ்சிருந்தேன்னு வையி — இந்நேரம் அவ சரண்டர் ஆகி உன் காலடில விழுந்திருப்பா. மிஸ் பண்ணிட்டே மச்சான்."

"என்ன செஞ்சிருக்கணுங்கறே?"

"வந்தனா, ஐ லவ் யூ — ன்னு சடார்னு சொல்லி, அவ முகத்துல திகைப்பு மாறக் கூட அவகாசம் கொடுக்காம, சட்டுன்னு இருக்கமா கட்டிப் பிடிச்சு உதட்டில அழுத்தமா ஒரு முத்தம் கொடுத்திருக்கணும். அவ சர்வ நாடியும் ஒடுங்கியிருப்பா. அவ துள்ளல் எல்லாம் அவுந்திருக்கும்."

"போடா முட்டாள்! கன்னத்தில அறைஞ்சு, சத்தம் போட்டு மானத்தை வாங்கியிருப்பா."

''நோ! அங்கதான் நீ தப்பு பண்றே பையா. ஒரு பொண்ணு ஒருத்தன் தன்னை முத்தமிட்டுட்டான்னு வெளில சொன்னா யாருக்கு அவமானம்னு யோசிப்பா. ரொம்ப யோசிக்கிற வர்க்கம் அது. ஜாக்கிரதை! உணர்ச்சி அதிகம். அதனால உள்ளுக்குள்ளே குமுறுவா. ஆனா வெளில சொல்ல மாட்டா. தனிமைல யோசிக்கிறப்போ உன் மேல கோபம் வரும். ஆனாலும் மனசு உள்ளூர அந்த முத்தத்தை ரசிக்கும். மற்றொரு அனுபவத்துக்கு ஏங்கும். ஒரு இருண்ட வீட்ல மெயின் சுவிட்சைப் போட்டா வீடு பூரா விளக்கெரிய வைக்க முடியும் இல்லையா? அந்த மாதிரி அந்த முத்தத்துக்கு அவளுக்குள்ளே செயின் ரியாக்ஷன் ரகசியமா நடக்கும். அவ விரும்பினாலும், விரும்பாட்டாலும் அந்த முத்தத்தை அடிமனசு நினைச்சு உருகும். அது ஏற்படுத்தற கிளர்ச்சி அடுத்தடுத்த ஏக்கங்களை உற்பத்தி பண்ணும். அது கோபத்தைக் கழுவித் தள்ளிடும். முத்தம் கொடுத்தவனை அந்தரங்கமா நேசிக்க வைக்கும். ஒரு கன்னிப் பொண்ணுக்குக் கொடுக்கற முத்தத்தில இவ்வளவு பின் விளைவுகள் இருக்கு மச்சான். நீ என்னடான்னா மூஞ்சையே நிமிர்ந்து பார்க்காம 'யோசிச்சு சொல்லு — அடுத்த மாசம் சொல்லு'ன்னு கடன் கேக்கறவன் மாதிரி கெஞ்சினா, அவ இப்படித்தான் அலட்சியம் செய்வா.''

அரவிந்த் போதையின் ஆக்ரமிப்பில் கிருஷ்ணன் சொல்வதெல்லாம் சரிதானே என்று யோசிக்கத் துவங்கினான்.

''இன்னொரு லார்ஜ் ஊத்து.''

கிருஷ்ணன் மேலும், மேலும் ஊற்றி... அரவிந்த் நான்காவது ரவுண்டில் முற்றிலும் போதையேறி எழுந்து நின்று, ''கிருஷ்ணா, இந்த விஷயத்தில நான் தோத்துட்டேன். நான் தோத்துட்டேன்'' என்று புலம்ப ஆரம்பித்தான்.

''உக்காரு முதல்ல. புலம்பாதே. இது தற்காலிகத் தோல்வி. இப்பவும் ஒண்ணும் கெட்டுடலை. நீ வந்தனாவைக் கல்யாணம் பண்ணிண்டே ஆகணுமான்னு உறுதியாச் சொல்லு...''

''ஆமாம், ஆமாம். கிருஷ். அவளை நான் லவ் பண்றேன். ரொம்ப ரொம்ப லவ் பண்றேன்.''

''அவதான் உன்னை அலட்சியப்படுத்தறாளே...!''

''அந்த அலட்சியம் எனக்குப் பிடிச்சிருக்கே கிருஷ்ணா. அவ எது செஞ்சாலும், எது பேசினாலும் அவளை ரசிக்கச் சொல்லுதேயொழிய — கோபப்படச் சொல்லலையே மனசு.''

''ரைட். கடைசி கடைசியா ஒரு தடவை அவளைக் கேட்டுடறியா? நான் சொன்ன வழியைக் கடைப்பிடிக்கிறியா?''

''அவதான் வேலையை ராஜினாமா செஞ்சுட்டாளே... இனிமே எங்கேடா சந்திக்க முடியும்?''

''முடியும். இந்த ரூம்லயே சந்திக்கலாம். இப்பவே சந்திக்கலாம். நான் ஏற்பாடு செய்யறேன்.''

''வந்தனா இங்கே வருவாளா? ப்ளீஸ்... அவளை வரச் சொல்லுடா... நான் என்ன தப்பு செஞ்சேன்னு கேட்கணும். எதுக்காக என்னைப் பிடிக்கலேன்னு கேட்கணும்.





நிருபர்: உங்களோட எதிர்கால ஆசை என்ன?

நடிகை: எலிசபெத் டெய்லர்கிட்டே என் டிரஸ்ஸை எல்லாம் தைக்கக் கொடுத்து வாங்கணுங்கறதுதான்!

— ஷோபனா வெங்கட்ராமன்.

நான் ஏதாச்சும் தப்பாப் பேசியிருந்தால் அவ கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்கக் கூடத் தயாரா இருக்கேண்டா.''

''பார்த்தியா, பழையபடி உன் ட்ராக்ல போய்ட்டியே...''

''கிருஷ், யாரும் என்னை வெறுக்கக் கூடாதுடா. குறிப்பா வந்தனா என்னை வெறுக்கக் கூடாது. நான் அவ மேல உயிரையே வச்சிருக்கேன். போ! போடா! சொல்லுடா! என்னைப் பத்திச் சொல்லுடா! அவளைக் கூட்டிக்கிட்டு வா! இப்பவே கூட்டிக்கிட்டு வா...'' — கத்த ஆரம்பித்தான் அரவிந்த்.

''உனக்குக் கொஞ்சம் ஓவராய்டுச்சி. அப்படியே படு. சொல்றேன்.''

''அவளைக் கூட்டிக்கிட்டு வர்றியா, நான் கேட்கணும். என்ன தப்பு செஞ்சேன்னு கேட்கணும். ப்ளீஸ் வந்தனா, என்னை விட்டு விலகாதே. உன் மேல நான்...''

நான்கு ரவுண்டு உள்ளே இறங்கியிருந்தாலும் ஸ்டெடியாக, நல்ல மனநிலையில் இருந்த கிருஷ்ணன் சில நிமிடங்கள் நகம் கடித்துக் கொண்டு யோசித்தான்.

பிறகு டெலிபோனை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, ''அரவிந்த், வந்தனா வேலை பார்த்த கடை போன் நம்பர் என்ன? அவங்ககிட்டே வந்தனா வீட்டுக்குப் பக்கத்தில ஏதாச்சும் போன் நம்பர் இருக்கான்னு கேட்கலாம்,'' என்றான் கிருஷ்ணன்.

மனப்பாடமாகச் சொன்னான் அரவிந்த்.

''ஹலோ, குப்தா பேசறேன்.''

''வணக்கம் சார். உங்க கடையில வேலை பார்த்தாங்களே மிஸ். வந்தனா, அவங்க வீட்டுக்குப் பக்கத்திலே ஏதாச்சும் போன் இருக்கா?''

''எதுக்கு?''

''முக்கியமா அவங்ககூடப் பேசணும். அரவிந்த்னு பேரு. அவங்களுக்குத் தெரிஞ்சவன் நான்.''

''வந்தனா இப்ப நம்ம கடையிலதான் வேலை பார்க்குது. கூப்புடறேன். பேசுங்க சார்.''

கிருஷ்ணன் 'அட!' என்று வியந்தான்.

''ஹலோ, வந்தனா பேசறேன் — யாரு?''

''நான் கிருஷ்ணன் பேசறேங்க. அரவிந்த் வீட்டிலேர்ந்து பேசறேன். நீங்க பாட்டுக்கு அலட்சியமா ராஜினாமா லெட்டர் கொடுத்துட்டுப் போய்ட்டீங்க. இங்கே என்ன நடந்துச்சுன்னு தெரியுமா? சரியான கோழைங்க அவன்! ஆபீஸ்லேர்ந்து வீட்டுக்கு வந்து விஷத்தைக் குடிச்சுட்டான். நான் யதேச்சையா வந்தவன் பார்க்கலைன்னா ஆள் காலி. உடனே டாக்டரைக் கூப்பிட்டு அவனை வாந்தி எடுக்க வச்சு, ஒரே அமர்க்களமாயிடுச்சு. மயக்கமானவன் இப்பத்தான் கண்ணைத் திறந்து பார்க்கிறான். உங்களை

சர்வாதிகாரத் துணைவி



ருமேனியாவின் முந்நாள் அதிபர் சௌசெஸ்குவின் மனைவி எலெனா அந்நாட்டையே தம் இரும்புப் பிடிக்குள் வைத்திருந்து ஆட்டிப் படைத்தவர். அவர் கையாண்ட சில வழிமுறைகள்:

ருமேனிய உயர் அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் விலைமாதர்களைக் கொண்டு வலை விரிக்கச் செய்து, அந்தரங்கமான வேளைகளில் அவர்களை வீடியோ எடுத்து, அப் படங்களைக் கொண்டு அவர்களை பிளாக் மெயில் செய்ததோடு தம்முடைய கீழ்த்தரமான உணர்ச்சிகளையும் திருப்தி செய்து கொண்டார்.

ருமேனியாவின் விஞ்ஞான, தொழில் நுட்பக் கமிஷனின் தலைவர் பதவியை வகித்த எலெனா சௌசெஸ்கு, தபால் தலைகள் சேகரிப்பது போல் கௌரவ டாக்டர் பட்டங்களைச் சேகரித்தார்! இவை

உடனே பார்க்கணுமாம். என்னமோ சொல்லணுமாம். ப்ளீஸ், கொஞ்சம் வந்துட்டுப் போறீங்களா?''

எதிர்முனை மௌனமாக இருந்தது.

''நான் வேணும்னா கார் எடுத்துக்கிட்டு வந்து உங்களை 'பிக்கப்' பண்ணிக்கிட்டு வரட்டுமா? பத்தே நிமிஷத்தில நானே கொண்டாந்து விட்டுடறேன். உங்களை நினைச்சு விஷம் குடிச்சவன் கூப்பிடறான். மன்னிப்புக் கேட்கணும்னு சொல்றான்.''

எதிர்முனை மௌனம் சாதித்தது.

''சொல்லச் சொன்னான். சொல்லிட்டேன். வச்சுடட்டுமா?''

''வர்றேன்னு சொல்லுங்க.''

ரிசீவரைவைத்துவிட்டு அரவிந்தைப்பார்த்தான் கிருஷ்ணன். ''கை கொடுடா. வர்றா. இப்பவே வர்றா. உன் மேல கொஞ்சங்கூட ஆசை இல்லைன்னா அவ செத்தா எனக்கென்ன, பிழைச்சா எனக்கென்னன்னு பேசி வச்சிருப்பா.

''டேய், என்னென்னவோ பொய் சொன்னியே, ஏண்டா?''

''ஆயிரம் பொய் சொல்லிக் கல்யாணம் செய்யலாம்னா, ஒரு பொய் சொல்லி நான் காதல் ஏற்படுத்தக் கூடாதா? இந்தா, இன்னும் கொஞ்சம் ஊத்திக்கோ. நான் சொன்னதெல்லாம் மனசில வச்சிக்கோ. இரும்பு சூடா இருக்கிறப்போ அடிச்சாத்தான் வளையும். இப்ப அவ உன் மேல ஒருவித இரக்க உணர்வோட வர்றா. இந்தச் சந்தர்ப்பத்தை விட்டுடாதே. அவளை அப்படியே கட்டிப் பிடிச்சு...''

''டே... டேய்! அதெல்லாம் தப்புடா'' என்றானேயொழிய... போதை அரவிந்தைக் காரணமின்றி அகலமாகச் சிரிக்க வைத்தது.

ஆட்டோவில் இருந்து இறங்கி லேசான பதற்றத்துடன் வந்தனா வீட்டின் ஹாலுக்குள் வந்த போது, அங்கே கன்னத்தில் கைதாங்கிச் சோகமயமாக அமர்ந்திருந்த கிருஷ்ணன் தன் நிலையை மாற்றிக் கொள்ளாமல், ''வாங்க... மாடில இருக்கான். போய்ப் பாருங்க,'' என்றான்.

வந்தனா கலக்கமான மனத்துடன் படியேறினாள். எவ்வளவு பெரிய தொழில் அதிபன் இவன். இப்படியா கோழைத்தனமாகச் செயல்படுவான்? நான் நிராகரித்ததற்காக விஷமே குடித்தான் என்றால்... அந்த அளவிற்கா என்மேல் ஆசையை வளர்த்து வந்திருக்கிறான்...! என்ன இருந்தாலும் தற்கொலையா முடிவு?

ஆறுதல் சொல்ல வேண்டும்.

வந்தனா மாடியில் அரவிந்தின் அறைக்குள் வந்தபோது லேசாக ஆல்கஹால் வாடை உணர்ந்தாள். படுக்கையில் அரவிந்த் தோள் வரை போர்த்திக் கொண்டு படுத்திருந்தான்.

''சார்'' என்று அழைத்துக் கொண்டே அவனை நெருங்க, விஸ்கி வாடை அதிகமாகி அவள் மூக்கைச் சுளிக்க வேண்டியதாயிருந்தது.

''வா, வந்தனா'' என்று எழுந்து அமர்ந்த அரவிந்தின் கண்கள் சிவந்திருந்தன. அவனிடமிருந்துதான் வாடை வருகிறது என்று அவள் உணர்ந்த சமயம் அவன் எழுந்தான், ''நீ என்னை எத்தனை அலட்சியப் படுத்தினாலும் சரி, வந்தனா, ஐ லவ் யூ! ஐ லவ் யூ வெரி மச்'' என்றவன் சட்டென்று தாவி அவளை மூர்க்கமாக அணைத்தான்.

(தொடரும்)

வற்புறுத்தியோ, மிரட்டியோ பெறப்பட்டவை என்பதைக் கூறத் தேவையில்லை.

பிறரைக் கொண்டு எழுதச் செய்து, தாமே எழுதியது போல் இவர் வெளியிட்ட விஞ்ஞான நூல்கள் ருமேனிய நூல் நிலையங்களிலெல்லாம் இடம் பெற்றிருந்தன!

'சோஷியல் இஞ்ஜினியரிங்' என்று 'கௌரவமாக' அழைக்கப்பட்ட சமுதாய வளர்ச்சிப் பணியே அவருக்கு மிகப் பிடித்தமான பொழுது போக்கு. இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் ருமேனிய ஜனத்தொகையை முப்பது மில்லியனுக்கு உயர்த்தும் நோக்குடன் குடும்பக் கட்டுப்பாடே சட்ட விரோதமானது என்று அறிவித்து விட்டார் இந்தச் சர்வாதிகாரி! இதற்காகவே பல அமைப்புக்களை ஏற்படுத்தி, கர்ப்பம் தரிக்கக்கூடிய வயதுப் பெண்களையெல்லாம் ஒவ்வொரு மாதமும் பரிசோதிக்கச் செய்தார் — சட்ட விரோதமாக கர்ப்பத் தடை சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்று!

குடிகாரனும் ஸ்திரீலோலனுமான தம் மகன் 'நிகு'வை வாரிசாக உருவாக்கி வந்தார்.

பாரிஸ் நகரில் இருந்த ருமேனிய தூதரகத்து அதிகாரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கினார் எலெனா. அந்த ஃபாஷன் தலைநகரிலிருந்து சதா சர்வ காலமும் நகைகளும், உயர் ரகத் துணி வகைகளும் விரிப்புகளும் வாங்கி அனுப்பப் பணித்துக் கொண்டேயிருந்தார்.

பதினாறு தேவாலயங்கள், மூன்று மடாலயங்கள் நூற்றுக்கணக்கான வீடுகள் ஆகியவற்றைத் தரைமட்டமாக்கி விட்டு புகாரெஸ்டில் ஓர் அரண்மனையும் சோஷலிஸ வெற்றி நினைவுச் சின்னமும் கட்ட ஏற்பாடு செய்தார்.

விவசாயிகளையெல்லாம் குடிபெயர்த்து, கான்கிரீட் காடுகளாய் விளங்கிய தொழில் நகரங்களில் குடியமர்த்தினார்.

இந்த நூற்றாண்டின் மிகக் கொடிய பெண் சர்வாதிகாரி என்ற பட்டத்துக்கு எல்லா வகையிலும் தகுதியுடையவராய்த் தம்மை வளர்த்துக் கொண்டார்! ருமேனிய மக்கள் கிளர்ந்தெழுந்ததில் வியப்பென்ன...!

நன்றி: **ஹிந்துஸ்தான் டைம்ஸ்**

அறிவுரை, கோரிக்கை, எச்சரிக்கை!

வட்டமேஜை

நயம், நாசூக்கு, ஞானம்!

* இவ்வாரக் கல்கியில் வெளியாகியிருந்த 'மனப் பொருத்தம்' — ஒரு பக்கச் சிறுகதையானாலும், பெரிய message-ஐத் தாங்கியிருந்தது. சேலைக்குக் 'காண்ட்ராஸ்ட்'டாக பிளவுஸ் மேட்சிங் போடுவது போல, மாறுபட்ட குணங்களைக் கொண்டவர்களும் மனப் பொருத்தமுடையவர்களாக வாழ முடியும் என்ற கருத்தை மிக அழகாகச் சொல்லியுள்ளார் பானு குமார். பாராட்டுக்கள்.

மன்னார்குடி — 1. எஸ். ராஜேந்திரன்.

* வணக்கம் பல. 'சுதந்திரத்தை நோக்கி' என்பது ஒரு சின்னஞ்சிறு கதை தான். என்றாலும் நிறைந்த கற்பனையை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டது. எதிர்காலம் எப்படி எல்லாம் இருக்கும் என்பதை நன்கு காட்டியது.

சென்னை — 19. ஆர்.வி. சுப்பிரமணியன்.

* ஆர். சூடாமணியின் 'ஒரு வெள்ளி மோதிரம்' சிறுகதை தரத்தில் தங்கம்! மனிதர்களின் மனோபா வங்களை நன்கு படம் பிடித்துக் காட்டியது. அத் துடன், அன்பை விட இந்த உலகில் பணத்துக்கு இருக்கும் அளவுக்கதிகமான மதிப்பையும் உணர்த் தியது.

வடுகவிருட்சியூர். ஆர். அமுதா.

* கருணையின் பிறப்பிடமான மதர்தெரசாவின் உடல் நிலை கண்டு உலகே கவலை கொண்டிருக் கின்ற வேளையில், அவருக்கு அளிக்கப்பட்டுள்ள சிகிச்சையில் பயன்படுத்தப்பட்டுள்ள பேஸ்மேக்கர் எனும் கருவி குறித்துத் தெளிவாக விளக்கி வெளி யிட்டமைக்கு நன்றி.

குடியாத்தம் — 1. ஏ. உமாசங்கர்.

* 'கல்கி' 31.12.89 ஆம் தேதி இரண்டாம் பக்கம் அட்டையில் 1990 ஆம் ஆண்டின் வண்ண காலண்டர் சூபர்ப். நானே படகில் அமர்ந்து இயற்கை காட்சி களைக் கண்டு களிப்பது போல் உள்ளது. ஆனால் அது எந்த ஊர்க் காட்சி என்று தெரியவில்லையே....

குடியாத்தம் — 1. கே.ஆர். ராஜா.

* இயற்கை எழில் கொஞ்சும் வண்ணப்படத்தை உள் அட்டையில் காலண்டராக வெளியிட்டு, அதைப் பத்திரப்படுத்த வேறு சொல்லியுள்ளீர்கள். அது சரி, அப்படியென்றால் முன் அட்டையில் மழலையின் படம் சிம்லாவின் குளுமையைக் கண்ட திருப்தியைத் தந்து விட்டது சார்.... எந்தப் பக்கத்தை மாட்டி வைப்பது என்ற குழப்ப நிலைக்கு ஆளாகிப்போனேன்!

குடியாத்தம் — 1. ஏ. உமாசங்கர்.

* 'குழந்தைகளுக்கும் உரிமைகள் உண்டு' — கவர் ஸ்டோரி பலரைச் சிந்திக்கத் தூண்டுவதாக அமைந் தது. குதூகலத்துடன் இருந்த குழந்தைகள் புகைப் படம் மிகவும் அருமை. குழந்தைகள் நலத்துக்கெனக் கட்டுரையில் கூறப்பட்டது போல, ஓர் அமைப்பு நிச்சயம் தேவை.

சென்னை — 5. எஸ்.வி. ராஜசேகர்.

* எம்.பிக்கள் பற்றியக் கட்டுரை, வெறும் செய்தி வடிவில் இல்லாமல், அறிவுரையாகவும், கோரிக்கை யாகவும், எச்சரிக்கையாகவும் அமைந்த விதம் பாராட் டுக்குரியது.

திருக்கடையூர். ஜி.கே. ராஜு.

* பாராளுமன்ற நூலகத்தைப் பயன்படுத்துவது இருக்கட்டும்; கல்கியின் மூன்று பக்கக் கட்டுரையைப் படித்தாலே தமிழக எம்.பிக்கள் ஓரளவு பிரகாசிக் கலாமே. ஆனால், அவர்களுக்கு இதற்கு ஏது நேரம்? கட்சித் தலைமையைத் திருப்தி படுத்த அறிக்கைகள் கொடுப்பதிலும், தலைமை ஓடி விடாமல் இருக்க பிரயத்தனப்படுவதிலும் அவர்கள் முனைப்பாக இருக்கும் போது?

குடியாத்தம். கே.வி.எஸ். மணியன்.

* உயிர்த்தப்பி வந்த மீனவரின் அனுபவங்களைப் படித்த போது, 'கரை மேல் பிறக்க வைத்தான், எங்களைக் கண்ணீரில் மிதக்க வைத்தான்' என்ற பாடல் வரிகள் நினைவில் மோதி, வருத்த அலைகளை உண்டாக்கின....

காட்டூர். எஸ். அருள்மொழி.

* சங்கீத சங்கதிகளில் என்பீல்ட் விசுவநாதன் கூறி யுள்ளது வரவேற்க வேண்டிய விஷயம். பெருவாரி யான கூட்டத்தையும், கைதட்டல்களையும் எதிர் பாராமல், கலைஞர்கள் மக்களிடையே ரசிப்புத் திறமையை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும்.

துடுப்பதி. தங்கவேலு.

* பாராட்டவேண்டிய பாராளுமன்ற வெற்றியைப் பெருந்தன்மையோடு மனம் திறந்து பாராட்டிய நயம்; வெற்றிக்குள் புதைந்து மறந்து போகாமல் இருக்க வேண்டியது எம்.ஜி.ஆரின் செல்வாக்கே என்று இடித்துக் கூறிய நாசூக்கு; இனி ஜெயலலிதா செய்ய வேண்டியது என்ன என்று எடுத்துக் கூறிய ஞானம்.... தலையங்கமாகத் தெரியவில்லை — நாட்டின் தலை யெழுத்தைச் சரிபண்ணும் மூலிகை என்றே எண்ணத் தோன்றியது தலையங்கத்தை — உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை.....

தூத்துக்குடி — 5. வி. ரவி.

* 'ஒரு நாள் துறவு' தலையங்கம், இன்றைய அ.இ.அ.தி.மு.க. மற்றும் ஜெயலலிதாவின் வேடிக்கைத்தான அரசியலைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. ஜெய லலிதா பத்திரிகையாளர்களை மட்டும் முட்டாளாக் கவில்லை, ஒட்டுமொத்தமாகத் தமிழக மக்களையே முட்டாளாக்கப் பார்க்கிறார்!


கொரட்டூர். சங்கரநாராயணன்.

* "வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி யில்லை" என்ற கவிஞர் வாக்கைத் தம் ஒரு நாள் துறவு மூலம் மீண்டும் நிரூபித்து விட்டார் ஜெ.

தஞ்சாவூர் — 1. தியாகஜோதிராமலிங்கம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

ஐடிபிஐ-முதலீட்டுப் பத்திரங்கள்
முதலீட்டு ஆதாய வரி விலக்குப் பெற ஒரு கவர்ந்திடும் வழி



Sobhagya-B/89 TAM

- ஆண்டு முழுவதும் சமநிலையில் கிடைக்கும்.
- வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண் 54E-ன் கீழ் முதலீட்டு ஆதாய வரி விலக்கு.
- செல்வ வரிச் சட்டம், 1957, பிரிவு எண் 5(1)xvie)-ன் கீழ் செல்வ வரி விலக்கு.
- வருமான வரிச் சட்டம், பிரிவு எண் 80-Lன் கீழ் வருமான வரி குறைப்பு.
- ஆண்டொன்றுக்கு 9% விகிதத்தில் ஆறு மாதத்திற்கொரு முறை வட்டி வழங்கப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால் 3 ஆண்டுகட்கான மொத்த வட்டியும் தள்ளுபடி முறையில் முன்னதாகவே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்பொழுது கழிக்கப்படமாட்டாது.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக்கொள்ளும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபிஸை அணுகுங்கள் அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்:

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலாபா, பம்பாய்-400 005.


மயக்கும் மழலை முகம்
- அளிப்பது இந்து
வாழ்வின்
வியக்க வைக்கும் வண்ணங்கள்.
நினைக்க வைக்கும் தருணங்கள்.
இந்து கலர் பிலிமில்
இவற்றை பதித்திடுவீர்.
எண்ணங்களில் என்றென்றும்
நிலைத்திடச் செய்திடுவீர்.
INDU
இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்
மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
இந்து நகர், உதகமண்டலம் 643 005.
வர்த்தகத் தலைமையகம்: பாரி டவர்ஸ்
1, அப்துல் ரசாக் தெரு, சைதாப்பேட்டை,
சென்னை 600 015.
INDUCOLOR
DX
SUPER R 100
INDU
COLOR
AR 100
36